# தமிழரசு

1-9-1992 ரூ.1



# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்





கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.



இந்தியச் சுதந்திர நாள் விழாவையொட்டி- மேதகு தமிழக ஆளுநர் திரு. பி.என். சிங் அவர்கள் 15.8.92 அன்று அளித்த தேநீர் விருந்தில்- முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி செல்வி காந்தகுமாரி பட்நாகர்- மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. கரன்சிங் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

## இந்த இதழில்...


ஒன்பதாவது குடியரசுத் துணைத் தலைவர் ... 2

பிரதமர் — முதல்வர் சந்திப்பு ... 3

சுதந்திர தின விழாவில் முதல்வர் உரை ... 4

பர்கூர் மக்களுக்கு முதல்வர் நலத்திட்ட உதவிகள் ... 9

ராஜீவ்: வாழ்க்கை வரலாறு ... 11

ஓட்டுநர்களும் குடிப் பழக்கமும் ... 17

விநாயகம்: மாதிரி கிராமம் ... 19

தமிழ்த்தென்றல் திரு.வி.க. ... 24

மதுவினால் ஏற்படும் மலிவான மரணங்கள் ... 27

எண்ணெய்ப்பனை ஆராய்ச்சி ... 30

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. ... 33

தொழிலாளர் நலம் பெறட்டும் (கவிதை)... 39

பரிபூரண மதுவிலக்குக் கொள்கை ... 43

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட மக்களுக்கு முதல்வர் உதவிகள் ... 46



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

ஆவணித் திங்கள் - 16

மலர்:23 இதழ்:5

1-9-1992



# இந்தியாவின் ஒன்பதாவது குடியரசுத் துணைத் தலைவர்

இந்தியாவின் 9-ஆவது குடியரசுத் துணைத் தலைவராக திரு. கே.ஆர். நாராயணன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. கே.ஆர். நாராயணன் 4.2.1921 அன்று கேரளாவில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். பல்வேறு சோதனைகளைக் கடந்து பொருளாதாரத்தில் முதல் வகுப்பில் தேறிப் பட்டம் பெற்றார். திருவாங்கூர் பல்கலைக்கழகப் பேராசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர் சில ஆங்கிலப் பத்திரிகைகளில் பணிபுரிந்தார்.

நாடு சுதந்திரம் அடைந்தபின், இலண்டனில் இவரை இந்தியத் தூதரக அதிகாரியாக பண்டித நேரு நியமித்தார். இதைத் தொடர்ந்து தாய்லாந்து, துருக்கி, ரங்கூன், டோக்கியோ, ஆஸ்திரேலியா, சீனா போன்ற பல்வேறு நாடுகளில் தூதராகப் பணியாற்றினார்.

இந்தியா-சீனா உறவு மிகவும் பாதிக்கப்பட்ட கால கட்டமான 1963 முதல் 1967 வரை சீனத் தூதராக இருந்தார். இந்தியா-சீனா போர் முடிந்து 15 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தூதர் உறவு ஏற்பட்டபோது, 1976-இல் இவரே மீண்டும் சீனத் தூதராகச் சென்றார்.

1978-ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத் துணை வேந்தராக நியமிக்கப்பட்டார். அதற்குப் பின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவரகள் இவரை அமெரிக்கத் தூதராக அனுப்பினார். நான்கு ஆண்டுக்காலம் அப்பதவி வகித்துவிட்டுத் தாயகம் திரும்பிய திரு. கே.ஆர். நாராயணன், அரசியலில் குதித்தார். 1984-இல் கேரளா ஒட்டப்பாலம் பாராளுமன்றத் தொகுதியில் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். இதைத் தொடர்ந்து வெளிவிவகாரத் துணை ராஜாங்க அமைச்சரானார்.

19.8.92 அன்று நடைபெற்ற குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலில் இ. காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட, திரு. கே.ஆர். நாராயணன் அவர்களை எதிர்த்துச் சுயேட்சை வேட்பாளர் திரு. ஜோகிந்தர் சிங் போட்டியிட்டார். இத் தேர்தலில் திரு. கே.ஆர். நாராயணன் மகத்தான வெற்றியடைந்தார்.

இத் தேர்தலில் 92.4 சதவிகிதம் வாக்குகள் பதிவாயின. இத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியான 768 உறுப்பினர்களில் 711 எம்.பி.-க்கள் வாக்களித்தனர். திரு. கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு 700 வாக்குகள் கிடைத்தன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. ஜோகிந்தர் சிங் அவர்களுக்கு ஒரே ஒரு ஓட்டு மட்டும் பதிவாகி இருந்தது. பத்து ஓட்டுக்கள் செல்லாதவையென அறிவிக்கப்பட்டன.

திரு. கே.ஆர். நாராயணன் குடியரசுத் துணைத் தலைவராக 21.8.1992 அன்று பதவி ஏற்றார். குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் புதிய குடியரசுத் துணைத் தலைவர் அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். புதுடெல்லி ராஷ்டிரபதி பவன் அசோக மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில், மாண்புமிகு பிரதமர், மத்திய அமைச்சர்கள், முன்னாள் பிரதமர்கள் திரு. வி.பி. சிங், திரு. சந்திரசேகர், பாராளுமன்ற சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சத்தியம் என்னும் திருக்கோவிலை அடைய விரும்புவன் அகிம்சை என்னும் நெறியில்தான் இயங்க வேண்டும்.



# பிரதமர் - முதல்வர் சந்திப்பு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை, 17.8.'92 அன்று காலை புது டெல்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தச் சந்திப்பின் போது, தமிழ்நாட்டின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமருடன் பேசினார்.

தமிழ்நாட்டிலுள்ள அனல் மின்நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்யும், தமிழக அரசின் திட்டத்துக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும், நிலக்கரி இறக்குமதிக்குச் சுங்கவரி விலக்கு அளிக்க வேண்டுமென வும் முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

உலக வங்கி நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்துக்கு அனுமதி பற்றியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார்.

கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தோடு தொடர்புடைய சென்னைக் குடிநீர் வழங்கல் விநியோகத் திட்டத்தை விரைவுபடுத்த மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலையிட வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். உலக வங்கியின் கோரிக்கைக்கிணங்க இந்தத் திட்டத்திலுள்ள சில இடையூறுகளைக் களைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் உதவ வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டில் பெருகிவரும் மின்சாரத் தேவையைச் சமாளிக்க கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். இதற்காக உள்நாட்டிலேயே கிடைக்கும் அணுமின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

தூத்துக்குடித் துறைமுகத்தைச் சுங்க தீர்வையற்ற துறைமுகமாக உருவாக்கினால் ஏற்படும் நன்மைகளை விளக்கிக் கூறிய முதல்வர், கிழக்குக் கடற்கரையில் தூத்துக்குடியில் சுங்கத் தீர்வையற்ற ஒரு துறைமுகத்தை உருவாக்க அனுமதி அளிக்குமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

அயல் நாட்டுக் கூட்டுடன், அதுவும் முக்கியமாக சிங்கப்பூர் நாட்டு ஒத்துழைப்புடன் தொழிற்சாலைகளை உருவாக்க, சென்னைக்கு அருகே சிங்கப்பூருக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் மையம் ஒன்றை அமைப்பது குறித்த திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இது தொடர்பாக பல்வேறு வசதிகளை அளிக்க சிங்கப்பூர் அரசுடன் தொடர்பு கொள்ளுமாறு மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழக அரசின் நிதிநிலை- குறிப்பாக சிறு சேமிப்புக்காக வழங்கப்பட்டுவந்த வருமான வரி விலக்கை திரும்பப் பெற்றது போன்ற விஷயங்கள் இந்த பேச்சு வார்த்தையின்போது இடம் பெற்றன.

தமிழக அரசு எதிர் நோக்கியுள்ள விசேஷ பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, சிறப்பு நிதியுதவி அளிக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.



# “மத்திய அரசோடு சுமுகமான உறவு உரிமைகளை விட்டுக்கொடுக்காத மரபு என்கிற புரட்சித்தலைவரின் அந்த வரலாற்றுப் பாதையில் நமது அரசு வீறுநடை போடுகிறது” – சுதந்திரதின விழாவில் முதல்வர் பெருமிதம்!

**தா**யகம் விடுதலை பெற்ற இந்தத் தங்கத் திருநாளைத் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் கொண்டாடும் இந்த இனியவேளையில், விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான அருமை உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொரள்கிறேன்.

பட்டொளி வீசிப் பறக்கும் பாரதத் தாயின் மணிக்கொடியை, சரித்திரப் புகழ்மிக்க இந்தக் கோட்டையில் ஏற்றி வைப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இந்த மாபெரும் வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கும் தமிழகத்துச் சான்றோர்கள், பெரியோர்கள், தாய்மார்கள் ஆகிய அனைவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்ளும் அதே நேரத்தில், எல்லோர்க்கும் என் விடுதலை நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு வேறொன்று கொள்வாரோ’ என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப, ‘பூரண சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை’ எனப் பிரகடனம் செய்து, ‘வெள்ளையனே வெளியேறு’ என வீர முழக்கமிட்டு, 50 ஆண்டுகள் நிறைவேறியதை நெஞ்சில் பதிக்கும் ஆண்டிலே, வருகின்ற விடுதலைத் திருநாள் என்பதால், இந்த நாளின் வரலாற்றுப் பெருமை இரட்டிப்பாகிறது.

**வரலாற்று நாயகர்கள்**

எந்தக் கோட்டை ஆங்கில ஆதிக்கத்தின் அதிகாரக் கோட்டையாக இருந்ததோ, அந்தக் கோட்டையில், பாரதத் தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறப்பதும், அதைப் பெருமிதத்

# விடுதலை நாள் விழா

இந்தியாவின் 46-வது விடுதலை நாள் விழா சென்னைத் தலைமைச் செயலகத்தில் 15.8.1992 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் கலந்து கொள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கோட்டையை வந்தடைந்த போது, அங்கு குழுமியிருந்த ஆயிரக் கணக்கானோரின் வாழ்த்தொலிகள் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றன.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன் அவர்கள் முப்படை அதிகாரிகள், காவல்துறைத் தலைவர், திரு. எஸ். ஸ்ரீபால், மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் - சென்னை நகர ஷெரீப், திரு. சுரேஷ் கிருஷ்ணா ஆகியோரை அறிமுகம் செய்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

சரியாக, காலை 8.30 மணிக்குக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். பட்டொளி வீசிப் பறந்த தேசியக் கொடியிலிருந்து பூமாரி பொழிய, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தேசியக் கொடிக்கு முதல்வர் அவர்கள் வணக்கம் செலுத்தினார்.

பின்பு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கோட்டைக் கொத்தளத்தில் விடுதலை நாள் சிறப்புரை ஆற்றினார்.

சிறப்புரையைத் தொடர்ந்து, முதல்வர் அவர்கள், உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள், உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி செல்வி காந்தகுமரி பட்நாகர், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், வெளி நாட்டுத் தூதுவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதலானவர்கள் பலரும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

---

தோடு நாம் பார்ப்பதும், பெருமையோடு பார்த்துப் பரவசப்படுவதும், எத்தனைச் சிறப்புக்குரியது என எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

இந்த மாபெரும் பெருமையை நமக்கு வழங்கிய வீரத்தின் விளை நிலங்களான, வரலாற்று நாயகர்களை, தியாகத்தின் திருவுருவங்களை, நன்றிப் பெருக்கோடு நான் நினைத்துப் பார்க்கிறேன்.

சுதந்திரக் காற்றை, நாம் சுவாசிப்பதற்காகத் தங்களது மூச்சை நிறுத்திக் கொண்டவர்கள், என்றென்றும் நம் இதயத்தில் நிலைத்து நிற்கிறார்கள். அவர்களது வீரத்தையும், தீரத்தையும் எண்ணிப்பார்க்கிற நாளாக, இந்த நாள் விளங்குகிறது.

இந்தத் திருநாளில் அந்தப் பெருந்தகையாளர்களுக்கு, உங்களோடு சேர்ந்து என் வீர வணக்கத்தையும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இந்த நாள், விடுதலையை வென்றெடுத்த திருநாள் மட்டுமல்ல; நாமெல்லாம் ஒன்றுபட்ட திருநாளும் கூட!

'வாழ்கின்றார் முப்பது கோடி மக்களென்றால், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்குமே' என்பதுதான் முன்பு இந்தியா இருந்த நிலை! இப்படிப் பிரிந்து பிரிந்து பேதப்பட்டுக் கிடந்த நம்மை, இணைத்துப் பிணைத்த நாள்தான், இந்தப் புனித நாள்.

**நமது தலையாய கடமை**

பெற்ற விடுதலையைப் பேணிக்காப்பதும், 'இந்தியா ஒன்றே' என்ற ஒற்றுமை உணர்வை எப்போதும் வளர்ப்பதும், நமது தலையாய கடமை, எனவேதான், நாட்டைத் துண்டாட வேண்டும் என்ற தீய உணர்வு தலைதூக்குகிற போது எல்லாம், அதை வேரோடு கிள்ளியெறியக் கிளர்ந்தெழுந்துள்ளது எங்கள் அரசு.

விடுதலை பெற்றதன் தலையாய நோக்கங்களை எய்துவதிலும் எப்போதும் முன்னணியில் இருந்து வந்துள்ளது எங்கள் அரசு.

இந்திய ஒற்றுமைக்குப் பாடுபடுவதும், நம் செந்தமிழ் நாட்டின் உரிமைக்குக் குரல் கொடுப்பதும், முரண்பட்டவை அல்ல என்றே கருதுகிறேன்.

**காவிரிப் பிரச்சினை**

தாய்த் திருநாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதில், எவருக்கும் முன்னால் நிற்கின்ற நாம், நம் மாநிலத்தின் அடிப்படை உரிமைகளைக் காப்பதிலும், மற்ற எவரைக் காட்டிலும் முன்னால் நிற்கிறோம்.

இந்த இரண்டிலுமே வெற்றி பெறுகிறோம் என்பதுதான் நமது அரசு படைத்திருக்கிற தனிப் பெருமையாகும். இந்த அடிப்படையில் அமைந்ததே காவிரிப் பிரச்சினையில் நாம் அடைந்த வெற்றி ஆகும்.

இந்த மண்ணின் உயிர்ப்பிரச்சினையும், உரிமைப் பிரச்சினையுமாகிய, காவிரி நீர்ப் பிரச்சினைக்கு, உச்சநீதிமன்றத் தீர்ப்பு நமக்குக் கிடைத்த தார்மீக வெற்றி! நமது நியாயக் குரலுக்கு நீதி செவிகொடுத்தது. நியாயம் மறந்த சில உள்ளங்கள் அதை மதிக்க மறுக்கின்றன.

தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையாகிய காவிரிப் பிரச்சினையில், உரிய வெற்றியை அடைந்தே தீருவோம்! நாம் ஈட்டிய வெற்றியின்

பலன் கிடைக்கும்வரை இப்பிரச்சினையில் நாம் ஓயமாட்டோம்; ஒதுங்க மாட்டோம் என்கிற உறுதிமொழியே இவ்விடுதலை நாளில் நாம் மேற்கொள்ளும் சபதமாகும்.

**கச்சத் தீவுப் பிரச்சினை**

இந்த மண்ணின் ஒரு பகுதியாக இருந்து, இலங்கை அரசுக்குத் தாரை வார்க்கப்பட்டுவிட்ட கச்சத்தீவை, மீண்டும் பாரதத்தோடு இணைக்க வேண்டும் என்று, கடந்த ஆண்டு இதே நேரத்தில் இதே இடத்தில் குறிப்பிட்டேன்.

அந்த என் உணர்வினை அரசின் சார்பில் நம் சட்டமன்றப் பேரவையிலேயே தீர்மானமாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். இந்திய நாட்டின் இறையாண்மை கருதியும், தமிழக மீனவரின் உரிமை காக்கவும், நாம் விடுத்திருந்த கோரிக்கைக்கு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், அதுபற்றி 'ஆழ்ந்தும் விரிவாகவும் பரிசீலிக்கிறோம்' என ஆறுதல் தரும் பதில் அனுப்பி இருக்கிறார்.

மத்திய அரசோடு சுமுகமான உறவும், நம் உரிமைகளை விட்டுக்கொடுக்காத மரபும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நமக்குக் காட்டிச் சென்ற வரலாற்றுப் பாதைகளாகும். அந்த வெற்றிப் பாதையில், நம் அரசு வீறுநடை போடுகிறது என்பதை, நான் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த தத்துவங்களைச் செயலாக்குவதே இந்த அரசின் இலட்சியம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

சுதந்திரம் என்பது அரசியல் விடுதலையோடு நின்றுவிடுவதன்று, விடுதலை பெற்ற நாடு, ஆண்டாண்டுக் காலம் அந்நியர் ஆட்சியில் இருந்து விடுபட்ட நாடு, தன் பொருளாதார சமூகக் கட்டமைப்புகளைச் சீர்படுத்திக் கொள்ளச் சிறந்த திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியது, அதன் தலையாய கடமை ஆகும்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் எங்கள் அரசு பல அரிய சாதனைகளை ஆற்றியுள்ளது. பல ஆண்டுகளாக மூடிக் கிடந்த பி அண்டு சி ஆலை, எங்களுடைய சீரிய முயற்சியால் தான் மீண்டும் திறக்கப்பட்டு, 8,000 தொழிலாளர்களின் இல்லங்களில் விளக்கேற்றி வைக்கப்பட்டுள்ளது. அதுபோலவே, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் மற்றும் கே.சி.பி. ஆலைகள், எங்கள் முயற்சியால் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

**எந்தப் பிரச்சினையானாலும்...**

கிறித்துவக் கல்லூரிப் பிரச்சினையாகட்டும், அரசு ஊழியர்கள் பிரச்சினையாகட்டும், பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினையாகட்டும், மக்கள் நலனைப் பாதிக்கின்ற எந்தப் பிரச்சினையானாலும், எங்கள் அரசு உடனடியாக அதில் தலையிட்டு, நேரிடையாகச் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி, அமைதியான வழியில் அப்பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வந்திருப்பதை, நீங்கள் அறிவீர்கள்.

தமிழகத்திலுள்ள கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்க, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கோடி ரூபாய் செலவில், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளோம். எங்கள் அரசின் புதிய தொழில் கொள்கை, பெருவாரியாக அனைவராலும் வரவேற்கப்பட்டுள்ளது. பொது வினியோகத் திட்டம், மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழகத்தில் வாழும், ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயிகள், மற்றும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு, 42 கோடி ரூபாய் செலவில், இலவசமாக சேலை-வேட்டிகளை வழங்கியது எங்கள் அரசு.

நாம் விடுதலை பெற்றதன் நோக்கமே, இவை போன்ற அடித்தளத்து மக்களுக்கு உதவும் திட்டங்களை மேற்கொள்வதும், அவர்களுக்குச் சேவை செய்வதுமே ஆகும்.



மகளிர் மேம்பாடு, இந்த அரசின் கவனத்தை எந்த அளவுக்கு ஈர்த்திருக்கிறது என்பதற்கு, நமது செயல்பாடுகளும், குறிப்பாக ஒரு இலட்சம் மகளிருக்கு வேலைவாய்ப்பு என்னும் திட்டமும், ஏற்ற எடுத்துக்காட்டுகளாகும்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள், இவர்கள் நலம் காக்க, ஒவ்வொரு துறையிலும் அவர்கள் உயர்ந்து விளங்க, அரசு அரிய பல முயற்சிகளை எடுத்து வருகிறது.

**புதியதோர் புரட்சி**

இதுவரை எந்த அரசும் செய்ய முன்வராத புரட்சியாக, ஆதிதிராவிடர்களுக்கென முதன் முறையாக, 200 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டைகளை, கோவை, பெரியார் மாவட்டங்களில் அமைக்க, எங்கள் அரசுதான் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதுபோலவே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் வளர்ச்சியிலும் அரசு ஆர்வத்தோடு திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

மண்டல் குழுவின் பரிந்துரைகளை, மத்திய அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்றும், பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு 27 சதவிகிதம் என்ற அளவோடு இல்லாம், தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது போல், 50 சதவிகிதம் அளவுக்கு இருக்க வேண்டும் என்றும், வற்புறுத்தி, சட்டப்பேரவையிலேயே தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

இதுபோன்ற சமூகத்தின் நலிந்த தரப்பினரின் நலம் காப்பதில், எங்கள் அரசு முன் நிற்கிறது.

மருத்துவ வசதிகள், தமிழகத்தின் மூலை முடுக்குகளில் வாழும் எல்லா ஏழை எளிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக, சிறப்பு மருத்துவ நலத்திட்டத்தின்கீழ், ஊர்ஊராக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதை, நீங்கள் அறிவீர்கள்.

மருத்துவரைப் பார்க்க மக்கள் வருவதைவிட, மக்களிடம் மருத்துவர் செல்ல வேண்டும் என்னும் நம் விருப்பத்தின் செயற்பாடாக, இன்று, இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

இன்றைக்கு ஆலயங்களிலே திருப்பணிகள், ஓர் அமைதியான ஆன்மீகப் புரட்சிக்கு அடிப்படை அமைத்துக் கொண்டிருக்கின்றன.

அண்டை மாநிலமான கர்நாடகம், உச்ச நீதிமன்ற ஆணையினை மதித்துக் காவிரி நீர் தர மறுத்தாலும், இயற்கை அன்னை, நம் நியாயமான உரிமைகளைக் காக்கும் வகையில் கை கொடுத்து உதவியுள்ளது. தமிழகத்தில், தானிய விளைச்சல் இந்த ஆண்டு, 90.7 இலட்சம் டன் என்று, இதுவரை அடையாத உயர்ந்த நிலையை எய்தியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



• ஜனநாயகவாதி சிறிதளவுகூட சுயநலம் இல்லாதவனாக இருக்க வேண்டும்; அவனுடைய கருத்தும், கனவும், ஜனநாயகத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

**சமுதாய முன்னேற்றம்**

இந்நிலை, வள்ளுவப் பெருந்தகையின்
'குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்'

- என்ற குறள் வரிகளை மெய்ப்பித்துள்ளது.

சமுதாய முன்னேற்றத்துக்காக நாம் எடுத்து வரும் முயற்சிகள் பல. எந்த மாறுதலும் அடிப்படையிலிருந்து தொடங்கவேண்டும். எனவேதான் 'அடித்தள' மக்களுக்குத் தன்னிறைவு அளிக்கின்ற திட்டங்களை, நாம் செயல்படுத்தி வருகின்றோம்.

திங்கட்கிழமைதோறும், மாவட்ட வாரியாக மக்களைச் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு, உரிய கவனத்தோடு அவற்றைப் பரிசீலித்து, விரைந்து உரிய நடவடிக்கைகளையும், உதவிகளையும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

**புகழ்க்கொடை வழங்கப்படும்**

கடந்த சில நாட்களுக்கு முன்னர், பெங்களூரில் உள்ள பயிற்சி நிறுவன விமானப்படைத் தளபதி என்னைச் சந்தித்தபொழுது, முப்படையும் சார்ந்த விருதுபெற்ற படை வீரர்களின் சார்பாக ஒரு கோரிக்கையை முன் வைத்தார். முப்படை வீரர்களுக்குப் போர்க்காலத்தில் அவர்கள் புரிந்த வீரசாகசச் செயலுக்காக வீரப்பதக்கங்களும், பணிக்காலத்தில் செய்த பாராட்டத்தக்க சேவைக்காகச் சேவா பதக்கங்களும் மத்திய அரசு வழங்கி வருகிறது. அவ்வாறு பதக்கம் பெறும் வீரர்களில், சில குறிப்பிட்ட விருதுகள் பெற்றவர்களுக்கு மட்டும் மாநில அரசு புகழ்க்கொடையாகப் பண முடிப்பு வழங்கிவந்தது. புகழ்க்கொடை பெறத் தகுதியான விருதுகள் பெறும் பட்டியல் 1990-ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டதுடன், பரிசுத் தொகையும் உயர்த்தப்பட்டது.

இந்த ஆணை 1990-ஆம் ஆண்டு முதல் விருது பெறும் வீரர்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. இதனை நாடு சுதந்திரம் அடைந்த நாளான ஆகஸ்ட் 15, 1947 முதல் அமல்படுத்தினால் 1990- க்கு முன்னர் விருதுபெற்ற முப்படை வீரர்களும் பயன் பெறுவர் என்றும், இக்கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார். முப்படை வீரர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அனைவரும் பயன்பெறத்தக்க வகையிலும் இந்தக்

**கோரிக்கையை ஏற்று, அரசு வழங்கும் புகழ்க்கொடை பண முடிப்பு வழங்குவது 1947-ஆம் ஆண்டு முதலே செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 1990-ஆம் ஆண்டுக்கு முன்னர் விருதுபெற்ற 207 முப்படை வீரர்களுக்கு அரசு 5 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாயைப் புகழ்கொடையாக விரைவில் வழங்கும்.**

விடுதலை வீரர்களை நினைவு கூர்வதிலும், இன்று நம்மிடையே வாழும் அந்தத் தியாக சீலர்களைக் கௌரவிப்பதிலும், சிறப்புச் செய்வதிலும், நம் அரசு முன் நிற்கிறது. கடந்த 9-ஆம் தேதியன்று 'வெள்ளையனே வெளியேறு' என்னும் வீர இயக்கத்தின் பொன் விழா நாளை முன்னிட்டு, நம் அரசு நடத்திய விழாவில் தியாகிகளுக்கெல்லாம், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கெல்லாம், பாராட்டு நடத்தியதோடு, அவர்களது ஓய்வூதியத்தை வேறுபாடின்றி அனைவர்க்கும் ஒரே சீராக ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, நான் ஆணை பிறப்பித்திருக்கிறேன். அது மட்டுமல்லாமல், நமது அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய, அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறேன்

வசதி இல்லாதவர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்ய, 20 ஆயிரம் ரூபாய் உதவி, முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு வாரந்தோறும் இலவச அரிசி, இறந்த நெசவாளர் குடும்பங்களுக்கு மாதந்தோறும் 250 ரூபாய் ஓய்வூதியம் என்று, சமுதாயத்தின் சகல தரப்பினருக்கும் உதவிகளை அள்ளித்தந்து, சாதனைகளைப் படைத்து வருகின்றது எங்கள் அரசு என்றால் அது மிகையாகாது.

### சாதிமதங்களைப் பாரோம்

நமது ஒற்றுமை உறுதிப்பட வேண்டுமானால், வளர்ச்சிப் பாதையில் நாம் ஏறுநடைபோட வேண்டுமானால், சாதிகளையும், மதங்களையும் அரசியலாக்கும் சக்திகள், தோற்கடிக்கப்பட வேண்டும்.

சாதி அடிப்படையில் அரசியல் அமைப்புகள் உருவாவது, நம்மை - நம் வளர்ச்சியைப், பல நூற்றாண்டுகள் பின்னுக்குத் தள்ளும் பிற்போக்கு நடவடிக்கைகளாகும்.

இன்னுமொரு செய்தியையும் இந்தப் புனித வேளையில், பொறுப்புமிக்க நம் மக்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டியது, என் கடமையாகும்.

நாம் எடுக்கின்ற தீர்மானங்கள், தீட்டிவரும் திட்டங்கள், செயலாக்கி வரும் சாதனைகள், இவற்றில் மக்களின் பங்கு மகத்தானது. திட்டங்களின் பயன்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமானால், ஜனநாயகம் வெற்றி பெறத் தங்களது பங்கேற்பு எவ்வளவு அவசியமானது என்பதை, மக்கள் உணர வேண்டும்.

எனவே அரசின் பணிகளில் தோளோடு தோள் நின்று, ஊக்கம் தர வேண்டியது, உங்கள் கடமை என்பதை, இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று நாம் நாமாக இருப்பதற்கு யார் காரணமோ, அவர்களை எல்லாம் நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்கிறேன்.

**இந்த அரசு, தந்தை பெரியாரின் அரசு, பேரறிஞர் அண்ணாவின் அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் அரசு; சுருங்கக்கூறின், இது உங்களின் அரசு என்பதை, மட்டற்ற மகிழ்வோடும், பெருமிதத்தோடும் கூறிக்கொண்டு,**

**'பாரத பூமி பழம் பெரும் பூமி**
**நீரதன் புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்'**

என்று எல்லோரையும் வேண்டிக்கொண்டு, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

## பார்த்தோம் படித்தோம்!




'தமிழரசு' 1.8.1992 தேதிய இதழ் அட்டைப்படமும்- குடியரசுத் தலைவரைப் பற்றிய கட்டுரையும் மிகவும் அற்புதம்.

—எஸ்.பி.ஆர். சுபா,
சென்னை-24.

சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கமானது, வருங்காலத்தில் ஒலிம்பிக் போட்டி நடத்தும் அளவுக்கு உருவாக்கப்படுவதாகத் 'தமிழரசு' மூலம் அறிந்து மகிழ்ந்தோம்; ஒலிம்பிக் போட்டி பற்றியும் வெளியிட்டிருந்தீர்கள்; இதே போலத் தொடர்ந்து ஒரு விளையாட்டுப் பகுதி வெளியிடலாமே?

—ஆர். சிவகுகன்
திருச்சி.

கோவை, நீலகிரி மாவட்டங்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க அரசு மேற்கொண்டிருக்கும் அரிய பணிகள் பற்றிய கட்டுரையைப் படித்தோம்; இதே பகுதியில் இருந்தும் எங்களுக்கே தெரியாத பல செய்திகள் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது எங்களை மிக மிக மகிழ்வித்தது.

—தி. உமா, ஆர். சித்தார்த்தன்
கோயம்புத்தூர்.

16.7.92 'தமிழரசில்' கர்ம வீரர் காமராசர் பற்றிய கட்டுரை ஒன்று வெளியிட்டிருந்தீர்கள்; அதில் அவர் பிறந்த ஆண்டு 1930 என்று இருக்கிறது; அது தவறு. அது 1903 என்று இருந்திருக்க வேண்டும். அதுதான் சரி.

—அ. கருத்தோவியன்
கருகம்பத்தூர், வேலூர்-13.

(ஆசிரியர்: நீங்கள் குறிப்பிட்டுள்ளதை ஏற்றுக்கொள்கிறோம்.)

'தமிழரசு' பாராட்டுக்குரியதாகவும், விலை மதிப்பற்றதாகவும் விளங்குகிறது; வாழ்த்துகள். ஆனால், சரியான தேதியில் புத்தகம் வெளிவருமானால் இன்னமும் சிறப்பாக இருக்குமே.

—வி. அன்னப்பன்,
சென்னை-12.

# பர்கூர் மக்களுக்கு முதல்வர் வழங்கிய பல்வேறு உதவிகள்...



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தனது தொகுதியான பர்கூர் மக்களின் குறைகளைத் தீர்க்க, அங்கே இயங்கிக் கொண்டிருக்கும் தனது அலுவலகம் மூலம் அந்தத் தொகுதி மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, அவற்றைப் பல்வேறு துறை அலுவலர்களுக்கு அனுப்பி அவர்களுடைய, குறைகளைத் தீர்க்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

அந்த அடிப்படையில், பர்கூர் தொகுதி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட மனுக்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் படித்துப் பரிசீலனை செய்து, 4-வது கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்தம் 92 நபர்களுக்கு 19.8.1992 அன்று தனது இல்லத்திற்கு அவர்களை வரவழைத்து, அவர்களது பல்வேறு குறைகளைத் தன்னுடைய சொந்தச் செலவில் நிறைவேற்றி வைத்தார்.

5 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும், 10 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், தச்சு வேலைக் கருவிகள் இருவருக்கும் வழங்கினார்கள். மேலும் டீக்கடை வைக்க நிதி உதவி கோரியிருந்த மனுதாரர்கள் நால்வருக்கு-பாய்லர், டீ கெட்டில், ஸ்டவ், பால் பாத்திரம் முதலான 20 வகையான உபகரணங்களை வழங்கினார்.

அதேபோல், சிற்றுண்டிக்கடை வைக்க நிதி உதவி கோரிய ஒருவருக்குஸ்டவ்,இட்லிப் பாத்திரம், வாணலி, அடுக்கு, வாட்டர் ஜக் முதலான 26 வகையான உபகரணங்களை வழங்கினார். பெட்டிக்கடை வைக்க நிதி உதவி கோரிய இருவருக்கு வியாபாரம் செய்ய 27 கண்ணாடி ஜாடிகளில் பிஸ்கட், சாக்லெட் மற்றும் தின்பண்டங்கள் ஆகியவற்றையும் வழங்கினார். கட் பீஸ் துணிக்கடை வைக்க நிதி உதவி கோரிய இருவருக்கு அவர்கள் தலையில் சுமந்து வியாபாரம் செய்யும் அளவிற்குத் துணி வகைகளை வாங்கி வழங்கினார்.

சைக்கிள் கடை வைக்க நிதி உதவி கோரிய 3 நபர்களுக்குத் தலா 6 சைக்கிள்கள் வீதமும் அதனுடன் சைக்கிள் ரிப்பேர் செய்வதற்கான சாதனங்களையும் வழங்கினார். வியாபாரம் செய்ய நிதி உதவி கோரிய 5 நபர்களுக்கும், தொழில் கருவிகள் வாங்க நிதி உதவி ஒருவருக்கும், பொதுவாக நிதி உதவி கோரிய 15 நபர்களுக்கும், இருதய நோய், ஆஸ்துமா, வாத நோய் போன்ற நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சைக்காக நிதி உதவி கோரிய 21 நபர்களுக்கும், ஊனமுற்ற 13 நபர்களுக்கும் நிதி உதவி அன்றுவழங்கினார்.

செவித்திறன் குன்றிய ஒருவருக்குக் காது கேளாதவருக்கான கருவி மற்றும் பண உதவியும், உடல் ஊனமுற்ற இருவருக்கு மூன்று சக்கர வண்டியும் பண உதவியும் வழங்கினார். மிதி வண்டி கோரிய 5 நபர்களுக்கு மிதி வண்டிகள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து பல்வேறு உதவிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் தனிப் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்கள்; அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களது இல்லத்திற்கு வரவழைக்கப்பட்டு உதவிகள் வழங்கப்பட்ட பின்னர் பர்கூருக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்கள்

அவர்கள் அனைவருடைய போக்குவரத்து, உணவு மற்றும் தங்குவதற்கான செலவுகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே தம் சொந்தச் செலவில் ஏற்றுக் கொண்டார்.

# மக்கள் தொகைக்கட்டுப்பாடு - ஒரு புதிய திட்டம்

**வி**ரைவான பலன்களை எதிர்நோக்கித் திட்டப்பட்டுள்ள புதிய மக்கள் தொகைக் கட்டுப்பாடுத் திட்டம், அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதையே குறிக்கோளாகக் கொண்டது. மாநிலங்களுக்கும், மத்திய நிர்வாகப் பகுதிகளுக்கும் (யூனியன் பிரதேசங்களுக்கும்) நிதி ஒதுக்குவதில் ஒரு புதிய முறை (Cafeteria approach) கடைப்பிடிக்கப்படுகிறது.

இப்புதிய முறையின்படி, மத்திய அரசின் உதவியை அதிக அளவில் பெற, மாநிலங்கள் பிறப்பு விகிதத்தில் வீழ்ச்சியைக் காட்ட வேண்டும். தற்போது நடைமுறையில் இருக்கும் முறையின்படி, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாநிலங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையைச் சரி பார்க்க இயலாத காரணத்தினால், இந்த முறை ரத்து செய்யப்படுகிறது. இளம் தம்பதிகளை மையமாகக் கொண்ட புதிய திட்டம் ஒன்று இப்போது வகுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசுகள், மத்திய நிர்வாகப் பகுதிகள், ஆகியவைகளின் ஒப்புதலுடன் ஒரு புதிய செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இச்செயல் திட்டத்தில் தனி நபர்களுக்கு வழங்கப்படும் பல சலுகைகள் ரத்து செய்யப்படுகின்றன. அதற்குப் பதிலாக சமூக அடிப்படையிலான சலுகைகளும், சிறு குடும்பத்தைக் கொண்டுள்ள நபர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

சமூக அடிப்படையிலான சலுகைகள் அரசின் பல்வேறு சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுடன் சம்பந்தப்படுத்தப்படும். சலுகைகளை வழங்கும் வகைகளை முடிவு செய்யும் பொறுப்பு மாநில அரசைச் சாரும்.

தற்போது மாநில அரசுகளுக்கு, லூப் பொருத்துபவருக்கென ரூ.10-ம் (IUD Insertion) ஆண் கருத்தடைக்கு ரூ.180-ம் (Vasectomy), பெண் கருத்தடைக்கு ரூ.200-ம் (Tubectomy) வழங்கப்படுகிறது.

கருத்தடைச் சாதனங்களை மேம்படுத்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதுவரை இலவசமாக வழங்கப்பட்டஇவை, இனிமேல் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படும். பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சில இடங்களில் இலவசமாகவும் வழங்கப்படும். ஏனெனில் இவை இலவசமாக வழங்கப்படும்போது நிறைய வீணாவதுடன் பிறப்பு விகிதத்திலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்படவில்லை. கருத்தடைச் சாதனங்களின் தரமும் மேம்படுத்தப்படும்.

குடும்ப நலச் சேவை மையங்களின் தரம் மேம்படுத்தப்படும். நகர்ப்புறங்களிலுள்ள சேரிகளிலும் அடிப்படைச் சுகாதார வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

2000-வது ஆண்டில் அனைவருக்கும் சுகாதாரம் என்னும் இலட்சியத்தை அடையும் வகையில் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பாதுகாப்புத் திட்டம் யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டத்தில் மூன்று வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் வைட்டமின் ஏ மாத்திரைகள் வழங்குவது, ஆரம்பச் சுகாதார மையங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தருவது போன்றவை அடங்கும். இத்திட்டம் இறப்பு விகிதத்தைக் குறைப்பதிலும், குடும்ப நலத்திட்டத்திலும் பெரும் பங்கு வகிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஆதாரம்: பத்திரிகைத் தகவல் அலுவலகம்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, ஏர்மார்ஷல் திரு. ஆர்.கே. தவான் அவர்கள் சந்தித்து உரையாடினார் (12.8.92).**





# ராஜீவ்

**ஆகஸ்ட் 20 ராஜீவ் காந்தியின் 48-வது பிறந்தநாள் நினைவாக:**

இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற்றபின், இந்நாட்டின் பிரதமர் பதவியை அலங்கரித்த - ஜவகர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி, மொரார்ஜி தேசாய், சரண்சிங், திருமதி இந்திராகாந்தி ஆகியோரையடுத்து, ஆறாவதாக அப்பதவிக்கு வந்த பெருமையாளரே திரு. ராஜீவ் காந்தி அவர்கள்.

திருமதி இந்திராகாந்தி அவர்கள் 1984 அக்டோபர் 31-இல் படுகொலை செய்யப்பட்ட பிறகு, அப்பதவியில் அமர்த்தப்பட்ட இவரே, அதுவரை இருந்த பிரதமர்களையெல்லாம்விட வயதில் இளைஞராக இருந்தார். அதேநேரத்தில் - பாரம்பரியப் பெருமைமிக்க குடும்பத்தைச் சேர்ந்த அவர், அனுபவ முதிர்ச்சியும் உடையவராக இருந்தார்.

இளமைக்கேற்ற சுறுசுறுப்பு அவரிடம் எப்போதும் குடிகொண்டிருந்தது. அவர் வேகத்திற்குப் பணியாற்ற அரசு உயர் அதிகாரிகளெல்லாம்கூட திணறிப்போன சம்பவங்கள் - நாட்கள் பல உண்டு.

அந்தத் திறமையாளரின் வரலாறு இது:

திரு. ராஜீவ் காந்தி அவர்கள், 1981-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அரசியலில் நுழைந்ததிலிருந்தே, அவரது அன்னை திருமதி இந்திராகாந்தி அவர்களின் அரசியல் வாரிசாகவும் கருதப்பட்டார்.

20.8.1944 அன்று,ராஜீவ் - பம்பாயில் இந்திராகாந்தி-பெரோஸ் காந்தி தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்தார். அவருக்கு ராஜீவ்ரதன் காந்தி என்று பெயரிடப்பட்டது. 'ராஜீவ்' என்றால் தாமரை என்று பொருள்படும்.

பேரக்குழந்தை ராஜீவ் பிறந்தபோது, தாத்தாவான பண்டித நேரு சிறையில் இருந்தார். அவர்தான் ராஜீவ் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்.

ராஜீவுக்குப் பத்து வயதானபோது 'போர்டிங்' பள்ளிக்கு அனுப்பப்பட்டார். பிறகு - பூனாவில் உள்ள டூன் பள்ளியில் படிப்பை முடித்துக் கொண்டு 1960-ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்று வெளியே வந்தார். இவருக்கு 16 வயதானபோது, தந்தையார் பெரோஸ் காந்தி இறந்து போனார்.

1962-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற அவர், 'டிரினிடி' கல்லூரியில் 'மெக்கானிகல் என்ஜினியரிங்' படிப்பில் சேர்ந்தார். இங்குதான் 1965-ஆம் ஆண்டு, தமது எதிர்கால மனைவியான சோனியா மெய்னோ என்ற இத்தாலியப் பெண்ணை அவர் சந்தித்தார். அந்த முதல் சந்திப்பே காதலாக மலர்ந்தது.

ராஜீவ்-சோனியா திருமணம் 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்தது.

படிக்கும்போதே தாத்தா நேரு அளித்த ஊக்கத்தின்பேரில், விமானம் ஓட்டும் பயிற்சியிலும் ராஜீவ் ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தார். 1968 மே மாதம் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் பயிற்சி விமானியாக அவர் சேர்ந்தார். 7 மாதத்திற்குப் பின், டகோடா விமானத்தில் பயணிகளை ஏற்றிச் செல்லுமளவுக்கு திறம்மிக்க விமானியாக அவர் திகழ்ந்தார். ஓராண்டிற்குப் பின் 'போக்கர் பிரண்ட்ஷிப்' விமானத்தை அவர் ஓட்டத் தொடங்கினார். பின்னர் அவர் 'ஆவ்ரோ' விமானங்களை ஓட்டும் தகுதி பெற்றார்.

அரசியலிலே நுழையும் வரை, இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் 12 ஆண்டுக்காலம் விமானியாகப் பணிபுரிந்தார்.

1981-ஆம் ஆண்டு மே 10-ஆம் நாள், தன் வேலையை விட்டுவிலகி முதலில் வேண்டாவெறுப்போடுதான் அரசியல் உலகில் அவர் அடியெடுத்து வைத்தார். அதே ஆண்டு ஜூன் மாதம் அமேதி தொகுதியில் போட்டியிடும் அவசியத்திற்கு ஆளானார். அத்தேர்தலில், அனைவரும்



• முதலில் தொண்டு, பின்பு தன்னலம் என்ற மனப்பக்குவம் அனைவரிடமும் ஏற்பட வேண்டும்; அப்பொழுதுதான் நல்ல சமுதாயம் உருவாகும்.

எதிர்பார்த்ததற்கு மேலாக 2 இலட்சத்து 37 அயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

அத்தேர்தலுக்குப் பின், அரசியல் நுணுக்கங்கள் அவருக்கு அத்துபடியாயின.

1981 - ஜூன் 25-ஆம் தேதி இளைஞர் காங்கிரஸ்(இ) தேசியச் செயற்குழு உறுப்பினரானார். 1983 பிப்ரவரி 2-ஆம் தேதி அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி(இ) பொதுச்செயலாளராகவே பொறுப்பேற்றார்.

பின்னர், அவர் காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதியாகப் பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளார். 1983 செப்டம்பரில், தமது அன்னையுடன் அவர் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றார். அங்கு ஐ.நா. 37-வது பொதுச் சபைக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அந்தக் கன்னிப்பேச்சே கருத்தாழம் மிக்கதாக இருந்தது.

இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் 101 நாடுகள் அடங்கிய அணிசேரா நாடுகள் இயக்கத்துக்கு ராஜீவ் காந்தி அவர்கள் தலைவர் ஆனார்.

இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி, உலக ஒற்றுமைக்காகவும், அமைதிக்காகவும் அரும்பாடுபட்டு வந்தார். இதன் காரணமாக, நான்காண்டுகளுக்கு முன்பே இவர் பெயர் நோபல் பரிசுக்குச் சிபாரிசு செய்யப்பட்டது. 1985-இல் பஞ்சாப்-அசாம் ஒப்பந்தங்கள் இவரால் கையெழுத்திடப்பட்டன.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க இவர் மேற்கொண்ட வீரமும் விவேகமும் முயற்சியும் குறிப்பிடத்தக்கவை. ராஜீவால் அமைதி காப்புப்படையும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவரால் 1987-இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் நம் நாட்டுச் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கது.

1988-இல், மாலத்தீவில் அந்நாட்டு அதிபர் கயூமுக்கு எதிராக நடைபெற்ற புரட்சியை அடக்க இந்தியப் படைகள் திரு. ராஜீவால் அனுப்பி வைக்கப்பட்டன.

ஜவகர் ரோஜர் யோஜனா, பஞ்சாயத்து ராஜ் போன்ற மசோதாக்கள் இவரால்தான் கொண்டுவரப்பட்டு அமல்படுத்தப்பட்டன.

1989-இல் நடைபெற்ற பொதுத் தேர்தல் இவருக்கு ஒரு சோதனையாக அமைந்தது.



அத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தபின், திரு. ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமர் பதவியை இழந்தார்.

வளைகுடாப் போர் மூண்டபோது, அதை அரும்பாடுபட்டு முடிவிற்குக் கொண்டுவரச் சமாதான நடவடிக்கையில் இவர் ஈடுபட்டார்; இதுவே இவர் மேற்கொண்ட கடைசிச் சமாதான முயற்சியாகும்.

ராஜீவ் இந்தியத் திருநாட்டின் பிரதமராக இருந்த சமயத்தில், கொலை பாதகர்களால் இரண்டு முறை அவர் உயிருக்குக் குறி வைக்கப்பட்டது.

ஆனால், *1991* மே, *21*-இல், தேர்தல் சுற்றுப் பயணம் மேற்கொண்டதுபோது - திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தமிழகத்தில் கொலை வெறியர்களால் மிகக் கொடுமையான முறையில் கொல்லப்பட்டார்.

ஜவகர்லால் நேரு குடும்பத்தில் கடந்த பதினோராண்டுகளில் மூன்று கொடிய சாவுகள் நிகழ்ந்துள்ளன. *1980*-இல் திரு. சஞ்சய் காந்தி விமான விபத்தில் சிக்கிக் கொடூரமாக உயிரிழந்தார்.

*1984*-இல் இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவர்கள் தமது பாதுகாவலராலேயே பயங்கரமாகச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

*21.5.1991* அன்று தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தமிழகத்திற்கு வந்த திரு. ராஜீவ் காந்தி அவர்கள், சென்னைக்கு அருகே உள்ள ஸ்ரீபெரும்புதூரில் எதிர்பாராத பயங்கர வெடிகுண்டுத் தாக்குதலுக்கு ஆளாகிப் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது உடல் அரசு மரியாதைகளுடன், டில்லியில் யமுனை நதிக்கரையில், அன்னையார் இந்திராகாந்தி நினைவிடம் அருகே *24.5.1991* வெள்ளிக்கிழமையன்று மாலை *5.15* மணியளவில் அவருடைய புதல்வர் ராகுல் காந்தியால் எரியூட்டப்பட்டது.

கடந்த மே *21*-ஆம் தேதி, இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், அவரது நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

ராஜீவின் மறைவிடத்தில், நினைவில்லம் அமைப்பதற்கெனத் தமிழக அரசு *12* ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளது.

- 'முடிகொண்டான்'

---




'நேற்றுப்பெய்த மழையில் இன்று முளைத்த காளான்' என்ற கேலிப் பேச்சுக்கு இனி இடமில்லை. காளான்கள் இப்போது மனிதனின் முக்கிய உணவு வகைகளில் ஒன்றாக மாறி வருகின்றன. அதிக புரோட்டீனும், பெரும்பான்மை வைட்டமின்களும் கொண்டவை அவை. அதே சமயம், அவை சிறந்த மருத்துவக் குணங்களைக் கொண்டிருப்பதாகவும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

'அமானிடா மஸ்காரியா' என்ற காளான், சுரப்பிகளின் வீக்கத்தைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டது. ஓமியோபதி மருத்துவ முறையில், மூளையின் செயல்பாட்டினைச் சரிசெய்ய இது மருந்தாகப் பரிந்துரைக்கப்படுகிறது.

'சைலோசைப் மெக்ஸிகேன்' எனப்படும் காளான் மனநோய்களுக்கு மருந்தாகும்.

'ஆரிகுலேயா பாலிடிரைகா' என்ற வகை, இரத்தத்தில் 'கொலஸ்ட்ராலை'க் கட்டுப்படுத்துவதாகக் கண்டறிந்திருக்கிறார்கள். இதில் இன்னொரு ரகம், இரத்தக் கொதிப்பைக் குறைக்கும் சக்தி கொண்டது. மேற்கண்ட வகைகள் நீங்கலாக, பாக்டீரியா எதிர்ப்புத்திறன், மஞ்சை எதிர்ப்புச் சக்தி, வைரஸ் கிருமி எதிர்ப்புத்திறன் முதலிய காரணங்களுக்காகச் சில வகைக் காளான்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

எல்லாவற்றுக்கும் உச்சகட்டமாக ஒரு விதக் காளானிலிருந்து கிடைக்கும் 'லென்டினன் சல்பேட்' என்ற பொருளுக்கு 'AIDS' நோயைக் கட்டுப்படுத்தும் குணம் இருப்பதாக ஜப்பான் நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

சீனாவில் மட்டும் *107* வகையான மருத்துவ ரகக் காளான்கள் வளர்க்கப்படுகின்றன.

கேரளாவில் நிலத்தடியில் வளரும் காளான் ஒன்று, ஆயுர்வேத மருத்துவர்களால் மஞ்சள் காமாலை, காது வலி முதலிய நோய்களுக்கு மருந்தாகக் கொடுக்கப்படுகின்றது.

குளிர் காலத்தில்

# கோழிப்பண்ணை

பராமரிப்பு

கோழிகளின் உற்பத்தித் திறன் தொடர்ந்து நிலையானதாக இருக்க, வெப்ப தட்பச் சூழ்நிலைக்கேற்ப அவைகளை நன்கு பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும். கோடை காலத்தில் கூடுதலான வெப்பத்திலிருந்து பாதுகாக்க வேண்டியது போலக் குளிர் காலத்திலும் கூடுதலாகக் குளிரிலிருந்து கோழிகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். மழை மற்றும் பனி ஆகியவற்றால், கோழிகள் உள்ள வீட்டின் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்பட்டு, கோழிகளின் வளர்ச்சி குறைந்து முட்டை இனக் கோழிகளில் முட்டை இடும் திறனும், கறிக்கோழிகளில் எடைகுறைவாகும்நிலையும்ஏற்படும். எனவே, கோழிப்பண்ணையாளர்கள் குளிர் காலத்தில் கோழிகளைப் பராமரிக்க வேண்டிய வழிமுறைகளை அறிந்து தகுந்த முன்னேற்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**கோழி வீட்டின் கூரை பராமரிப்பு**

பெரும்பாலும் கோழிகளின் வீடுகள் கூரையால் வேயப்பட்டுள்ளதால், நாளடைவில் கூடை பழுதடைந்து ஒட்டை ஏற்படலாம். இதை மழைக்காலம் ஆரம்பிக்குமுன்பே சீர்படுத்தவேண்டும். தேவைப்பட்டால் புதிய கூரை அமைக்கலாம் அல்லது ஒட்டை விழுந்த இடங்களில் புதிய கூரை போட்டுச் சரி செய்யவேண்டியது மிகவும் அவசியம். இதனைச் சீர்செய்யாவிடில், மழைக் காலத்தில் ஒழுகல் ஏற்பட்டு கோழி வீட்டினுள் மழை நீர் புகுந்து ஈரமாக்கிவிடும். இதனால், முட்டையிடும் கோழிகள் நனைந்து தீவனம் சரிவரத் தின்னாமல் முட்டை குறைந்துவிடும். கறிக்கோழிகளின் வளர்ச்சித் திறன் குறைந்து எடை குறைந்துவிடும். ஆழ்கூளம் நனைந்துவிடும். இதன் விளைவாகக் காக்கிடியோசிஸ் என்ற இரத்தக் கழிச்சல் நோய் ஏற்படும். கோழிகளில் இறப்பு ஏற்படலாம். இதனால் பொருளாதார நட்டம் ஏற்படக் கூடும்.

**டாக்டர் என். மாரிமுத்து**
**கால்நடை பராமரிப்புத்துறை**
**விவசாயக் கல்லூரி, மதுரை.**

**பண்ணை பக்கவாட்டில் திரை அமைத்தல்**

மழைச்சாரல் கோழி வீட்டினுள் புகாமலிருக்கப் படுதா அல்லது கோணிச் சாக்குகளைப் பக்கவாட்டுத் திரையாக மழை பெய்யும் நேரங்களில் தொங்கவிடவேண்டும். மழை நின்றவுடன் படுதாவினைச் சுருட்டி வைக்கவேண்டும். இரவு நேரங்களில் படுதாவினை இறக்கி விட்டுக் காலையில் வெயில் வந்தவுடன் மீண்டும் சுருட்டி, கட்டி வைக்க வேண்டும். அதிகாலையில் சுற்றுப்புறம் குளிராக இருக்கும். எனவே, சூரிய வெப்பம் வந்த பின்பு பக்கவாட்டுத் திரைகளைச் சுருட்டி வைக்கவேண்டும்.

**ஆழ்கூளம் பராமரிப்பு**

ஆழ்கூளம் எந்த நேரத்திலும் இல்லாமலிருப்பது மிகமிக அவசியம்.





மழைச் சாரல் மற்றும் மழைத் தண்ணீர் ஒழுகுதல் மூலம் ஆழ்கூளம் நனைந்து விட்டால், அதை உடனே அப்புறப்படுத்த வேண்டும். இல்லையேல் கோழிகளுக்கு இரத்தக் கழிச்சல் நோய் உண்டாகும். கோழி எச்சத்தில் சுமார் 70 சதவிகிதத்துக்கு மேல் ஈரப்பதம் இருப்பதாலும், மழைக் காலங்களில் சுற்றுப்புறம் ஈரப்பதத்துடனிருப்பதாலும், ஆழ்கூளம் விரைவில் உலர்வதில்லை. இதனால் காக்சிடியோசிஸ் எனும் இரத்தக் கழிச்சல் நோய் வரக்கூடும். ஆழ்கூளத்தில் ஈரப்பதம் 25 சதவிகிதத்துக்குமேல் இருந்தால் அம்மோனியா வாயு உற்பத்தியாகி கோழிகளைப் பாதிக்கும். கண் எரிச்சல் ஏற்படும். தீவனம் உட்கொள்வது குறையும்.

முட்டை இனக் கோழிகளில் முட்டை உற்பத்தி குறைந்துவிடும். கறிக் கோழிகளில் வளர்ச்சி குறைந்து எடை குறைந்து விடும். இதனால் பண்ணையின் பொருளாதாரம் பாதிக்கப்படலாம். இந்நிலையைத் தவிர்க்க, பண்ணையில், 100 ச.அடி. பரப்பிற்கு 8 முதல் 10 கிலோ என்ற விகிதத்தில் சுண்ணாம்புத்தூளைத் தூவி நன்கு கிளறி விடவேண்டும். ஆழ்கூளத்தின் ஈரத் தன்மையைப் பொறுத்து வாரத்தில் மூன்று அல்லது நான்கு முறை அப்படி விடுவது அவசியம். கூட்டு முறையில் வளர்க்கப்படும்போது ஈத்தொல்லையை நீக்க மழைக் காலத்தில் கோழி எச்சத்தின் மீது சுண்ணாம்புத்தூள், மலத்தியான், சுமத்தியான் ஏதாவது ஒன்றினைத் தெளிக்க வேண்டும்.

### கூடுதலாக வெப்பம் அளித்தல்

குளிர்காலத்தில் காலையில் பனிமூட்டமாக இருக்கும். இதனால் சுற்றுப்புறக் காற்று, ஈரப்பதத்துடனிருக்கும். இவ்விதச் சூழ்நிலையில் எலக்ட்ரிக் ஹீட்டர் பயன்படுத்தி கோழி வீட்டில் வெப்பம் கொடுத்தல் அவசியம். இதோடு நன்கு பகல் வெளிச்சம் வரும்வரை செயற்கை வெளிச்சம் கொடுத்து பல்புகளை எரியவிட வேண்டும். இதனால் கோழிகள் ஒரே இடத்தில் அடையாமல் பரவலாக நடந்து திரியவும் தீவனம் உட்கொள்ளவும் ஏதுவாகும். ஒரு நாளைக்கு 16 மணி நேரத்துக்குக் குறையாமல் வெளிச்சம் கிடைக்கவேண்டும்.

### தீவனம் அளித்தல்

கோடை காலத்தில் சிலர் பண்ணைத் தீவனத்துடன் தண்ணீர் கலந்து பிசைந்து வைப்பார்கள். இப்படிக் கூளத்தை குளிர் காலத்தில் மாற்றி உயர் தீவனமாகக் குளிர் காலத்தில் கொடுக்க வேண்டும். குளிர் காலத்தில் கோழிகளுக்குக் கூடுதலாக எரிசக்தி தேவைப்படுவதால் எப்போதும் கொடுக்கப்படும் தீவனத்தைவிட எரிசக்தி கூடுதலாகக் கிடைக்கும்படி தீவனக் கலவையை மாற்றி அமைக்கத் தீவனம் தயாரித்துக் கொடுக்கவேண்டும். கோழிகளுக்குத் தேவையான கூடுதல் வெப்பம் கிடைக்க கரும்பாலைக் கழிவு (Molasses) ரைஸ்பாலிஷ், மக்காச் சோளம் போன்றவற்றைத் தீவனத்தில் கலந்து கொடுக்கலாம்.

### தண்ணீர் அளித்தல்

குளிர் காலத்தில் தண்ணீர் பொதுவாகக் குளிர்ச்சியாக இருக்கும். குளிர்ச்சியாக உள்ள நீரைக் கோழிகளுக்குக் கொடுத்தால், உட்கொள்ளும் அளவு குறைந்துவிடும். இதனைத் தவிர்க்க, குளிர் காலத்தில் கொடுக்கும் தண்ணீரைச் சிறிது சூடாக்கிக் கொடுத்தால் உட்கொள்ளும் தண்ணீரின் அளவு அதிகரிக்கும். இதனால் வளர்ச்சி விகிதம் பாதிக்காமலிருக்க வாய்ப்புண்டு.

### குளிர் காலத்தில் ஏற்படும் நோய்கள்.

குளிர் காற்று மனிதர்களைப் பாதிப்பதுபோல் கோழிகளையும் பாதிக்கின்றன. சுற்றுப்புறக் காற்றும் மிகவும் ஈரப்பதம் நிறைந்ததாக இருப்பதால் கோழிகளில் சளி, நுரையீரல் நோய், இரத்தக் கழிச்சல் போன்ற நோய்கள் ஏற்படலாம். இவற்றிலிருந்து கோழிகளைப் பாதுகாக்க ஈரப்பதம் அதிகமுள்ள ஆழ் களத்தை உடனே அப்புறப்படுத்தி, புதிதாக உலர்ந்த ஆழ்கூளம் போடவேண்டும். வளர்க்கப்படும் கோழிகளின் எண்ணிக்கை அப்பண்ணையின் பரப்பளவுக்கு எத்தனை வைத்துப் பராமரிக்க முடியுமோ அதற்குமேல் கூடுதலான எண்ணிக்கையில் வளர்க்கக் கூடாது. நெருக்கடியைத் தவிர்க்கவேண்டும். குளிர் காலத்தில் கோழித் தீவனத்தில் அவசியம் காக்சிடியோஸ்டேட் மருந்து கலந்து கொடுக்கவேண்டும். சளி, நுரையீரல் நோய் வராமலிருக்க ஆண்டிபயாடிக் மருந்து நீரில் கலந்து கொடுக்க வேண்டும். முட்டை இனக் கோழிகளில் குடற்புழு நீக்கம் செய்வது அவசியம். குளிர் காலத்தில் கோழிகளின் உற்பத்தித் திறன் குறையாமலிருக்கவும் நோய்ப் பாதுகாப்புச் செய்யவும் மேற்கூறிய பராமரிப்பு முறைகளைக் கோழிப் பண்ணையாளர்கள் கடைப்பிடித்து, பண்ணையின் பொருளாதாரம் கூடுதலாக்கக் குளிர் காலத்தில் கோழிகளை நன்கு பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.



# நூல் நயம்

### பேரறிஞர் அண்ணா

**ஆசிரியர்:** ஞா. மாணிக்கவாசகன்
**வெளியீடு:**
உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டித்தெரு,
சென்னை-600 001.
பக்கம்:194 விலை:ரூ.25/-

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருவாழ்வு, நமக்கெல்லாம் வழிகாட்டியாக, குறிப்பாக இளைஞர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது என்றால் அது மிகையல்ல.

இந்த நூலில், அவரது வாழ்க்கைப் பயணங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பேரறிஞர் அண்ணாவின் எழுத்து, பேச்சு, தொண்டு எல்லாம் தொகுப்பெற்றுப் படிப்போர்க்குப் பயன் தருவனவாக அமைந்துள்ளன. எல்லாரும் படிக்க வேண்டிய நூல்.

### திருக்குறள் எளிய உரை

**ஆசிரியர்:** புலவர் ச. சீனிவாசன்
**வெளியீடு:**
சாந்தா பப்ளிஷர்ஸ்,
5, ஸ்ரீபுரம் 2-ஆம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.
பக்கம்:267 விலை:ரூ.12/-

வான்புகழ் வள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்கு எளிய இனிய உரை எழுதியுள்ளார் ஆசிரியர். எல்லாத் திறத்தாரும் படித்துப் புரிந்து கொள்ளத்தக்க வகையிலே குறளும், அதற்கு நேரே அதன் பொருளும் கொடுத்திருப்பது இந் நூலின் சிறப்பம்சம். நூலின் இறுதியில் திருவள்ளுவமாலையும், செய்யுள் முதற் குறிப்பு அகர வரிசையும் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. மலிவு விலையில், கையடக்க அச்சமைப்பு கொண்டது இந் நூல்.

—பி.வி.ஜி.

### ஆயிரம் விடுகதைகள்

**ஆசிரியர்:** சௌந்தரி நடராசன்
**வெளியீடு:**
முத்துசுந்தரி பிரசுரம்,
12, திருவள்ளுவர் தெரு,
ஔவை நகர், பாடி,
சென்னை-600 050
பக்கம்:132 விலை:ரூ.16/-

விடுகதைகள் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை சொல்லி மகிழும் ஒரு வினாடி வினாவாகும். அத்தகைய விடுகதைகள் இந்நூலில் நிறைந்துள்ளன. உதாரணத்துக்குச் சில:

அலை அலையாய் ஆடிவரும் கடலும் அல்ல; நிலையாக இருக்காது நிலவும் அல்ல - அது என்ன? (புகை)

அந்தரத்திலே பறக்கும் பறவையும் அல்ல; அழகான வாலுண்டு குரங்கும் அல்ல - அது என்ன? (பட்டம்)

### தமிழில் பிழையின்றி எழுதுவது எப்படி?

**ஆசிரியர்:** எஸ்.ஆர். கோவிந்தராசன்
**வெளியீடு:**
கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.
பக்கம்:187 விலை:ரூ.24/-

மாணவர்கள், எழுத்தாளர்கள், ஏன், எழுதத் துடிக்கும் எல்லோருமே பிழையின்றி எழுத வேண்டும். எழுத்துப் பிழைகள், நல்லவயலில் களைகள் போன்றவை. அவற்றைக் களைதல் வேண்டும். அதற்கு வழி வகை கூறுகிறது இந்நூல்.

பிழை இல்லாமல் எழுத வேண்டுமானால், ஓரளவாவது இலக்கணம் தெரிந்திருக்க வேண்டும். 'எளிய அடிப்படை இலக்கணம்' என்னும் தலைப்பில் ஆசிரியர் இரத்தினச் சுருக்கமாக இலக்கணம் கற்க வழி கோலுகிறார்.

### குறுந்தொகை ஓவியங்கள்

**ஆசிரியர்:**
டாக்டர் சரளா இராசகோபாலன்,
**வெளியீடு:**
ஒளிப் பதிப்பகம்,
63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-18
பக்கம்:160 விலை:ரூ.20/-

தமிழ் இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாகத் திகழ்கின்றன. அவ்வக் காலக்கலை, நாகரிகம், பண்பாடு முதலான தன்மைகளை எடுத்துக்காட்டி அந்தத் தமிழ்ச் செல்வங்களை மனத்தில் பதிக்க வேண்டும். அத்தகைய செல்வங்களுள் ஒன்றுதான் குறுந்தொகை.

அத்தகைய குறுந்தொகைக் காட்சிகள் சிலவற்றை எழுத்தோவியமாகத் தீட்டியுள்ளார் ஆசிரியர். எளிய நடையில், எல்லாரும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளது இதன் சிறப்பு.

—பி.வி. கிரி

### காந்தியடிகள் கண்ட கடவுளும் சமயமும்

**தொகுப்பாசிரியர்:**
வீ.சேரந்தையா பிள்ளை
**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020.
பக்கம்:177 விலை:ரூ.16/-

அண்ணல் காந்தியடிகளுக்கு ஆன்மீகமும், சமயமும் இரு கண்களாக விளங்கின. அவர்தம் வாழ்நாள் முழுவதும் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தார். அவர் ஒரு உண்மையான ஆன்மீகவாதியாகவும் விளங்கினார். அவரது கருத்துக்கள் நூல் முழுவதும் விரவியுள்ளன.

காந்தியடிகள் கண்ட கடவுள், நம்பிக்கை, பகுத்தறிவு, ஒழுக்கம், பிரார்த்தனை, வழிபாடு, அருள்நெறி முதலான தத்துவங்கள், தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. எல்லாத் திறத்தாரும் படித்துப் பயன்பெற வேண்டிய அரிய நூல்.

### வள்ளுவம் பன்னோக்குப் பார்வை

**ஆசிரியர்:** ப. முருகேசம்
**வெளியீடு:**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-98.
பக்கம்:163 விலை:ரூ.16.50/-

இது ஒரு அருமையான தொகுப்பு நூல். வான்புகழ் வள்ளுவர் குறித்து, பல்துறை அறிஞர் பெருமக்கள் எழுதிய 25 கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

டாக்டர் வ.சுப. மாணிக்கம், டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம், டாக்டர் க.த. திருநாவுக்கரசு, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் சுப்புரெட்டியார், டாக்டர் ந. சஞ்சீவி முதலானோரின் அரிய கருத்துக்கள் நிறைந்த படைப்புகள் அழகுறத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

# ஓட்டுநர்களும் குடிப்பழக்கமும்

**பொது**த் தொண்டில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஓட்டுநர்களின் ஒவ்வொரு உறுப்பும் சுறுசுறுப்பாக இயங்கவேண்டும். ஏதாவது ஒரு உறுப்பு ஊனப்பட்டிருந்தால் கூட, ஓட்டுநர் தொழிலைச் செம்மையாகப் புரியவே இயலாது.

ஆரம்ப காலத்தில் கொஞ்சம் முரட்டுச் சுபாவம் கொண்டவர்கள் ஓட்டுநர் தொழிலுக்கு வந்துவிட்டால் எக்காலத்தும் கடமை தவறாத நற்பண்பும், கருணை மாறாத செயல் திறனும், உயிர்களின் மீது அன்பும், பரிவும், தேசாபிமானமும் கொண்டவர்களாக மாறிவிடுவார்கள். அதனால் தான் ஓட்டுநர் தொழில் ஓர் உயர்ந்த தொழிலாக மதிக்கப்படுகிறது.

**ஒரு நாட்டின் கண்போன்றவர் ஓட்டுநர்**

பல உயிர்களைப் பாதுகாத்திட வேண்டிய பொறுப்பு மிக்க ஒவ்வொரு ஓட்டுநருக்கும் உடல்நிலை பாதிக்கப்படாமல் முடிவெடுக்கும் தன்மையும், உடல் உறுப்புக்கள் இயங்கும் தன்மையும் சிறப்பாக இருத்தல் வேண்டும்.

சாதாரணமாக ஒரு குதிரை பூட்டிய வண்டியை ஓட்டுபவர் அக்குதிரை ஏதாவது இடக்குப் புரிந்தால் என்ன செய்கிறார்? எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்கிறார். அதே போல் 110 குதிரை சக்தி திறனைக் கொண்ட ஒரு வாகனத்தை ஓட்டுகின்ற ஓட்டுநர் எவ்வளவு சிரமத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது? நல்ல திடகாத்திரமாக இருப்பவர்களாலேயே நிலைமைகளைச் சமாளிக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதிலும் மதுபானத்தை அருந்தி வாகனத்தை ஓட்டுவதாயிருந்தால்.... அய்யகோ! விளைவுகளை நினைத்துப் பார்க்கவே வேதனையாக இருக்கிறது.

**குடி குடியைக் கெடுக்கும்**

குடிப்பதால் தன்னிலை மறப்பதோடல்லாமல் உணர்வுகளையும், மனநிலையையும் மயங்கச் செய்கிறது. மூளையும் பாதிக்கப்பட்டு, முடிவெடுக்கும் தன்மையும் குறைந்து விடுகிறது. கண்கள் பார்க்கும் தன்மையையும், தசைநார்கள் தளர்ந்து உடல் உறுப்புகள் இயங்கும் கட்டுப்பாடுகளையும் இழந்து விடுகின்றன.

மதுபானம் அருந்தும் பழக்கமுடைய சில ஓட்டுநர்களை அண்மையில் ஆய்வுக் கூடத்தில் விசாரித்த போது...

''நான் எவ்வளவு குடிச்சாலும் ஸ்டெடியா இருப்பேங்க''...

''நான் எப்பவுமே 'நிதானத்தை' மட்டும் விட மாட்டேங்க'...

- என்றெல்லாம் கூறினார்கள்.

இப்படி ஸ்டெடியாக இருப்பதாகக் கூறிக்கொண்டு இருப்பவர்களால் எத்தனை விபத்துக்கள் விளைந்து, உயிர்ச் சேதங்கள் பொருட் சேதங்கள் பெருமளவில் ஏற்பட்டுள்ளதாக உலக ஏடுகள் பக்கம் பக்கமாக எழுதி வருவதை நாம் படித்து வருகிறோம்!



மதுபானம் அருந்தியதும் ஏறக்குறைய 20 அல்லது 40 நிமிடங்களில் மதுவானது இரத்தத்தில் கலந்து போதையை உண்டாக்குகிறது. மதுவின் அளவு இரத்தத்தில் 0.10 சதவிகிதம் மேற்பட்டால் மயக்க நிலை ஏற்பட ஏதுவாகும்.

**சட்டரீதியாக ஓட்டுநர் ஒருவர் பணிபுரியும்போது சிறிதளவுகூட மது அவர் இரத்தத்தில் கலந்த அறிகுறியே இருக்கக்கூடாது. இருந்தால் 'குற்றப்பத்திரிகை' தாக்கல் செய்யலாம். அவரது உரிமம் பறிக்கப்படலாம்.**

குடிபோதையில் வாகனத்தை ஓட்டுவது செக்ஷன் 117 மோட்டார் வாகனச் சட்டப்படி குற்றமாகும். அவை...

சிற்றுந்துகளாக இருந்தாலும் சரி;
சரக்குந்துகளாக இருந்தாலும் சரி;
பேருந்துகளாக இருந்தாலும் சரி;

எந்தவொரு சூழ்நிலையிலும் ஓட்டுநர் மதுவருந்தி ஓட்டுவது பெருங்குற்றமாகும். வாலிபர்களானாலும், வயதானவர்களானாலும் மதுஅருந்தி வாகனத்தை ஓட்டுவது முடியாத, இயலாத காரியமாகும். அதனால் பொதுச்சேவைக்கென்றே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஓட்டுநர்கள் மது அருந்துவதை நிறுத்தி, தமது குடும்பத்திற்கும், தாய் நாட்டிற்கும் நன்மை செய்தல்வேண்டும்.

**மோட்டார் வாகனச் சட்டம் 71**

**வரையறுக்கப்பட்ட வேகக்கட்டுப்பாடு எல்லைகள்**

**வாகனங்கள் — நகர்ப்புறங்கள் — மற்ற புறநகர்கள்**

சிற்றுந்துகள் 50 கி.மீ. எல்லை
(கார், டாக்சி, இல்லை
மோட்டார் சைக்கிள்)

பேருந்துகள் 35 கி.மீ. 60 கி.மீ.
(பயணிகள் பேருந்து)



**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர் சங்கப் பிரதிநிதிகள் 12.8.92 அன்று அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்கள்.**

சிறுவாகனங்கள் 35 கி.மீ. 50 கி.மீ.

நடுத்தரச் சரக்குந்துகள் 35 கி.மீ. 50 கி.மீ.
(டெம்போக்கள்)

கனரகச் சரக்குந்துகள் 35 கி.மீ. 50 கி.மீ.
(லாரி-டிரக்)

இவை அல்லாத வாகனங்கள் 20 கி.மீ. 30 கி.மீ.

இந்த வரையறுக்கப்பட்ட வேகத்திற்குமேல் வாகனத்தை ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும்.

**போதையில் மூடிய பாதை**
**(உண்மைச் சம்பவம்)**

குடிபோதையினால் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று மேட்டுப்பாளையம் சாலையில் நீலமலைராணியின் நுழைவு வாயிலில் நிகழ்ந்தது. அன்றையதினம் மாலை மணி 3.30. கோலமிகு குன்னூரை நோக்கி மேட்டுப்பாளையத்திலிருந்து பயணிகள் பேருந்தொன்று பாங்காகச் சென்று கொண்டிருந்தது.

அதே நேரத்தில் உதகையிலிருந்து கீழ்நோக்கி நன்கு பாரமேற்றப்பட்ட 'சரக்குந்து' ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. பேருந்தானது 'தூரிப்பாலம்' எனப்படும் ஒரு வாகனம் மட்டுமே செல்லக்கூடிய வழியினைக் கொண்ட இரும்பு இணைப்புப் பாலத்தை நெருங்கியதும், முறைப்படி முன்னால் வாகனம் ஏதாவது வருகின்றதா?... ஏதாவது 'ஹார்ன்' சப்தம் கேட்கின்றதா?... என்பதை நன்கு தெரிந்து, உறுதி செய்தபின்னர், ஓட்டுநர் பாலத்தைப் பயன்படுத்தினார். பாலத்தின் முக்கால் பாகத்தையும் கடந்துவந்து கொண்டிருக்கும்பொழுது, உதகையிலிருந்து கீழ் நோக்கி வரும் சரக்குந்து நிற்காமல், வேகத்தையும் குறைக்காமல் பாலத்தை நெருங்குவதை உணர்ந்த பேருந்தின் ஓட்டுநர் உடனே ஒலி கொடுத்தார். முகப்பு விளக்கினை ஒளிரவிட்டார்.... இருந்தும் என்ன பயன்?... தொடர்ந்து இரண்டு மூன்று நாள் ஓடியதனால் அசதியாக இருக்கிறது. மலைவழித் தடத்தில் கை, கால்களுக்கு வேலை அதிகமாக இருக்கிறது என்று அந்தச் சரக்குந்து ஓட்டுநர் 'மது' அருந்தி இருந்தார்.

அதனால் கண்பார்வை செயல்படும் தன்மை முடிவெடுக்கும் தன்மை, உடல் உறுப்புக்கள், உணர்வுகள் மயங்கிய நிலையில், ''மேலே வரும் வாகனங்களுக்கு வழிவிட வேண்டும்'' என்கிற சாலை விதியினையும் அனுசரிக்காமல், சாலை எச்சரிக்கைச் சின்னத்தையும் பார்க்காமல், ஒரு பேருந்து மட்டுமே செல்லக்கூடிய பாதையினைக் கொண்ட பாலத்தில் முழுவதும் கடந்துவிட்ட பேருந்து செல்ல வழிவிடாமல், எதிர்பார்க்கும் தன்மையை இழந்து புகுந்துவிட்டார்..

விளைவு...? மகப் பயங்கரமாக... மயிர்க்கூச்செறியும்படியாக நிகழ்ந்துவிட்டது. சரக்குந்தானது பாலத்தின்மீது மோதி இரும்புக் கிராதிகளின் மீதேறி, பயணிகள் பேருந்தின்மீது சாய்ந்துவிட்டது. பேருந்தின் ஓட்டுநர் மிகவும் சாதுரியமாக, லாவகமாகப் பேருந்தை நிறுத்திவிட்டார். இல்லையெனில் பல விலை மதிப்பில்லாத உயிர்கள் அங்கே பலியாகி இரத்த ஆறு ஓடியிருக்கும்.

இதனால் அன்றையப்பொழுது அனைத்து வாகனங்களும் அந்த வழியில் செல்லமுடியாமல் 100 கி.மீ. அதிகமான மாற்றுவழியில் திருப்பிவிடப்பட்டன. அதனால் எத்தனைப் பேருக்குச் சிரமம்! எவ்வளவு வேதனை!!

அத்தனையும் - மது அருந்திய அந்த ஓட்டுநராலன்றோ உணர்வுகளை, உடமைகளை, இழக்க நேர்ந்தது... அது மட்டுமா?

ஆயிரமாயிரம் வாகனங்களுக்கு வீணான எரிபொருள் செலவு...

அவசர வேலை நிமித்தம் பயணம் செய்வோருக்கு உரிய நேரத்தில் போய்ச் சேரமுடியாமை...

பொதுவுடமைப் பொருட்கள் சேதம்!!

அத்தனையும் குடியைக் கெடுக்கும் குடியினால் வந்ததன்றோ! ஆகவே, குடிப்பதை நிறுத்துவோம்! குடிகளைக் காப்பாற்றுவோம்!!

**தகவல்:**
**சேரன் போக்குவரத்துக் கழகம்.**

# செங்கல்பட்டு-
# எம்.ஜி.ஆர் மாவட்டத்தில்
# விளாகம்
# மாதிரி கிராமம்

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும், மிகவும் பின் தங்கிய மற்றும் வறுமைக்கோட்டிற்கும் கீழே வாழும் அதிகமாக நெசவுத்தொழில் செய்யும் மக்களைக் கொண்ட 25 கிராமங்களை மாதிரி கிராமங்களாகத் தேர்வு செய்து அக்கிராமத்தினருக்குக் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களை வறுமைக் கோட்டிற்கும் மேலே கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் தமிழ்நாட்டிலேயே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில், செங்கல்பட்டு வட்டத்தைச் சேர்ந்த 'விளாகம்' கிராமம் மாதிரி கிராமமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இக்கிராமம், திருக்கழுக்குன்றம் கருங்குழிச் சாலையில் 10-வது கிலோ மீட்டரில் பிரியும் கிளைச் சாலையில் 2-வது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது.

**விளாகம் - ஒரு கண்ணோட்டம்**

விளாகம் கிராமத்தில் மொத்தம் 269-குடும்பங்கள் உள்ளன. 193 குடும்பங்கள் கிராமத்தின் மத்தியிலும் 76 குடும்பங்கள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலும் உள்ளன. ஆண்கள் 564 பேர்களும், பெண்கள் 460 பேர்களும், குழந்தைகள் 393 பேர்களும் உள்ளனர். தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் 76 குடும்பங்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 64 குடும்பங்களும், பிற்படுத்தப்பட்டோர் 114 குடும்பங்களும் இதர வகுப்பினர் 15 குடும்பங்களும் உள்ளனர். உடல் ஊன முற்றோர் 6 பேர்களும், விதவைகள் 13 பேர்களும் உள்ளனர். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 555 பேர்களும், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 584 பேர்களும் உள்ளனர்.

50 குடும்பத்தினர் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். 70 நபர்கள் வங்கிக் கணக்கு வைத்துள்ளார்கள். 138 வீடுகள் மின்சார வசதியைப் பெற்றுள்ளன. 247 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். 66 நபர்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். 2 நபர்கள் விசைத்தறி வைத்து உள்ளனர். 66 நபர்கள் சொந்தத் தறிகள் வைத்து உள்ளனர். 83 நபர்கள் நெசவுக் கூலி வேலைகள் செய்கிறார்கள். 263 நபர்களுக்குச் சொந்தமாக வீடுகள் உள்ளன. இவர்கள் 194 கால்நடைகளையும், 50 பறவைகளையும் வைத்துள்ளனர்.

ஆண்டு வருமானமாக 125 குடும்பங்கள் ரூ.4,000-க்குள்ளும் 83 குடும்பங்கள் ரூ.4,000 முதல் ரூ.6,000-க்குள்ளும், 36 குடும்பங்கள் ரூ.6,000 முதல் 8,500-க்குள்ளும், 17 குடும்பங்கள் ரூ.8,500 முதல் 11,000- க்குள்ளும், 8 குடும்பங்கள் ரூ.11,000-மும் அதற்கு மேலும் பெற்று வருகின்றன.

**திட்டங்களைச் செயல்படுத்த அலுவலர்கள் குழு**

இக்கிராம மக்களை, வறுமைக் கோட்டிற்கும் மேலே கொண்டு வந்து சேர்த்திட கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களைத் தலைவராகவும், உதவி இயக்குநர், துணை இயக்குநர் மாநில அளவிலான நெசவாளர் சேவை மையம், முதன்மைக் கல்வி அலுவலர், நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மாநிலக் கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகியோரை உறுப்பினர்களாகவும் உதவி இயக்குநர் கைத்தறி நூல் மற்றும் துணிநூல் துறை அவர்களை அமைப்பாளராகவும் கொண்டு செயல்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தனியார் தறி முதலாளிகளின் பிடியில் சிக்கி, மிகவும் குறைந்த கூலிக்கு நெசவு செய்து அதனால் சொற்ப வருவாய் பெற்று வாழும் நெசவாளிகளின் வருமானத்தை உயர்த்தவும், வருவாயை நிரந்தரமான மற்றும் நம்பகமானதொன்றாக மாற்றிடவும் இவர்களையும் கூட்டுறவின் கீழ் கொண்டு வருவது இன்றியமையாதது என்று தீர்மானிக்கப்பட்டது. இக்கிராமத்தின் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி ரூ.25 இலட்சம் அரசு திட்டத் தொகையாக ஒதுக்கீடு செய்து பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

கோட்டப் பொறியாளர் சர்க்கரை அபிவிருத்தித் திட்டம், கடலூர் மூலம், நெடுஞ்சாலையிலிருந்து விளாகம் கிராமத்திற்கு 3 கி.மீ.

ஆ. கோபாலன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்
மாவட்டம்



• விளாகம் கிராமத்தின் ஒரு தோற்றம்

தூரம் சாலை வசதி செய்யப்பட உள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் மூலம் விளாகம் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிதண்ணீர் இணைப்பு செய்துதர நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. விளாகம் கிராமத்திற்கு 3 கி.மீ. தொலைவில் உள்ள வள்ளிபுரம் ஆரம்பச் சுகாதார நிலையத்தின் விரிவாக்க மையம் ஒன்று தொடங்கவும், பேருந்து வசதியும் இக்கிராமத்திற்கு அதிகப்படுத்தப்படும். தற்போது உள்ள ஆரம்பப் பள்ளியை நடுத்தரப் பள்ளியாக ஆக்க நடவடிக்கை எடுக்கப்படும். தொலைபேசியுடன் தந்தி வசதி கொண்ட ஒரு கிளை அஞ்சல் நிலையம் ஒன்று தொடங்கப்படும்.

பொழுதுபோக்கு வசதிக்காக வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டி வைப்பதற்காக • சிறிய கட்டடம் ஒன்றும், படிப்பதற்கான பொது நூலகத்திற்குச் சிறிய கட்டடம் ஒன்றும் கட்டிச் செயல்படுத்தப்படும். கால்நடை மருத்துவ வசதிக்கு, தற்போது வள்ளிபுரத்தில் இயங்கிவரும் கால்நடை மருத்துவ நிலையத்திலிருந்து இக்கிராமத்திற்கெனக் கிளை அமைத்து மருத்துவ வசதி ஏற்படுத்தவும் கூட்டுறவு விரிவாக்க அலுவலர் மூலம் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கவும், நடவடிக்கை எடுக்கப்படும்.

கைத்தறித்துறையில் தற்போது புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தகுதி வாய்ந்த புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் தகுதியற்றவர்களுக்கு நெசவுப் பயிற்சியளிக்கவும் உறுப்பினர்களுக்கு வீட்டு வசதியளிக்கவும் அவர்களின் சராசரி வருமானத்தை உயர்த்தவும் தகுந்த ஏற்பாடுகள் செய்து தர, காஞ்சிபுரம் சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் குறைந்த பட்சம் ஐந்து சென்ட் நிலமுள்ளவர்களுக்கு இலவசமாகப் புல்விதை வழங்கி வளர்ந்த புல்லை விலைக்குக் கொள்முதல் செய்து இக்கிராமத்தவருக்கு உதவ முடிவு செய்யப்பட்டது. முதியோர் கல்வி வசதி செய்யவும், பட்டுப்புழு வளர்த்து வருவாய் பெறவும், வருவாய்த்துறையின் சார்பில் தகுதி வாய்ந்த நபர்களுக்குக் குடும்ப அட்டை வழங்கவும் பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். சமூகக் காடுகள் வளர்ப்பின் கீழ் இக்கிராம மக்களுக்குத் தென்னை, பப்பாளி, தேக்கு, முருங்கைக் கன்றுகள் பயிர்செய்ய இலவசமாக வழங்கப்படும். குறைந்தது 2 மாடுகளுக்கு மேல் வைத்து இருப்பவர்களுக்குச் சாண எரிவாயு வசதி செய்யப்படும். சமூக நலத்துறையின் சார்பில், அனைத்து நலத்திட்ட உதவிகளையும், அதை எப்படிப் பெறவேண்டும் என்று கிராம மக்களுக்கு அறிவித்து உதவிகள் செய்யப்படும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அனைத்து நலத்திட்டங்களும் இக்கிராம மக்களுக்குச் சென்றடையும் வகையில் செயல்படுத்தப்படும்.

**விளாகம் கிராம மக்களை மேம்படுத்த மேம்பாட்டுத் திட்டங்கள்**

மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் மூலம் 40 நபர்களுக்குக் கைத்தறிகள் வழங்கவும், 5 நபர்களுக்கு





● விளாகம் கிராமம் மேம்பாட்டுப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அலுவலர்கள்.

விசைத்தறிகள் வழங்கவும், 33 நபர்களுக்கு வீடு கட்டவும், உதவிட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 37 நபர்களுக்கு ஆடுகள் வாங்கி வளர்த்து ஆட்டுப்பண்ணை வைக்கவும், 28 நபர்களுக்குப் பால் மாடுகள் வாங்கவும், 2 நபர்களுக்கு மாடுகளுடன் டயர் வண்டி வழங்கவும் 3 நபர்களுக்குச் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி வழங்கவும் ஒருவருக்குப் பவர் டிரில்லிங் கொடுக்கவும், 4 நபர்களுக்குப் பம்ப்செட் வைக்கவும், ஒரு நபருக்குத் தச்சுத் தொழில் கருவி களும், 3 நபர்களுக்கு வாத்துகள் வாங்கவும், 3 நபர்களுக்குச் சலவைக் கருவிகள் பெறவும், 2 நபர்கள் காய்கறிக் கடைகள் வைக்கவும், 2 நபர்கள் ஆயில் என்ஜின்கள் வாங்கவும், ஒருவர் டிராக்டர் வாங்கவும், 2 நபர்கள் இட்லி கடை வைக்கவும் உதவிடத் திட்டமிடப்பட்டு, செயலாக்கம் பெற்று வருகிறது.

இக்கிராமத்தில் உள்ளவர்களுக்குச் சொந்தமாக வீடுகள் கட்டக் கடன் தொகையும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகிறது. பட்டு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வீட்டிற்கு 10 மரக் கன்றுகள் இலவசமாகக் கொடுத்து வளர்க்கப்பட உள்ளது. மாடுகள் அதிகம் வளர்க்கும் குடும்பத்தினருக்கு 'பையோகாஸ்' அமைக்க மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படவுள்ளது. மண்சாலைகள் அனைத்தும், மெட்டல் சாலைகளாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் வசிக்கும் வில்லியர்கள் எனும் பழங்குடி மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது. அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படவுள்ளது. இத்தகைய திட்டங்களினால் வறுமைக்கோட்டிற்கும் கீழே இருந்து ஏழ்மையில் உழன்று வாடிக் கொண்டிருக்கும், விளாகம் கிராமத்து மக்களுக்கு ஒரு விடிவுகாலம் காத்து இருக்கிறது.

★ இந்தியாவில், சராசரியாக, தனி நபர் சமையல் எண்ணைய் நுகர்வு ஆண்டொன்றுக்கு 7.14 கிலோவாகும். உலக சராசரி 14.5 கிலோவாகும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் நிலையான வளர்ச்சி காணப்பட்டாலும், சமையல் எண்ணெய்த் தேவைக்கும் விநியோகத்துக்கும் இடையே பெரிய இடைவெளி காணப்படுகிறது.

1990-91-இல் பற்றாக்குறை ஆறு இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. நடப்பு நிதியாண்டில் இது ஏழு இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இடைவெளியைப் போக்க அரசு சமையல் எண்ணையை இறக்குமதி செய்தது. 1989-90-இல் 6.07 இலட்சம் டன்னும், 1990-91-இல் 1.08 இலட்சம் டன்னும் இறக்குமதி செய்யப்பட்டது.

# நம்மை வாழவைக்கும் பூண்டு!



எஸ். அனந்தகுமார்,
தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையம்,
புதுக்கோட்டை-622 303.

நமது உணவில் வெள்ளைப் பூண்டு முக்கியப் பங்கு வகிக்கிறது. இது உணவில் மணத்திற்காகவும், சில மருத்துவப் பயன்களுக்காகவும் சேர்க்கப்படுகிறது.

முற்காலத்திலிருந்தே நமது முன்னோர்கள் வெள்ளைப்பூண்டின் பெரும்பயனை உணர்ந்து சமையலுக்கும், மருந்துக்கும் பயன்படுத்தி இருக்கிறார்கள். வெள்ளைப்பூண்டின் பிறப்பிடம் ஆசியா. முதலில் சீனாவிலிருந்து, ஸ்பானிஷ்காரர்கள், போச்சுகீசியர், பிரெஞ்சுக்கார்கள் இதைத் தங்கள் நாட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். அதன் பின் வெள்ளைப் பூண்டு உலகம் முழுவதும் பரவியது.

பூண்டிலிருந்து 'அல்லிசாடின்' என்ற மருந்தைத் தயாரிக்கிறார்கள். நாட்டு வைத்தியத்தில் பூண்டிலிருந்து மாத்திரைகள், லேகியங்கள், தைலம் ஆகியவை தயாரிக்கப்படுகிறது.

பூண்டில் காரம் இருக்கிறது. ஒரு வித நெடி உள்ளது. நமக்கு ஏற்படும் பலவித நோய்களைக் குணமாக்கும் மருத்துவச் சக்தி பூண்டுக்கு உள்ளது. வெள்ளைப்பூண்டு உடலுக்கு உற்சாகம் தருகிறது. கண் நலம் பேணுகிறது. செரிமான சக்தியைத் தூண்டுகிறது. இருதய பலத்திற்கும், வாத நோயைக் குணப்படுத்தவும் உதவுகிறது. வாயு தொந்தரவு, மலச்சிக்கல், மூல நோய்களுக்குச் சிறந்த மருந்தாகப் பயன்படுவதோடு மட்டுமின்றி, இரத்த அழுத்தம், சுவாசக் கோளாறுகளை நீக்குகிறது. வெள்ளைப்பூண்டிற்குப் பாக்டீரியாவை அழிக்கும் சக்தி உள்ளது. டைபாய்டு, காலரா மற்றும் தோல் நோய்களைக் குணமாக்குகிறது. சிறுநீரை அதிகரிக்கிறது. சீதபேதி, உஷ்ண பேதியை நீக்குகிறது.

★ பூண்டைத் தட்டி ரசம் செய்து, சாதத்தோடு சாப்பிட்டால் கபம் குறையும்.

★ பூண்டை வதக்கிப் போட்டு, வற்றல் குழம்பு செய்து சாப்பிட - குளிரால் ஏற்படும் தொல்லைகள் நீங்கும்.

★ பூண்டுடன் சிறிது ஓமத்தை நசுக்கிப் போட்டு, கசாயம் வைத்துக் குழந்தைகட்குக் கொடுக்க குழந்தைகளின் வாந்தி, கொட்டாவி குறையும்.

★ வெற்றிலைக் காம்பு, வசம்பு, திப்பிலி, பூண்டு இவைகளைச் சம அளவு எடுத்து வெந்நீரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்க - குழந்தைகளின் மாந்தம் குறையும், சளித் தொல்லையும் குறையும்.

★ பூண்டுச் சாற்றைக் காதில் இரு துளிகள் விட, காதுவலி குணமாகும்.

★ பூண்டுச் சாற்றில், சிறிது உப்பு கலந்து - உடம்பில் எங்கேனும் சுளுக்கு ஏற்பட்ட இடத்தில் பூசினால் சுளுக்கு மறையும்.

★ வெறும் பூண்டுச் சாற்றை தடவி, நீவி விட்டாலும் சுளுக்கு மறையும்.

★ காய்ச்சிய பசும்பாலில் இரண்டு, மூன்று பூண்டைப் போட்டு பருக நன்கு தூக்கம் வரும், ரத்தக் கொதிப்பு அடங்கும்.

★ பசும்பாலில், பூண்டை வேக வைத்து அப்பூண்டைச் சாப்பிட்டு பாலைக் குடித்தால் வாய்வுத் தொல்லை குறையும், ஈசினோபிலியா குறையும்.

★ பூண்டுத் தைலத்தை உடலில் தேய்த்து வர சருமத்தில் ஏற்படும் நமைச்சல், அரிப்பு மறையும்.

★ பூண்டு - கபத்தை வெளியேற்றும், மலத்தை இளக்கும்.

★ வெள்ளைப் பூண்டு, வசம்பு, ஊமத்தை வேர் இவைகளைச் சம அளவு எடுத்து, நன்கு அரைத்து, நல்லெண்ணையில் கலந்து, காய்ச்சி, நன்கு சிவந்து வரும்போது இறக்கி விடவும். இந்த எண்ணெய்யை ஆறாத புண்கள், காயத்தின் மேல் பூசினால் ஆறிவிடும்.

★ பூண்டையும், குப்பைமேனி இலையையும் அரைத்துச் சாறு எடுத்து, இச்சாறைக் குழந்தைகட்குக் கொடுக்க, வயிற்றிலுள்ள பூச்சிகள் வெளியே வந்துவிடும்.

★ பூண்டைப் பொன்னாங்கண்ணிக்

கீரையோடு சேர்த்து சாப்பிட மூல நோய் நீங்கும்.

★ பூண்டில், சிறிது எலுமிச்சை சாறுவிட்டு அரைத்து இருவேளை சாப்பிடக் கீல் வாதம் குணமாகும்.

★ பூண்டையும் - துத்தி இலையையும் சேர்த்து, லேசாக நசுக்கி, நல்லெண்ணையில் போட்டுக் காய்ச்சி, எண்ணையை முகப்பருவில் தடவ, முகப் பரு மறையும்.

★ பூண்டு, மிளகு, துத்தி இலை இவைகளை, ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து, இத்தோடு 15 கிராம் வசம்பு சேர்த்து நன்றாக அரைத்துப் பெண்கள் சூதக காலத்தில் சாப்பிட, சூதக வலி வராது.

★ பூண்டு, மிளகு, கரிசலாங் கண்ணிக் கீரை மூன்றையும், அரைத்துக்காலையில்மட்டும் மூன்று நாட்கள் நெல்லிக்காய் அளவு சாப்பிட சோகை நோய் குணமாகும்.

★ அரைக்கீரையோடு, பூண்டு, சீரகம், பச்சை மிளகாய் சேர்த்து, புளி சேர்க்காமல், சமையல் செய்து சாப்பிட வாயுத் தொல்லை நீங்கும்.

★ பூண்டு பல் ஒன்றை சுட்டு சிறிது சர்க்கரை சேர்த்துப் பாலில் இட்டுக் காய்ச்சி குழந்தைகட்குக் கொடுத்து வர கபம் நீங்கும்.

★ பூண்டைப் பச்சையாகச் சாப்பிட வாதநோய் நீங்கும்.

★ ஏதாவது விஷப் பூச்சிகள் கடித்து விட்டால், கடித்த இடத்தில் பூண்டை அரைத்துக் கட்ட விஷமிறங்கும்.

★ பூண்டை நசுக்கி, சாறெடுத்து, சாலை உள் நாக்கில் தடவ, உள் நாக்கு வளர்ச்சி குறையும்.

★ பூண்டு சாறையும், இஞ்சிச் சாறையும் சம அளவு கலந்து காலை, மாலை மூன்று நாட்கள் சாப்பிட நெஞ்சுக் குத்து நீங்கும்.

★ ஒரு வெள்ளைப்பூண்டு, 7 மிளகு, 9 மிளகாய் இலை இவைகளைச் சேர்த்து அரைத்து காலை, மாலை சாப்பிட்டால் குளிர் காய்ச்சல் போய்விடும்.

★ பூண்டு, வசம்பு, ஓமம் இவைகளைச் சம அளவு எடுத்து - இடித்து மூன்று நாட்கள் சாப்பிட மாந்த ஜன்னி குறையும்.

★ பூண்டைப் பொடி செய்து, தேனில் குழைத்து தலை, புருவத்தில் பூச்சிவெட்டு ஏற்பட்டு, முடி வளராமலிருக்குமிடங்களில் தேய்த்து வர முடி வளரும்.

★ பச்சைப் பூண்டை உண்பதால் உடல் பலம் பெறும், உற்சாகம் ஏற்படும். அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுவலி மறையும், புளிப்பால் உண்டாகும் எரிச்சல் நீங்கும். ரத்த அழுத்தம் குறையும்.

★ பூண்டை, சுண்ணாம்பு நீரில் நனைத்துக் கட்ட நகச்சுற்று குறையும்.

★ பூண்டை நெய்யில் வறுத்து, உணவு உண்ணும்போது, சாதத்தில் சேர்த்து 40 நாட்கள் சாப்பிட - வாய்வுத் தொல்லை மறையும்.

★ பூண்டுச் சாற்றையும், எலுமிச்சம் பழச்சாற்றையும் சேர்த்து, குழைத்துத் தொடை இடுக்குகளில் ஏற்படும் கக்கூஸ் படையில் தடவ, படை மறைந்துவிடும்.

★ வெள்ளைப் பூண்டு-2, வெற்றிலை-2-ம், சேர்த்து அரைத்து தேமல் மேல் தேய்த்துவரத் தேமல் மறைந்து விடும்.

★ பூண்டை நசுக்கி, நீரில் கரைத்து நல்ல பாம்பு இருக்குமிடங்களில் தெளித்தால் அந்த நெடியில் பாம்பு ஓடிவிடும்.

★ பூண்டு உடல் வலியைப் போக்கும். பூண்டை, வெல்லத்தோடு சேர்த்து கொடுத்தால் உடல் வலி மறையும்.

★ பூண்டுச் சாற்றை டி.பி. நோயாளிகள் பருகி வந்தால், டி.பி. குறையும்.

★ பூண்டையும், சிறிது உப்பையும் சேர்த்துத் தின்றால் - திடீரென ஏற்படும் வயிற்றுவலி, நெஞ்சு எரிச்சல், நெஞ்சுக் கரிப்பு குறையும்.

- நன்றி: 'நில வளம்'

## மூலிகைச் செடி

நாட்பட்ட நோய்கள் பல, நாட்டு வைத்திய முறையின்படி, பச்சிலைகளையும், மூலிகைகளையும் கொண்டு குணமாக்கப்பட்டு வருகின்றன. அந்த மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கு அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாகப் பல்வேறு மாநிலங்களில் கூடுதலாக 22,206 எக்டேர் நிலப்பரப்பில் மூலிகைச் செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதற்காகச் சுற்றுச் சூழல் - வனத்துறை அமைச்சகம் அந்த மாநிலங்களுக்கு 14.16 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரம், பஞ்சாப், மேற்கு வங்காளம், ராஜஸ்தான், ஒரிசா, பீகார், அரியானா, ஜம்மு-காஷ்மீர், குஜராத், மத்தியப் பிரதேசம், அருணாசலப் பிரதேசம், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோராம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா மாநிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, மூலிகைச் செடிகள் பயிரிடப்பட்டு வருகின்றன.

## சுகாதாரம்



● கி.பி.2000-வது ஆண்டுக்குள் அனைவருக்கும் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதற்காக 1983-ஆம் ஆண்டின் தேசிய சுகாதாரக் கொள்கை விரிவாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ரூ.100 கோடி செலவில் குழந்தை பிறப்பு மற்றும் பராமரிப்பு சம்மந்தமான மையமொன்றை இந்தியாவில் நிறுவ ஜப்பான் திட்டமிட்டுள்ளது. ரூ.250 கோடி செலவில் 13 மாநிலங்களில் உள்ள 143 மாவட்டங்களில் தொழுநோய் ஒழிப்புத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கி.பி.2000-ஆம் ஆண்டுக்குள் தொழுநோய் ஒழிப்பு இலக்கினை எட்ட வாய்ப்புள்ளது. பார்வை இழப்புக் கட்டுப்பாடு திட்டத்திற்காக உலக வங்கி ரூ.250 கோடியை இந்தியாவிற்கு அளிக்கும். அமெரிக்க நாட்டு உதவியுடன் ரூ.800 கோடி செலவில் புதிய முறையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.



# தமிழ்த் தென்றல்

# திரு.வி.க

புலவர் புனிதவதி நமசிவாயம்

தமிழகத்தில் அரசியல் கருத்துக் களை அழகிய தமிழில் எழுத முடியும், பேசமுடியும் எனத் 'தேச பக்தன்' இதழின் வாயிலாகத் தமிழகத்திற்கு எடுத்துக் காட்டியவர் தமிழ் முனிவர் திரு.வி.க. அவர்கள். தமிழ்த் தென்றல், இராயப்பேட்டை முனிவர்; தேசபக்தன் முதலியார்; என்றெல்லாம் தமிழர்கள் செல்ல மாக அழைத்தார்கள் இவரை.

இந்தியா அந்நிய ஆதிக்கத்தினின் றும் விடுதலை பெற்ற திங்கள் ஆகஸ்ட் திங்கள். இச்சிறப்பு மிக்க ஆகஸ்ட் 26, 1883-இல் திரு.வி.க. தம் தாய் தந்தையர்க்கு ஆறாவது பிள்ளையாகப் பிறந்தார். வறுமைச் சூழலில் வாணிபம் செய்யத் திரு வாரூரிலிருந்து சென்னைக்கு அருகே உள்ள துள்ளம் எனும் கிராமத் திற்குக் குடியேறினர், பெற்றோர். அங்கு தான் திரு.வி.க. பிறந்தார். துள்ளத்தில் பிறந்தவராயினும் முன்னோர் பிறந்த ஊரின் பெய ரையே தம் பெயர் முன் இட்டு மகிழ்வார். திருவாளர் திருவாரூர் வி. கல்யாணசுந்தரம் என்றே தம் நூற்களில் குறிப்பர்.

இவரின் தாயின் பெயர் சின்னம்மாள், தந்தையின் பெயர் விருத்தாசலனார். திரு.வி.க.-வின் வளர்ச்சி, வாழ்க்கை பல விதமான சோதனைக்கு இலக்காகியது. முதலில் வறுமைச் சூழலில் நிலவியது. தந்தை யின் தளராத உழைப்பால் வாழ்க்கை நடைபோட்டது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்காகத் திரு.வி.க.-வின் குடும்பம் சென்னை இராயப்பேட்டையை நாடியது. அரிசி மண்டி வைத்து வாழ்ந்தனர். இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரி யில் மெட்ரிகுலேஷன் வரை பயின் றார். அப்பள்ளியில் தமிழாசிரிய ராய் விளங்கிய யாழ்ப்பாணம் ந. கதிரைவேற்பிள்ளை தொடர்பு ஏற்பட்டது. கதிரைவேற்பிள்ளை வழக்கு ஒன்றில் சான்று கூறச் சென்றதால் திரு.வி.க.-வின் தேர்வு தடைப்பட்டது.

திரு.வி.க. அவர்கள் ந. கதிரை வேற்பிள்ளை அவர்களிடம் சில தமிழ் நூல்கள் பாடங்கேட்டார், மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார், யாழ்ப்பாணம் சுவாமி நாத பண்டிதர், திருக்குறள் சிதம்பர முதலியார், மறைமலையடிகளார் முதலியவர்களிடம் தமிழ் நூல்கள் பயின்றார். மற்றும் இவர் கடலங் குடி நடேச சாஸ்திரியார், பாம்பன் சுவாமிகள், அயோத்தியதாஸ் பண்டிதர், சக்ரவர்த்தி நாயனார், அப்துல் கரீம், ச. சச்சிதானந்தம் பிள்ளை ஆகியோர் தொடர்பால் பல்கலைச் செல்வரானார்.

இவர் ஸ்பென்சர் அண்டு கம் பெனியில் சிறிது காலம் பணி செய் தார். பின்னர் தாம் பயின்ற வெஸ்லி கல்லூரியிலேயே தமிழ்

ஆசிரியராய் அமர்ந்தார். சிறந்த ஆசிரியராகப் புகழ் பெற்றார். இவரது அடிமனம், தேசப்பற்று, தேச சேவையில் ஈடுபட்டது. காரணம் பள்ளிப் படிப்பு நின்றதும் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையிலும் திருவல்லிக் கேணி சிவனடியார் திருக்கூட்டத் திலும் சேர்ந்து தொண்டு செய்தார். அதுவுலல்லாது ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரிடமும் அன்னிபெசன்ட் அம்மையாரிடமும், எஸ். சீனிவாச அய்யங்காரிடமும் நெருங்கிப் பழகிப் பல பொதுத் தொண்டு களில் ஈடுபட்டார்.

பொதுத்தொண்டு, தேசபக்தி காரணமாகத் தமிழ் ஆசிரியர் பதவி யினின்றும் விலகினார். உடன் 'தேசபக்தன்' இதழின் ஆசிரியராய் அமர்ந்தார். இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னர் 'நவசக்தி' எனும் இதழினைத் தோற்றுவித்தார். இவ் விதழ்களில் அரசியல் கருத்துக்களைத் தமிழில் நன்கு விளக்க முடியும் என்ற நிலையில் சிறந்த முறையில் நடத்தினார். அதில் அரசியல் அறிவோடு கலைச் செல்வத்தையும் வழங்க முற் பட்டார். சிறப்புமிக்க தலையங் கங்கள் எழுதுவதில் மிக வல்லவர். இவரது தலையங்கத்தை மட்டும் படிப்பதற்கென்றே நவசக்தி இதழி னைத் தவறாது படித்தவர்கள் பலர். நவசக்தி இதழ் சிறப்பாக வெளி வந்ததற்கு மூல காரணம் இவரது சகோதரர் திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் 'சாது அச்சுக் கூடம்' என்ற சிறந்த அச்சகம் ஒன்றை நடத்தி வந்ததே.

இவர் கமலாம்பிகை எனும் அம்மையாரை *1912*-இல் மணந்து ஆறு ஆண்டுகள் குடும்ப வாழ்க்கை நடத்தினார். ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றும் பிறந்து மறைந்தன. துணைவியாரும் மறைந்தார். மறுமணம் செய்து கொள்ளவில்லை.

என் கடன் பணி செய்து கிடப் பதே என்ற நெறியில் - இவர் பணி இடைவிடாது தமிழ்த் தொண்டு, சமூகத் தொண்டு, அரசியல் தொண்டு தொழிலாளர் தொண்டு, சமயத் தொண்டு எனப் பல்வேறு துறை களில் சிறந்து விளங்கியது.

திரு.வி.க. அவர்களின் தேசியம் இறைவழி நிற்கும் அரசியல் வாழ்வு.

> ● பசி, வறுமை, சுகாதாரக் குறைவு, எழுத்தறிவின்மை, மூடநம்பிக்கை, மூடப்பழக்கங்கள், பரம்பரை வழக்கங்கள் என்ற கனமான சுமைகளை விஞ்ஞானம் ஒன்றுதான் நீக்க முடியும்.
>
> - ஜவகர்லால் நேரு.



மகாத்மாவின் அரசியல் வாழ்வும் ஒத்துழையாமை இயக்கமும் சமய வாழ்வின் அடிப்படையில் மலர்ச்சி பெற்றிருந்தன. ஆகவேதான் திரு.வி.க.-விற்கு மகாத்மாவின் நெறியில் கவர்ச்சி ஏற்பட்டு மகாத் மாவை அடிகளாக்கி 'காந்தி அடி களும் மனித வாழ்க்கையும்' என்னும் நூலை இயற்றினார்.

திரு.வி.க. தொழிலாளர் நலனுக் காகவும் அரும்பாடுபட்டார். காரல் மார்க்ஸ் கண்ட பொருட் பொதுமை அறம் இவரைக் கவர்ந்தது. முதலாளி-தொழிலாளி வேற்றுமையைக் களைய முற்பட்டார். திரு. வாடியா எனும் அறிஞரின் உதவியால் *1918*-இல் இந்தியாவிலேயே முதல் தொழிலாளர் சங்கமாகிய 'சென்னைத் தொழிலாளர் சங்கத்தைத்' தோற்று வித்தார். அதன் வளர்ச்சிக்கு அருந் தொண்டுகள் செய்தார். தொழிலாளர் நற்பணியில் தீவிர மாக உழைத்த திரு.வி.க.-வை ஒரு சமயம் ஆங்கில அரசு நாடு கடத்த வும் திட்டமிட்டது. இதனைச் சர் தியாகராயர் தடுத்து நிறுத்தினார் என்பது நினைவு கூரத்தக்கது.

மகளிர் சமுதாயம் சிறந்து விளங்க இவர் புரிந்த தொண்டுகள் ஒப்பற்றவை. பெண் பிறவியே உயர்ந்தது என்றும் விழுமிய பண்பு டையது எனவும் அடிக்கடி பேசியும் எழுதியும் வந்தார். மகளிர் சமூகநல அமைப்புகளுக்கு ஆதரவு நல்கினார். இல்லற நெறியே சிறந்த நெறி எனப் போற்றினார். போலித் துறவினைச் சாடினார். தீண்டாமை ஒழிப்பிலும் சாதிவேற்றுமை நீக்கத்திலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். இவைகளைத் தம் பேச்சாலும் எழுத்தாலும் தமிழகம் முழுவதிலும் பரவச் செய்தார்.

தமிழ்நாட்டில் கட்டாய பாடமாக இந்தி மொழி நுழைந்தபோது அதனைத் திரு.வி.க. எதிர்த்தார். இந்தியை எதிர்த்துச் சிறை சென்ற தந்தை பெரியார் அவர்களின் சிறப் பியல்புகளை 'நவசக்தி' இதழில் தலையங்கமாகத் தீட்டி 'சிறையில் கிழச் சிங்கம்' என்ற தலைப்பிட் டார். அரசு இத்தலையங்கத்துக்குப் பணிந்தது.

இளைஞர்களை ஊக்குவித்து அறவழி கூறி அவர்களை இந்த நாட்டின் தலைவர்களாக விளங்கச் செய்ய இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல. இளைஞர் முன் னேற்ற அமைப்புகள் பலவற்றில் ஈடு பட்டிருந்தார்.

திரு.வி.க. அவர்கள் எத்துறை யில் ஈடுபட்டுத் தொண்டு செய்த போதிலும் அன்பு, எளிமை, தூய்மை, பொதுமை ஆகிய நெறிகளே அவரு டைய வாழ்வில் முகிழ்த்தன. இவரு டைய நடை, உடை, பழக்கம் தமிழகம் எங்கும் உள்ள இளைஞர் களையும் தொழிலாளர்களையும் கவர்ந்தன. தூய்மையான இவரது உள்ளத்தை அளந்து கூற இயலாது. இவர் உள்ளத்தின் பொதுமை காலம், இடம், நிறம், சாதி, சமயம், கட்சிக் கருத்து முதலிய பல வேறு பாடுகளைக் கடந்து பலரிடத்தும் அன்பு செலுத்தும் ஆன்மநேயம் ஒருமைப்பாடு உடையது. இயற்கைக் காட்சியில் அதிக ஈடுபாடு. இவர்தம் தமிழ் எழுத்து நடை இவருக்கே உரிய கவிதை நடையாய் விளங்கும். சொற்களில் இனிமை தவழும். மேடைப் பேச்சிலும் கேட்போர் உள்ளத்தைக் கவரச் செய்தார் அரசியல், சமயம், இலக்கியம், சீர்திருத்தம் முதலிய பல துறை களிலும் நூல்கள் செய்துள்ளார். இவரெழுதிய கவிதை நூல்கள் பதி னைந்திற்கும் மேற்பட்டன.

பெரிய புராணத்துக்கும் காரைக் கால் அம்மையார் திருமுறைக்கும் குறிப்புரை, திருக்குறள் பாயிரப்

# சென்னை நகரப் போக்குவரத்துக் காவலர்களுக்கு நவீன மோட்டார் சைக்கிள்

சென்னை நகரப் போக்குவரத்துக் காவலர்களுக்கு நவீன கருவிகள் வாங்க, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, உலக வங்கி மற்றும் தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் சார்பாக சென்னை நகரப் போக்குவரத்துக் காவலர்களுக்கு நவீன கருவிகள் வாங்க ரூ.68 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதன் முதல் கட்டமாக, ரூ.31 இலட்சத்து 86 ஆயிரம் செலவில் நவீன கருவிகள் வழங்கும் விழா அண்மையில் சென்னையில் நடந்தது. இந்த விழாவில் சென்னை நகரப் போக்குவரத்து ஆய்வாளர்கள் மற்றும் துணை ஆய்வாளர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய 35 புதிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நவீன மோட்டார் சைக்கிள்களின் முன் பகுதியில் உயர்ந்த கண்ணாடி பொருத்தப்பட்ட பாதுகாப்பு உறை அமைக்கப்பட்டுள்ளது. முதல்வர் போன்ற முக்கிய பிரமுகர்கள் வருவதைத் தெரிவிக்கும் பொருட்டு முன்பகுதியில் இரண்டு சைரன்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தவிர சுழலும் விளக்குகள், பொது மக்களுக்கு முக்கிய செய்திகளைத் தெரிவிக்கும் பொருட்டு தனியாக 'மைக்' வசதி, ஆவணங்கள் வைக்க வசதியாகத் தனிப்பெட்டி மற்றும் ஒயர்லெஸ் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.



இந்த மோட்டார் சைக்கிள்களை 'என்பீல்டு' நிறுவனம் தயாரித்து வழங்கியுள்ளது. ஒரு மோட்டார் சைக்கிளின் விலை ரூ.35 ஆயிரம் ஆகும்.

பகுதிக்கு விளக்கவுரை இயற்றியுள்ளார் இவர்.

சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து; தமிழ்த் தென்றல், தமிழ்ச் சோலை; முடியா-காதலா சீர்திருத்தமா; இந்தியாவும் விடுதலையும், என்ற நூல்களும்...

முருகன் அல்லது அழகு; மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை; உள்ளொளி; பரம்பொருள் வாழ்க்கை வழி முதலிய அன்னாரின் நூல்களில் மிகச் சிறந்தவை. இப்படிப் பல நூல்கள்.

உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்; முருகன் அருள் வேட்டல், திருமால் அருள்வேட்டல், பொதுமை வேட்டல்; புதுமைவேட்டல்; கிறித்துவின் அருள்வேட்டல்; கிறிஸ்து மொழிக் குறள், இருளில் ஒளி; முதுமை உளறல்; முதலியன இவரது கவிதை நூல்கள்.

தமிழ்மொழி, தமிழர் வாழ்வு நெறிமலர்ந்து செழிக்கப் பல அறிஞர்கள் ஒத்துழைப்போடு 'சென்னைத் தமிழ்ச் சங்கம்' என்ற அமைப்பினைக் கண்டார். அதன் வாயிலாகப் பல்வேறு ஆக்கப் பணிகள் செய்வித்தார். சுமார் 40 ஆண்டுக்காலம் தமிழ்நாடு எங்கனும் சென்று தொண்டாற்றினார். இவரைச் சிலர் பௌத்தர் எனவும் சிலர் சமணர் எனவும், சிலர் கிறிஸ்துவர் எனவும், சிலர் வேதாந்தி எனவும் கூறுவர். ஆனால் இவரது நெறி சமரச சுத்த சன்மார்க்க நெறியின்பாலபட்டது. ஓயாது உழைத்த இவர் தம் வாழ்நாள் முடிவில் இரண்டு ஆண்டுகள் கண் ஒளி மங்கித் துன்பப்பட்டார். மருத்துவம் செய்துகொள்ள மறுத்தார். 17.9.1953-இல் இயற்கை எய்தினார்.

# மதுவினால் ஏற்படும் மலிவான மரணங்கள்!



அ.ப.ஜெயபால்

'குடி குடியைக் கெடுக்கும்' என்னும் விளம்பரங்களின் மூலம் மதுவின் தீமைகள் பற்றி அன்றாடம் பிரச்சாரங்கள் செய்து வந்த போதும் மதுவின் ஆதிக்கம் நாட்டில் அதிகமாகிக் கொண்டே வருகின்றது.

மதுவை அருந்துபவர்களின் வாழ்க்கை நிலை எப்படியிருக்கிறது என்று அறிந்திருந்தாலும் அதனால் ஏற்படுகின்ற கடுமையான விளைவு களைப் பற்றி எவரும் கவலைப் படுவதே இல்லை.

பார்ப்பதற்குத் திடகாத்திரமாக இருப்பார். அவர் தினசரி மதுவை அளவுக்கு மீறி அருந்திவிட்டு மதி மயக்கத்தினால் மற்றவரின் நலனைப் பாதிக்கும்படி நடந்து கொள்வார். ஆனால் பார்ப்பதற்குத் திடகாத்திர மாக இருந்த அவர் திடீர் என்று ஒரு நாள் எதிர்பாராமல் இறந்து விடு கிறார். இவரது இறப்பு இயற்கை யாக ஏற்பட்டது அல்ல! மதுவினால் ஏற்பட்டதுதான். மது தினசரி தன் வாழ்நாளின் கணக்கைக் கழித்துக் கொண்டு வருவதைப் புரியாமல் இருந்தமையால்தான் ஏற்பட்டது.

மது அருந்துவதினால் விரைவில் மரணம் நம்மை அணுகுகிறது என் பதை அறிந்திருப்பார்களானால், நிச்சயமாக அவர்கள் மதுவினை நாடி மதி மயங்கமாட்டார்கள். மது அருந்துவதினால் எப்படி மரணம் ஏற்படுகிறது என்பதை இளைஞர் சமுதாயம் தெரிந்து கொள்ள வேண் டியது அவசியம். ஆகையால் மது வினால் மரணம் எப்படி ஏற்படு கிறது என்பதனைப் பார்ப்போம்.

மது அருந்தும்போது அது தொண்டை, உணவுக் குழாய் ஆகியப் பகுதிகளை மூடியிருக்கும் மெல்லிய ஜவ்வில் இறங்கும்போது எரிச்சல் உண்டாகிறது. வயிற்றில் பாதுகாப்பாக அமைந்துள்ள ஜவ் வில் மது எரிச்சலை உண்டாக்கி இரைப்பையிலும், சிறுகுடலின் முன் பகுதியான டியோடினத்திலும் புண் களை உண்டாக்குகிறது. வயிற்றில் பாதுகாப்பாக அமைந்துள்ள ஜவ் வில் மது எரிச்சலை உண்டாக்கி இரைப்பையிலும், சிறுகுடலின் முன் பகுதியான டியோடினத்திலும் புண் களை உண்டாக்குகின்றது. பின் வயிற்றில் உட் சுவர்களில் சிறுகுடல் பகுதியில் தையாமின், போலிக் அமிலம் கொழுப்பு, வைட்டமின் பி-1, பி-12, அமினோ அமிலங்கள் சிலோஸ் ஆகிய பல ஊட்டச்சத்துக் களை உறிஞ்சாதபடி மது தடுத்து விடுகிறது.

வயிறு டியோடினம் பகுதிகளில் அமைந்த மெல்லிய ஜவ்வினால்



## தனியார் வனங்களிலுள்ள மரங்களை வெட்டுவதற்குக் கட்டுப்பாடு: மாண்புமிகு முதல்வர் உத்தரவு

வனப்பகுதிகளிலுள்ள தனியார் நிலங்களில் மரங்கள் வெட்டுவதற்குக் கட்டுப்பாடு விதித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் சென்னையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற வனத்துறை உயர்மட்ட அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் இதனைத் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, வனத்துறையில் மட்டும் ரூ.17 கோடியே 87 இலட்சம் பெருமானமுள்ள பொருட்கள் பிடிபட்டுள்ளன. வனக் குற்றங்களுக்காக 182 பேர் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். வனத்துறை மேம்பாட்டுக்காக ரூ.1.27 கோடி செலவில் பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வனத்துறையினருக்கு நவீன துப்பாக்கிகள் வாங்க ரூ.18 இலட்சமும், வயர்லெஸ் கருவிகள் வாங்க ரூ.67.90 இலட்சமும், வாகனங்கள் வாங்குவதற்காக ரூ.37 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலங்களில் மரம் வெட்டுவதற்கு அனுமதி அளிப்பதற்கு முன்பு வனத்துறைச் செயலாளரிடம் கலந்து பேசிய பிறகே வனத்துறை அதிகாரிகள் அனுமதி வழங்க வேண்டும்.

மலைவாழ் மக்கள் நலனுக்காக அவர்களுக்கு அதிக விளைச்சல் தரும் புளி, வேப்ப மரக் கன்றுகளை வனத்துறையினர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மரங்கள் 4 ஆண்டுக் காலத்திலேயே பயன் தரத் தொடங்கிவிடும். இந்த ஆண்டு இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்படும். இந்த மக்கள் வனத்துறை விதிமுறைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளப் புத்தகங்கள் தயாரித்து வழங்கப்படும்.

1993-ஆம் ஆண்டுக்குள் அனைத்து வனப் பகுதிகளிலும் வயர்லெஸ் கருவிகள் பொருத்தப்பட வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தேக்கு மரங்களை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை அனுமதி அளிக்கும் எல்லா இடங்களிலும் தேக்கு மரங்கள் வளர்க்கப்படும். இதைத் தவிர விறகுக்காகக் கருவேலம் மரம் போன்ற மரங்களை அதிக அளவில் வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது.

உட்சுவரால் 95 சதவிகிதம் மது ஈர்க்கப்படுகிறது. இரத்த ஓட்டத்தில் மது கலந்த பின் உடலில் உள்ள எல்லாச் செல்களையும், திசுக்களையும் அடைகிறது. மது இரத்தத்தில் சிவப்பு அணுக்களை குவியலாகச் சேர்த்து இரத்த ஓட்ட வேகத்தைக் குறைத்து திசுக்களுக்குப் பிராண வாயு செல்லாமல் தடுத்து விடுகின்றது. மேலும் கிருமிகளுக்கு எதிராகப் போரிடும் வெள்ளை அணுக்களின் சக்தியைக் குறைக்கிறது. சிவப்பு அணுக்களின் உற்பத்தியைக் குறைத்துச் சோகை நோயையும் உருவாக்குகிறது. மது கணையத்தில் உள்ள செல்களை உறுத்தி வீங்கச் செய்கிறது. இதனால் செரிமான நீர்கள் செல்ல முடியாமல் தடுக்கப்படுகின்றது.

இரசாயனங்கள் சிறுகுடலுக்குள் செல்ல முடியாததால் கணையத்தையே ஜீரணிக்க ஆரம்பித்து மிகக் கடுமையான 'ஹெமொராஜிக்பான் கிரிடிடிஸ்' எனப்படும் நோயை ஏற்படுத்துகிறது. மது குடிப்பவர்களை இந்நோய் தாக்கினால் ஐந்தில் ஒருவர் முதல் தாக்குதலிலேயே மரணமடைகிறார். இந்த நோய் கணையத்தைச் சேதப்படுத்தி இன்சுலின் தட்டுப்பாட்டை உண்டாக்கி நீரிழிவைத் தோற்றுவிக்கும். மது கல்லீரலின் செல்களில் எரிவூட்டி வீங்கச் செய்து சிறுகுடலை நோக்கிச் செல்லும் சிறுகுழாயை அடைகிறது. இதனால் கல்லீரலினால் பித்த நீர் வடிக்கப்படுவது தடைப்பட்டு மஞ்சள் காமாலை நோய் ஏற்படுகின்றது.

கடைசியில் கல்லீரலை ஈரலரிப்பு நோய் தாக்குகின்றது. குடிக்காதவர்களைவிட, குடித்தவர்களின் கல்லீரல் எட்டு மடங்குகூடினமாகி விடும். இதயத்தின் தசைகளை வீங்கச் செய்து நச்சுத் தன்மையை ஏற்படுத்துகிறது. கொழுப்பை ஒரே இடத்தில் குவியச் செய்து ஊன்ம ஆக்கச் சிதைவு மாறுபாடுகள் சரியாக நடைபெறாமல் செய்கிறது.

மேலும், மூத்திரப்பையின் உட்சுவரைப் பாதித்துச் சரியாக விரியாமல் செய்து நீர்ப்பிரித்தளின் திரவ விரயம் ஏற்படுத்துகின்றது.

மதுவினால் புரோஸ்டிரேட் சுரப்பிகள் வீங்கி - ஆண்களின் உடலுறவுத் தன்மையை மோசமாகப் பாதிக்கின்றது. மற்றும் மூளையின் முக்கியப் பகுதிகளைப் பார்த்து இணைத்துச் செயல்படாமல் தடுத்து குழப்பம் ஏற்பட்டு தொடர்புகளைத் துண்டித்து மூளையின் செயல்பாட்டை மந்தப்படுத்தி மயக்க நிலையை நீட்டித்து மரணத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் இம்மதுவிற்கு அடிமையாகி மரணமடைவதைத் தவிர்க்க வேண்டும்.

'குடி குடியைக் கெடுக்கும்' என்பதுடன் 'மது மரணத்தைக் கொடுக்கும்' என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

மது அருந்துபவர்கள் மதுவின் தீமைகளை அறிந்து திருந்துவார்களானால், மதுவினால் ஏற்படும் மலிவான மரணங்களை தவிர்க்கலாம்.



# திட்டக்குழு உறுப்பினர் பெற்ற இணையற்ற கௌரவ விருது!

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட தமிழக அரசின் திட்டக்குழு உறுப்பினர்களில் புகழ்பெற்ற முடநீக்கியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். நடராஜன் ஒருவராவார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதியில் பிறந்து - மதுரையில் படித்து - சென்னையில் மருத்துவத்துறையில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்கி ஓய்வு பெற்றுள்ள இவருக்கு அண்மையில், இணையற்ற சிறப்பு விருது ஒன்று கிடைத்திருக்கிறது.

1950-இல், இங்கிலாந்தில் உள்ள லிவர்பூல் பல்கலைக் கழகத்தில் படித்து எஃப்.ஆர்.சி.எஸ்., பட்டம் பெற்ற இவரை இவருடைய பொதுச் சேவைக்காக The Royal College of Surgeons of England என்ற அமைப்பானது பாராட்டி, கௌரவ எஃப்.ஆர்.சி.எஸ். பட்டமளித்துச் சிறப்பித்திருக்கிறது!

இந்தியா-ஜப்பான் இராணுவ மருத்துவமனை, சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னைப் பொது மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை ஆகியவைகளிலெல்லாம் - மருத்துவராகவும், பேராசிரியராகவும், முதல்வராகவும் இருந்து 1976-இல் ஓய்வுபெற்றவர் டாக்டர் எம். நடராஜன். இப்போது பல அமைப்புகளில் முடநீக்கியல் துறை ஆலோசகராக இருப்பவர்.

'1991-92-ஆம் ஆண்டுக்கான இந்தக் கவுரவ விருதானது முடநீக்கியல் துறை மருத்துவச் சிறப்பிற்காக எனக்கும் பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த இதயநோய் மருத்துவ நிபுணரான டாக்டர் அலய்ன் கார்பென்டியர் என்பவருக்குமாக, எங்கள் இரண்டே இரண்டு பேருக்கு மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த யுனிவர்சிடி தொடங்கி இந்த நூறாண்டுக் காலத்தில், அவ் விருதைப் பெறும் இரண்டாவது இந்தியன் - முதலாவது தமிழ்நாட்டுக்காரன் நான்தான்....'

- என்றெல்லாம் பெருமிதத்தோடு கூறிக்கொள்ளும் டாக்டர் எம். நடராஜன் 'எனது இத்தகைய பெருமைக்கும் வளர்ச்சிக்கும் தமிழ்நாட்டு மருத்துவத்துறை பெற்றிருக்கும் வளர்ச்சியும் ஒரு முக்கியக் காரணமாகும்' என்று மனந்திறந்து சொன்னார்.

டென்மார்க், ஒல்ட்டோ, ஜெர்மனி, சிங்கப்பூர், சான்ஃபிரான்சிஸ்கோ, ஜெனீவா, ஆக்ஸ்போர்டு, மணிலா, பிலிப்பைன்ஸ், இங்கிலாந்து போன்ற பல இடங்களுக்கும் அழைப்பின்பேரில் பறந்து போய்ப் பல மருத்துவக் கருத்தரங்குகளில் பங்கேற்றுச் சிறப்பித்த புகழும் - சிறந்த தமிழ்ப் புலமையும் பெற்றவர் திட்டக்குழு உறுப்பினரான டாக்டர் எம். நடராஜன். இணையற்ற எஃப்.ஆர்.சி.எஸ். கௌரவ விருது அவருக்குக் கிடைத்ததில் தமிழக மருத்துவத்துறையே பெருமைப்படலாம்தானே!

- பி.எல்.ஆர்.

---

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, சிகாகோ கான்சலேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ள திரு. கே.ஆர். சின்கா அவர்கள் சந்தித்தார் (11.8.'92).



# காவிரிப் பாசனப் பகுதியில் எண்ணெய்ப் பனை அறிமுக ஆராய்ச்சி!

- சுப. இராமநாதன், பெ. நளாயினி, அ. ஷேக் தாவூத், அ. அப்துல் கரீம்,
ஒருங்கிணைந்த எண்ணெய்ப்பனை ஆராய்ச்சித் திட்டம், ஆடுதுறை.

நமது நாட்டில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி தற்போதுள்ள தேவையைவிட மிகக் குறைவாக இருப்பதால் பெருமளவில் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. எண்ணெய் உபயோகத்தைப் பொறுத்த மட்டில் நமது நாட்டில் நபர் ஒருவரால் ஆண்டு ஒன்றுக்கு 5 கிலோ எண்ணெய் மட்டுமே உபயோகப் படுத்தப்படுகிறது.

இது, மேலை நாடுகளில் உபயோகிப்பதைவிட சுமார் ஆறில் ஒரு பங்கு மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களில் இருந்து கிடைக்கின்ற எண்ணெய் அளவை ஒப்பிடுவோமேயானால் சராசரியாக நிலக்கடையில் இருந்து ஏக்கருக்கு 150 கிலோ எண்ணெயும், எள்ளிலிருந்து 36 கிலோ எண்ணெயும் ஆமணக்கு என்கிற கொட்டைமுத்துவிலிருந்து 89 கிலோ எண்ணெயும், சூரிய காந்தியிலிருந்து 162 கிலோ எண்ணெயும் கிடைக்கிறது.

உலகிலேயே எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இந்தியா முன்றாவது இடத்தையும், நிலக்கடலை மற்றும் எள் உற்பத்தியில் முதலிடத்தையும் வகித்தும் தனி மனிதர் ஒவ்வொருவரும் உபயோகிக்கும் எண்ணெயின் அளவு மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கு மிக முக்கியக் காரணம் தொன்றுதொட்டுப் பழக்கத்தில் இருந்துவரும் மேற்கூறிய எண்ணெய் வித்துப் பயிர்களின் சாகுபடியும் எண்ணெய்ப் பனை போன்ற எண்ணெய்ச் சத்து மிகுந்த பயிர்களின் அறிமுகமின்மையுமே யாகும். தற்போதுள்ள எண்ணெய் வித்துப் பயிர்கள் பெருமளவில் மானாவாரிப் பகுதிகளில் தகுந்த இரசாயன உரமோ நுண்ணுயிரோ இடாமலே பயிரிடப்படுவது மகசூல் குறைவதற்கான மற்றொரு காரணம். எனவே, தமிழ்நாட்டில் எண்ணைய்ப் பனைச் சாகுபடியை அறிமுகப் படுத்தும் நோக்கத்துடன் இப்பயிர்ச்

மூன்றாண்டு எண்ணெய்ப்பனை



சாகுபடி பற்றிய ஆய்வுகள் ஆடு துறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் 1989-ஆம் ஆண்டி லிருந்து நடைபெற்று வருகின்றன.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் மானாவாரிப் பயிராக வளர்ந்து வந்த எண்ணெய்ப் பனையின் சிறப்பு அம்சம், எந்த எண்ணெய் வித்துப் பயிரிலும் இல்லாத அளவு எண்ணெய் உற்பத்தியாகும். எண் ணெய்ப் பனையிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஏக்கரில் 1,600 கிலோ முதல் 2,400 கிலோ வரை எண்ணெய் பெற முடிகிறது. இந்தியா வில் தற்போது கேரள மாநிலத்தில் 9,000 ஏக்கரிலும் அந்தமான் தீவு களில் 4,500 ஏக்கரிலும் எண் ணெய்ப் பனை பயிர் செய்யப்பட்டு வருகிறது.



எண்ணெய் எடுப்பதற்கு உகந்த முற்றிய பழங்கள்

**சாகுபடிக் குறிப்புகள்**

எண்ணெய்ப் பனைக்கு உகந்த வெப்பநிலை 20 டிகிரி செ. முதல் 35 டிகிரி செ. வரை ஆண்டிற்கு 2,000 - 2,500 மி.மீட்டர் மழை பரவலாக உள்ள பகுதிகளில் வளரும் தன்மையானதாக இருந் தாலும், 4 மாதங்கள் வரை வறட்சி நிலவும் பகுதிகளிலும் சூழ்நிலை யைத் தாங்கி வளரும் திறன் கொண் டது. கோடையில் பாசன வசதி அவ சியம் தேவை. பெரும்பாலும் எல்லா வகையான மண் வளத்திலும வளரக் கூடிய தன்மையுடையது.

பனைக் குடும்பத்தைச் சேர்ந்த இந்த எண்ணெய்ப் பனையில் 3 ரகங்கள் உள்ளன. அவை 1. டுரா 2. பிஸிஃபெரா 3. டெனிரா ஆகிய வையாகும்.

டெனிரா ரகம் முதல் இரண்டு ரகங்களையும் கலப்பு செய்து பெறப் பட்ட வீரிய ஒட்டு ரகமாகும். எண் ணெய்ப் பனை நடவுக்கு முக்கோண முறையில் கன்றுக்குக் கன்று இடை வெளி 9 மீட்டர் இருத்தல் அவ சியம். இவ்வாறு நடவு செய்தால் ஒரு ஏக்கருக்கு 60 கன்றுகள் வரை நடலாம். பருவ காலங்களில் அதாவது மே, ஜூன் மாதங்களில் நடவு செய்தல் நன்று. நட்ட 3 ஆண்டு களுக்கு, பகுதிகளுக்கு உகந்த ஊடு பயிர் செய்தால், நடைமுறைச் செலவு களை ஈடுசெய்ய முடியும்.

எண்ணைய்ப் பனையின் வேர்ப் பாகத்தைச் சுற்றிலும் எப்போதும் களைகள் இல்லாமல் இருத்தல் அவசியம். இதற்குக் களைக்கொல்லி களை உபயோகப்படுத்தலாம். பெர் னாக்சோன் என்ற களைக்கொல்லியை மட்டும் உபயோகப்படுத்தல் கூடாது.

**உரமிடுதல்**

முதல் ஆண்டில், கன்று ஒன் றுக்கு 400 கிராம் தழைச்சத்து, 200 கிராம் மணிச்சத்து, 400 கிராம் சாம்பல் சத்து, இரண்டாவது ஆண்டு 800 கிராம் தழைச்சத்து 400 கிராம் மணிச்சத்து 800 கிராம் சாம்பல்சத்து மூன்றாவது ஆண்டு முதல் 1200 கிராம் தழை, 600 கிராம் மணி, 1200 கிராம் சாம்பல் சத்து இடவேண்டும். மக்னீசியச் சத்துக்குறைவாக உள்ள அறிகுறிகள் தென்படின் மக்னீசிய உப்பு இட வேண்டும். இந்த உர அளவுகளை இரு பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதி மே மாதத்திலும் இரண்டாம் பகுதி செப்டம்பர் மாதத்திலும் மரத்திலிருந்து 2 மீட்டர் இடை வெளியில் மரத்தைச் சுற்றி அளித் தல் வேண்டும். தழை உரம் மற்றும் மக்கிய தொழுஉரம் அதிக அளவில் இடுவது மிகச் சிறந்தது.

கோடைக் காலங்களில் மரம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 100 லிட்டர் தண்ணீர் அளிக்கப்பட வேண்டும். கோடையில் நீர்ப் பற்றாக்குறை மகசூலைப் பெரிதும் பாதிக்கும்.

**பின்செய் நேர்த்தி**

பாசன நீரைச் சேமிக்கச் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பது சிறந்தது. காய்ந்த மற்றும் பூச்சி நோய் தாக்கிய மட்டைகளையும், பாளைகளையும் முதல் மூன்றாண்டுகளுக்கு அகற்ற வேண்டும். மரம் மகசூலுக்கு வரும் போது 40 மட்டைகளை மட்டும் மரத்தில் வைத்துவிட்டு இதர மட்டை களை அகற்றி விடலாம். அதிக அளவில் மட்டைகளை அகற்றுதலும் மகசூலைப் பாதிக்கும். மரத்தை ஆண்டுக்கு ஒருமுறை சுத்தம் செய்வது கோடைப்பருவத்தில் செய் யப்பட வேண்டிய ஒரு முக்கியமான பின்செய் நேர்த்தியாகும்.

**பயிர்ப்பாதுகாப்பு**

எண்ணெய்ப்பனையை ஆந்த்ராக் நோஸ் எனப்படும் இலைப்புள்ளி நோய், குருத்து அழுகல் நோய், குலை தவறுதல் ஆகியவை தாக்கு கின்றன. இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த டைத்தேன் எம்.45 அல்லது கேப்டான் 20 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து அடிக்கலாம். தாமிர வகை பூஞ்சாணக் கொல்லிகளை உபயோ கப்படுத்தக் கூடாது. குருத்தழுகல் நோயைக் கட்டுப்படுத்த நோயால் தாக்கப்பட்ட கன்றுகளை அழித்து விட வேண்டும். குலை தவறுதல் நோயின் அறிகுறிகள் குலையின் காய்பிடிக்காமல் இருத்தல், குலை

காய்தல், குலை அழுகல் ஆகியன வாகும். இந்த நோய் 20 சதம் வரை பாதிப்பை உண்டாக்கும். இந்த நோய்க்குக் காரணம் அதிக அளவில் மட்டைகளைக் கழித்தல், நீர்ப் பற்றாக்குறை மற்றும் பராமரிப்புக் குறைவு ஆகியவைகளாகும். நோயைக் கட்டுப்படுத்த சிபாரிசுப் படி மட்டைகளைக் குறைத்தல் ஆண் பூக்களை வெட்டி எறிதல், பாசன வசதி செய்தல் ஆகியன அவசிய மாகும்.

தென்னையைத் தாக்கக்கூடிய காண்டாமிருக வண்டு, சிவப்புக் கூன் வண்டு ஆகியன இம்மரத்தை யும் தாக்குகின்றன. அத்துடன் பழுத்த குலையைப் பறவைகள் அதிகம் தாக்குகின்றன. இதைக் கட்டுப் படுத்த வெடிச்சத்தம் ஏற்படுத்துதல், தோட்டத்தின் வெளிப்புறம் இருக் கும் மரங்களில் இறந்த பறவை களைத் தொங்கவிடுதல் ஆகியன செய்யலாம். தவிர, இத் தோட்டத் தில் எலி, முள்ளம்பன்றி, அணில், குரங்குகள் மற்றும் காட்டு நாய் களின் தாக்குதலும் மிகுந்து காணப் படும்.

## சாதனை

**பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப் பில் இந்தியா புதிய சாதனை படைத் துள்ளது. தேயிலை மற்றும் தோட்டப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் 'டைகோஃபோல்' என்ற அதிகத் திறனுள்ள பூச்சிக்கொல்லி மருந்தை இனி இந்தியா சொந்தமாகவே தயாரிக்கும்.**

**உலகில் அமெரிக்காவும், இஸ் ரேலும் மட்டுமே இதுவரை இம் மருந்தைத் தயாரித்தன. அரசு நிறு வனமான இந்துஸ்தான் இன்செக்டி சைட்ஸ் நிறுவனம் தனது ஆராய்ச்சி களின் மூலம் 'டைகோஃபோல்' தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித் துள்ளது. நமக்கு ஆண்டொன்றுக்கு 20 கோடி டன் அளவுக்கு இம் மருந்து தேவைப்படுகிறது. ஆனால், 2 கோடி டன் மட்டுமே கிடைக் கிறது - அதுவும் இறக்குமதி மூலம். இந்நிலை இனி இல்லை. முயற்சி களுக்கு வானமே எல்லை என்ப தற்கு இதைவிடச் சிறப்பான சாட்சி இல்லை!**

**- நன்றி: 'தூவானம்'.**

### அறுவடை

நட்ட 4 ஆண்டுகளில் முதல் அறுவடை செய்யலாம். அறுவடைக் காலத்தில், தோட்டம் தவறாமல் கண்காணிக்கப்பட வேண்டும். குலையிலிருந்து ஓரிரு பழங்கள் கீழே விழ ஆரம்பிக்கும் தருணம் தான் அறுவடைக்கு ஏற்ற பருவம்.

எண்ணெய்ப்பனை மகசூல் பழுத்த குலை எடையிலேயே கணக்கிடப் படுகிறது. ஒரு ஏக்கருக்கு ஆண்டுக்கு 8 முதல் 10 மெட்ரிக் டன்கள் வரை கிடைக்கும். அதிலிருந்து 20 சத விகிதம் அதாவது 1.6 முதல் 2.0 டன்கள் எண்ணெய் பிழியலாம். சராசரியாக ஒரு குலை எடை 30 கிலோ இருக்கும். 100 கிலோ எடையுள்ள குலைகளும் உண்டு. ஒவ்வொரு குலையிலும் 1,000 முதல் 2,000 பழங்கள் வரை இருக்கும் எண்ணெய்ப்பனையி லிருந்து இரு வகையான எண்ணெய் எடுக்கப்படுகின்றது. ஒன்று நார்ப் பகுதியிலிருந்து கிடைக்கும் எண் ணெய் - இரண்டாவது கொட்டைப் பகுதியினுள் உள்ள பருப்பிலிருந்து கிடைக்கும் எண்ணெய்.

### எண்ணெய் பிழியும் ஆலை

ஒரு மணிக்கு 3 டன்கள் குலை களைப் பிழியக் கூடிய சக்தியுடைய ஆலை அமைக்கக் குறைந்தது 500 ஏக்கரில் எண்ணெய்ப்பனை சாகு படி செய்யவேண்டும். குலைகள் அறுவடை செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அறைத்து எண் ணெய் பிழியப்பட வேண்டும். 100 ஏக்கர் வரை இருக்கும் தோட் டங்களுக்கு மனித சக்தியால் இயக் கக் கூடிய ஆலைகளை அமைத்துக் கொள்ளலாம்.

எனவே, நீர்ப்பாசன வசதியுள்ள பகுதிகளில் எண்ணெய்ப்பனை பயிரிடுவதால், நமது நாட்டில் சமையல் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவை விரைவில் காணலாம்.



## எண்ணெய்

**தமிழ்நாட்டின் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் பனங்குடி கிராமத்தில் அமையவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, ஆண்டொன் றுக்கு 5 இலட்சம் டன் எண் ணெயை சுத்திகரிக்கும் திறன் கொண் டதாய் இருக்கும். சென்னை சுத்தி கரிப்பு ஆலை அமைக்கவுள்ள இந் தத் தொழிற்சாலைக்குச் சமீபத்தில் தான் மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இதை நிறுவு வதற்கு ரூ.155 கோடி தேவைப் படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதர வாயுக்களிடமிருந்து சமையல் வாயுவைப் பிரித்தெடுக்கும் வசதி யும், அவற்றை நறுமணப்படுத்தும் வசதிகளும் பனங்குடி ஆலையில் ஏற்படவுள்ளது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 15,000 மில்லியன் டன் சமையல் வாயு, ப்ரோ பேன் 1,600 மில்லியன் டன், திரவ வடிவில் இயற்கை வாயு 6,000 மில்லியன் டன் கிடைக்கும்.**

**எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1996-97) பெட் ரோலியப் பொருட்களுக்கான நமது வருடாந்திரத் தேவை 79 மில்லியன் டன் அளவை எட்டக்கூடும். இது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 102 மில்லியன் டன் அளவை நெருங்கக்கூடும். தேவை யைக் கூடிய மட்டிலும் உள்நாட்டு உற்பத்தியை வைத்தே சமாளிக்கும் நோக்கோடு அரசு பல திட்டங் களைத் தீட்டி, செயலாற்றி வரு கிறது.**

# கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி





**வெ**ள்ளை ஏகாதிபத்தியம் வீழ்த்தப்பட வேண்டுமானால், அவர்கள் இங்கே காலூன்றக் காரணமான வியாபாரத்துறையை முதலில் நாம் கைப்பற்றியாக வேண்டும் என்ற ஓர் ஒப்பற்ற திட்டத்தை முதலில் வகுத்த பெருமையாளர்தான் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார். இந்த உயரிய நோக்கத்தோடுதான் 'சுதேசி கப்பல் கம்பெனி'யைத் துவக்கினார் இவர்.

இன்றைய சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில், உலகநாதப்பிள்ளை-பரமாயி அம்மாள் தம்பதியினருக்குப் பிறந்தவர் தான் வ.உ. சிதம்பரனார். 5.9.1872-இல் பிறந்தவரான இவர், இளமைக் காலக் கல்வியை ஒட்டப்பிடாரத்தில் முடித்தார். தனது மகன் ஆங்கிலக் கல்வி பெறுவதற்காகவே இவருடைய தந்தையார் ஒட்டப்பிடாரத்தில் ஓர் ஆங்கிலப்பள்ளி நிறுவினார். அதன் பின்னர் இவருடைய படிப்பு தூத்துக்குடியில் தொடர்ந்தது. சேவியர் உயர் நிலைப் பள்ளியிலும், கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியிலும் படித்து வந்த வ.உ.சி. தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரும்புலமை மிக்கவரானார்.

23-வது வயதில், திருச்செந்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் மகள் வள்ளியம்மைக்கும் வ.உ.சி.-க்கும் திருமணம் நடந்தேறியது. தம்முடைய சுயசரிதையை மட்டுமல்ல; மாண்புறக் குடும்பம் நடத்திய தனது

முதல் மனைவியைக் குறித்தும் 'வள்ளியம்மை சரித்திரம்' என்ற அரிய கவிதை நூலை ஆக்கிய பெருமையாளர் இவர்.

சிதம்பரனாரின் பாட்டனாரும், பெரிய தந்தையாரும், தந்தையாரும் வழக்கறிஞர்களாகத் தொழில் புரிந்தோர் ஆவர். அந்த வேட்கை இவரையும் ஆட்கொண்டது. திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வி பயின்று 1895-ஆம் ஆண்டு வாக்குவல்லமை மிகுந்த வழக்கறிஞர் ஆனார்.

ஒட்டப்பிடாரத்திலேயே வழக்கறிஞர் தொழில் தொடங்கினார் வ.உ.சி. பரம்பரை பரம்பரையாக வழக்கறிஞர் தொழில் நடத்தும் குடும்பத்தார் ஆகையால், அந்நாளில் அவ்வீடு 'வக்கில் ஐயா வீடு' என்றே ஊர்மக்களால் குறிப்பிடப்பட்டது.

நமது வ.உ. சிதம்பரனார், குற்றவியல் துறையில் நிகரற்ற வழக்கறிராகத் திகழ்ந்தார். ஐந்தாண்டுக்குப் பின் இவருடைய வழக்கறிஞர் தொழில் தூத்துக்குடியிலே தொடரலாயிற்று. நேர்மையின் நிலைக்கலனாக விளங்கிய இவரிடமிருந்த வாதத்திறமையால் வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. இதனால் பொருளாதார மேம்பாடு இவருக்கு உண்டாயிற்று.

இந்த நிலையில், 1901-ஆம் ஆண்டில், மனைவி வள்ளியம்மை இயற்கை எய்தினார். பிறகு சில காலத்தின்பின், உற்றார் உறவினர் வலியுறுத்தலின் பேரில் முதல் மனைவியின் குடும்பத்தைச் சேர்ந்த மீனாட்சியம்மையை மணம் முடித்துக்கொண்டார். நான்கு ஆண் மக்கள், நான்கு பெண் மக்கள் இவருக்கு.

தலைசிறந்த பேச்சாற்றல் மட்டுமல்ல; இணையற்ற எழுத்தாற்றலும் இவருக்குண்டு. அதன் காரணமாகவே 'விவேகபானு' என்ற மாத இதழ் வ.உ.சி.-யால் தொடங்கப்பெற்றது.

'தமிழ்நேஷனல்', 'இந்து நேசன்' ஆகிய பத்திரிகைகளும் இவரால் நடத்தப்பட்டன. மெய்யறிவு, மெய்யறம், எனது பாடல் திரட்டு, வ.உ.சி. கண்ட பாரதி சுயசரிதை போன்ற நூல்களையும் எழுதினார். தமிழ்ப் புலமை மிக்கவர் ஆதலால் இன்னிலை, திருக்குறள், சிவஞானபோதம் ஆகியவற்றுக்கு உரை எழுதினார். தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், சிவஞானபோதம் ஆகிய நூல்களைப் பதிப்பித்தார்.

சமூக சீர்திருத்தக் கொள்கைகளிலே இவருக்கிருந்த நாட்டம் மகத்தானது. 'தீண்டாமை நமக்கு வேண்டாமே' என்று பேசுவதோடு மட்டும் நின்றுவிடாமல் சகஜானந்தா என்ற பிற்பட்ட வகுப்பினரையும், இராமையா தேசிகர் என்ற ஒடுக்கப்பட்ட வகுப்பினரையும், தம் வீட்டிலேயே ஆதரித்து அன்பு காட்டி வந்தவர் வ.உ. சிதம்பரனார்.

சைவ சித்தாந்த சபை, மதுரைத் தமிழ்ச் சங்கம், வாலிபர் சங்கம், பிரம்ம சங்கம் போன்ற பல சங்கங்களில் உறுப்பினராக மட்டும் அல்ல; கைத்தொழில் சங்கம், தருமசங்கம் ஆகியற்றைத் தோற்றுவித்த சிறப்பும் சிதம்பரனாருக்கு உண்டு.

விவேகானந்தர் மடத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணானந்தரின் சந்திப்பு, வ.உ.சி.-யின் உள்ளத்தில் சிறிது சிறிதாக சுதந்திரக் கனல் மூட்டியது.

'மேலைக்கடல் முழுவதும் கப்பல் விடுவோம்' என்ற பாரதியின் கனவை நனவாக்கிட 'சுதேசிக் கப்பல் கம்பெனி 10 இலட்சம் ரூபாய் பங்கு முதலீட்டில் துவங்கப்பட்டது. மதுரை தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரைத்தேவர் இதற்குத் தலைவராகவும், வ.உ.சி. செயலாளராகவும், சி. விஜயராகவாச்சாரியார் சட்ட ஆலோசகராகவும் பொறுப்பேற்றார்கள். வெள்ளையர் வியாபாரம் இதனால் சற்று நொடித்தது.




## வ.உ.சி. கையெழுத்து

இந்தக் காரணத்தால், சிதம்பரனாரை எப்படியும் ஒடுக்கியே தீர்வது எனக் கருதிய ஆங்கிலேய அரசினர் பலவகையிலும் தொல்லை கொடுக்கலாயினர்.

திலகரையே தம் குருவாகக் கொண்டு தேசியம் வளர்ப்பதில் தீவிரம் காட்டலானார் வ.உ.சி. மகாகவி பாரதியாரும் சொல்வல்லார் சுப்பிரமணிய சிவாவும் இந்திய விடுதலைப் போரில் இவரோடு தோளோடு தோள் நின்றார்கள்.

1905-இல், திருநெல்வேலியில் இவரால் 'தேசாபிமானிகள் சங்கம்', 'ஜன சங்கம்' ஆகியவை உருவாக்கப்பட்டன.

வேகமும் நுணுக்கமும் மிக்க இவருடைய சொற்பெருக்கு நாடெங்கும் மக்களை எழுச்சிமயமாக்கவே, வெள்ளையராட்சி வெகுண்டெழுந்தது. அப்போதிருந்த திருநெல்வேலி கலெக்டர் விஞ்சுதுரை தூண்டுதலால் அரசாங்கமே சிதம்பரனார் மீது பேசியும், எழுதியும் நாட்டின் அமைதியைக் குலைத்தார் என்று வழக்குத் தொடுத்தது.



## கல்வி

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில், ஒன்பது முதல் 45 வயதுக்குட்பட்டவர்களில் எத்தனைப் பேர் எழுத்தறிவில்லாமல் உள்ளனர் என்பது குறித்து ஓர் ஆய்வு நடத்தப் பட்டது. அதில் 5,06,243 பேர் எழுத்தறிவின்றி உள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 1,79,172 பேர் ஆண்கள், 3,27,071 பேர் பெண்கள். இதில் 1,65,196 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பையும், 19,586 பேர் மலை வாழ் வகுப்பையும் சார்ந்தவர்கள். இந்த மாவட்டத்தில் தொடங்கப் பட்டிருக்கும் முழு எழுத்தறிவு இயக கத்தின் மூலம் இவர்கள் கல்வி பெறுவார்கள்.

## பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி

தமிழ்நாட்டில் 100 அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் தொடங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் மகளிர் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு நடப்புக் கல்வி யாண்டில் (1992-93) 100 அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் 12-ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பெண்களுக்காக இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும். இந்த வகுப்பு களில் முப்பது மாணவியர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர். இம் மாணவியர் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பட்டயத் தேர்வுக்காகப் பயிற்சி பெறுவர்.

மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இப்பயிற்சியினைத் தருவார்கள். நிலம் மற்றும் கட்டட வசதிகள் உள்ள அரசினர் மகளிர் மேல் நிலைப் பள்ளிகளில் மட்டுமே இந்தப் பயிற்சி வகுப்புகள் தொடங் கப்படும்.

---

வழக்கு முடிவில் - வ.உ. சிதம்பரனாருக்கு 40 ஆண்டுக் கால ச் சிறைத்தண்டனை விதிக் கப்பட்டது. கோயம்புத்தூர் சிறைச்சாலையில் அடைக்கப் பட்ட இவர், மிகவும் கொடுமைப் படுத்தப்பட்டார். கொடிய வெள்ளையர் அங்கே, வ.உ.சி.யை எண் ணெய்ச் செக்கு இழுக்கச் செய்து பெரும் இன்னலுக்கு ஆளாக்கினார்கள்.

இதற்கிடையில் 'சுதேசிக் கப்பல் கம்பெனி' ஆங்கி லேயர் சூழ்ச்சியால் சீர் குலைந்து போன செய்தியும் சிதம்பரனார் நெஞ்சத்தில் வேல் பாய்ச்சுவதாக வந்தது.

இந்திய விடுதலைப் போரில், இன்னுயிரும் துச்ச மென முழுமூச்சோடு இறங்கி யதன் காரணமாக 35-ஆம் வயதில் அடைக்கப்பட்ட சிங்கத் தமிழர் சிதம்பரனார், 1912- ஆம் ஆண்டு டிசம் பரில் விடுதலை செய்யப் பட்டார்.

சிறைக்குள்ளிருந்த காலத் திலேயே மிகவும் நோய்வாய்ப் பட்டு நலிந்த வ.உ.சி., விடுதலை பெற்று வெளியே வந்தபின் - பழைய வேகத் தோடு சுதந்திரப் போரில் ஈடு பட இயலாத நிலை, வறுமை அரவணைக்க, வழக்கறிஞர் தொழிலும் நடத்த வகையின்றிச் சென்னை வந்து சேர்ந்தார். அரிசி-நெய் வாணிபம் செய்து வாழ்க்கை நடத்த முயன்றார். அதுவும் இயலாத நிலையில் மீண்டும் கோவில்பட்டியிலும் தூத்துக்குடியிலும் வழக்கறிஞர் தொழிலைத் தொடர முயன்று தோற்றார். நலிந்த நிலை யிலேயே தூத்துக்குடியில் 18.11.1936- இல் 'தென் னாட்டுத் திலகம்' எனப் போற்றப்பட்ட வ.உ.சிதம்பர னாரின் இன்னுயிர் பிரிந்தது.

அன்னாரின் சுடர்வீசிய சுதந்திர உணர்வுக்குப் பெரும் மதிப்பளிக்கும் வகையில் - தமிழக அரசு 1986 அக்டோபர் 19-ஆம் நாள் ஒட்டப்பிடாரத் தில் வ.உ. சிதம்பரனார் பிறந்த இல்லத்தை அரசுடை மையாக - நினைவு இல்லமாக மாற்றியது. சிதம்பரனார் மாவட்டம் அமைத்துச் சிறப் பும் செய்திருக்கிறது தமிழ்நாடு அரசு.

மத்திய அரசு அன்னாரின் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

சென்னைத் துறைமுகத் தின் முன்னால், சிலை உரு வாகி நிற்கும் வ.உ.சிதம்பரனார், தன்னலம் கருதாமல் பொது நலமே கருதிப் பாடுபட்ட தியாக சீலராவார்.

['பூவழகி பதிப்பக வெளி யீடான 'கட்டபொம்மன் முதல் காந்தியார் வரை' நூலிலிருந்து.]



# விலங்கினங்களின் புற்றுநோய் ஆய்வில் புதிய முன்னேற்றங்கள்

இந்தியக் கால்நடை நோய்க்குறியியல் வல்லுநர் சங்கமும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமும் இணைந்து "விலங்கினங்களின் புற்றுநோய் ஆய்வில் புதிய முன்னேற்றங்கள்" என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றை ஆகஸ்டு 6-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தின.

இத்தகைய கருத்தரங்கை முதன்முறையாக, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நோய்க்குறியியல் துறை நடத்தியது. இத்துறை, நீண்டகாலமாகப் புற்றுநோய் ஆய்வில் ஈடுபட்டு, கால்நடைப் பணியாளர்கட்கு, புற்றுநோய் அறிதலில் புதிய உத்திகளை அளித்து வருகிறது.

புற்றுநோய், மனிதர்களைப் போலவே, கால்நடைகளையும், பறவைகளையும் கொடூரமாகத் தாக்கவல்லது. கால்நடைகள் மற்றும் பறவைகளில் ஏற்படும் புற்றுநோயால் பெருத்த பொருளாதாரச் சேதம் பண்ணையாளர்கட்கு உண்டாகிறது. மாடுகளில் இரத்தப் புற்றுநோய், 'சைனஸ்' புற்றுநோய் முதலியனவும், பறவைகளில் 'லிம்பாய்ட்' புற்றுநோயும் குறிப்பிடத்தக்கன. புற்றுநோய் ஆய்வுத்துறையில், அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள், இவ்வகைப் புற்றுநோய்களின் இயல்புகள் குறித்து அறிவதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

முதன்முதலில் "புற்றுநோய்த் தடுப்பூசி" கோழிகளுக்கு ஏற்படும் 'மேரக்ஸ் நோயிற்கு' எதிராகவே தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவைபோன்ற தடுப்புமுறைகளைப் பெற, ஆய்வக விலங்கினங்களில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் ஆய்வுகளே வழிகோலும். மேலும் ஆய்வக விலங்கினங்கள், மனிதப் புற்றுநோய்களுக்குத் தகுந்த மாதிரிகளாக விளங்குகின்றன.

இந்தியக் கால்நடை நோய்க்குறியியல் வல்லுநர் சங்கம் 'புற்றுநோய் ஆய்வு' என்ற தலைப்பிட்டு பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தும் பெருமையினை, இந்தியாவின் முதல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளது. இக்கருத்தரங்கில், இந்தியா மற்றும் உலகின் பலவேறு நாடுகளிலிருந்து சுமார் 150 புற்றுநோய் வல்லுநர்கள் கலந்து கொண்டனர். புற்றுநோய் ஆய்வின் புதிய பரிமாணங்களையும், முன்னேற்றங்களையும் வல்லுநர்கள் தங்களுக்கிடையே பரிமாற்றம் செய்து கொள்ள இக்கருத்தரங்கு வழிவகுத்துள்ளது. இக்கருத்தரங்குகள் மூலம், கால்நடைகளின் புற்றுநோயினால் ஏற்படும் பொருளாதார இழப்பினை ஈடுகட்ட வழிமுறைகளை உருவாக்க இயலும்.

மனிதர்களுக்கு ஏற்படும் புற்றுநோயைக் களைய விலங்கினங்களில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் ஆய்வுகளே வழிகோலும். ஆதலால், இக்கருத்தரங்கு மனிதர்களின் இக்கொடிய நோய்கள் தீர ஏற்ற புதிய அணுகுமுறைகளை முன் வைக்கும் என நம்பப்படுகிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர். வி. ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கினை, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ். சண்முகசுந்தரம் அவர்கள் தொடங்கி வைத்து விழா மலரை வெளியிட்டார். விழா மலர் முதல் பிரதியை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொதுமேலாளர் திரு. கே.எம். நாராயணன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர். பி. ரிச்சர்ட் மாசிலாமணி அவர்களின் திருவுருவப் படத்தினை, கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் டாக்டர். எஸ். பி. அன்புமணி அவர்கள் திறந்துவைத்து அவருக்குப் புகழஞ்சலி செலுத்தினார்.

முன்னதாக இந்தியக் கால்நடை நோய்க்குறியியல் வல்லுநர் சங்கத்தின் தலைவர் டாக்டர். எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக விலங்கியல் சுகாதார கல்வி மைய இயக்குநர் டாக்டர். வேணுகோபாலன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

—ஜே. சந்திரன்



அந்நியச் செலாவணி ஈட்டும்

# ஆமணக்கு

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் வீரத்தின் விளைநிலம்... ஆனால் வேளாண்மைக்கு, வானம் பார்த்த பூமி, நல்ல வளமான செம்மண் நிறைந்துள்ள பூமி, எனவே, இம் மண்ணுக்கேற்ற விளைபொருட்களைத் தேர்வு செய்து, விவசாயம் செய்வதில் இம்மாவட்ட வேளாண்துறை ஆர்வம் காட்டிவருகிறது.

இதன் முதற்படியாக இம்மாவட்டத்தில் எளிதில் சாகுபடி செய்யக் கூடியதும், மானாவாரி நிலத்திற்கு ஏற்றதும், வறட்சியைத் தாங்கக் கூடியதுமான ஒரு பணப்பயிரை, அதிலும் அந்நியச் செலாவணி ஈட்டும் சக்தி பெற்ற பயிரைப் பயிரிடும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளோம். அந்தப் பயிரின் பெயர்தான் ஆமணக்கு!...

இம் மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களிலும் இப்பணப்பயிரைப் பயிர் செய்ய வைப்பதன் முக்கியத்துவத்தை விவசாயப் பெருங்குடி மக்களிடையே கருத்தரங்கு, கண்காட்சி, விளக்கக் கூட்டங்கள் நடத்திப்பரப்பி வருகிறது இம் மாவட்டம். இந்த 'ஆமணக்கின்' மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் கணக்கிட்டால் நமக்கு ஆச்சரியமே மேலோங்குகிறது. ஆம்... இதோ பாருங்கள் பட்டியலை!...

1. மசகிற்கு
2. மருத்துவத்திற்கு
3. சோப்பு செய்திட
4. கிரீஸ் தயாரிக்க
5. மெட்டல்சோப் செய்ய
6. பிரேக் எண்ணெய்
7. பெயிண்டு தயாரிக்க
8. செயற்கை மரப்பலகை
9. மெழுகு தயாரிக்க
10. அழகுச் சாதன பொருட்கள்
11. ஒட்டுப் பொருட்கள்
12. அச்சு மை தயாரிக்க
13. ஸ்நோ தயாரிக்க
14. நைலான் தயாரிக்க
15. தொழிற்சாலைக் கரைபொருள்
16. பிளாஸ்டிக் தயாரிக்க
17. லூப்ரிகேசன் ஆயில் தயாரிக்க இது பயன்படுகிறது.

தமிழ்நாட்டில் ஆமணக்குப் பயிர் சுமார் 27,000 ஏக்கரில் பயிரிடப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 4,200 மெ.டன் ஆமணக்கு விதை உற்பத்தி செய்யப்படுகிறது. ஆமணக்கு விதையில் 50 முதல் 52 சதவிகிதம் வரை எண்ணெய்ச்சத்து உள்ளது. ஆமணக்கு எண்ணெய் அதிகக் குளிரிலும் உறையாது. முக்கியமாக ஆகாய விமானங்களின் இயந்திரங்களுக்கு 'லூப்ரிகேசன்' எண்ணெயாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆமணக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்வதன்மூலம் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தருகிறது.

### சாகுபடி முறைகள்

ஆமணக்குப் பயிரை இறைவையிலும், மானாவாரியிலும், தனிப் பயிராகவும், கலப்புப் பயிராகவும், ஊடு பயிராகவும், வரப்புப் பயிராகவும், பயிரிடலாம். தமிழ்நாட்டில் பெரும்பாலும் ஆமணக்கு மானாவாரியில் கலப்புப் பயிராக நிலக்கடலை, சிறுதானியங்களுடன் பயிர் செய்யப்படுகிறது. கரும்பு, பருத்தி, மிளகாய் ஆகிய வற்றுடன் வரப்புப் பயிராகப் பயிரிடலாம். மானாவாரிப் பயிரை சூலை முதல் நவம்பர்-டிசம்பர் மாதங்களிலும், பாசனப் பயிரை டிசம்பர்-ஜனவரி முதல் சூன்-சூலை மாதங்களிலும் பயிர் செய்யலாம்.

ஆமணக்குப் பயிருக்கு வண்டல் கலந்த செம்மண் பூமி சிறந்தது. களர் அமிலத் தன்மை உள்ள நிலத்தைத் தவிர்க்கவும் வடிகால் வசதி அவசியம் இருக்கவேண்டும்.

### நிலம் தயாரிப்பும், அடியுரமும்

ஆமணக்குப் பயிர் செய்வதற்கு முன்னால் ஓரிரு மழைக்குப்பின் நிலத்தை நன்றாகப் பண்படுத்தி உழவு செய்ய வேண்டும். பின்பு ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இட்டு ஒருமுறை உழவு செய்ய வேண்டும். ஆமணக்குப் பயிருக்கு ஏக்கருக்கு 12 கிலோ தழைச்சத்து, 6 கிலோ மணிச்சத்து மற்றும் 6 கிலோ சாம்பல்சத்து கொடுக்கக்கூடிய இரசாயன உரங்கள் அடியுரமாக இடவேண்டும்.

ரெ. இராவணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
சிவகங்கை

**விதையும், விதைப்பும்**

ஆமணக்கினைத் தனிப்பயிராகச் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 4 கிலோ விதை தேவைப் படும். கலப்புப் பயிராகப் பயிரிட்டால் ஏக்கருக்கு 2 கிலோ விதை போதுமானது. நீண்டகால இரகங்களான டிஎம்வி.1, டிஎம்வி.2, டிஎம்வி.3 மற்றும் எஸ்.ஏ.1 இரகங்களுக்கு 90.90 செ.மீ. இடைவெளியில் விதைக்கவேண்டும்.

குறுகியகால இரகங்களான எஸ்.ஏ.2, டிஎம்வி.4 மற்றும் டிஎம்வி.5 இரகங்களை 60-45 செ.மீ. இடைவெளியில் தனிப்பயிராக விதைக்க வேண்டும். கலப்புப் பயிருக்கு 30 செ.மீ. முதல் 45 செ.மீ. வரை இடைவெளி தேவை.

**பின்செய் நேர்த்தி**

விதைத்த 10-வது நாளில் 20 மணிநேரம் நீரில் ஊறவைத்த விதையைக் கொண்டு இடைவெளியை நிரப்பவேண்டும். விதைத்த 15 அல்லது 20 நாட்களில் செடிகளைக் கலைத்து தேவையான எண்ணிக்கை மட்டும் இருக்கும்படி செய்ய வேண்டும். வரிசைக்கு இடைவெளியில் ஜூனியர்ஹோ கருவியால் களை எடுக்கவேண்டும். செடிகள் நன்கு வளர்ந்து இடைவெளி மூடும் வரை இந்த இடை உழவு அவசியம்: விதைத்த 20 முதல் 25 நாட்களில் முதல் களையும் பின்பு 20 நாட்கள் கழித்து இரண்டாவது களையும் எடுப்பது நல்லது.

**பயிர்ப் பாதுகாப்பு**

ஆமணக்கில் முக்கியமாக இலைப்புழு தாக்குதல் விதைத்த 45 முதல் 55 நாட்களில் காணப் படும். இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு மாலத்தியான் 50 சதவிகிதம் இ.சி. 800 மி. அல்லது பென்தியான் 100 சதவிகிதம் இ.சி.400 மி. அல்லது நனையும் செவின் 800 கிராம் இதில் ஏதாவது ஒன்றினைத் தெளிக்க வேண்டும். இம்மருந்தினை 2 அல்லது 3 முறை தெளிக்க வேண்டி இருக்கும்.

பயிர் சிலந்தி தாக்குதல் காணப்பட்டால் நனையும் கந்தகம் ஏக்கருக்கு 600 கிராம் தெளிக்க வேண்டும். மானாவாரியில் இலைப்புழுக்களைக் கட்டுப்படுத்த பி.எச்.சி. 10 சதவிகிதம் அல்லது என்டோசல்பான் 4 சதவிகிதம் தூள் மருந்தினை ஏக்கருக்கு 10 கிலோ தூவவும். காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்த பூக்கும் தருணத்திலிருந்து இலைப் புழுக்களுக்கு தெளிக்கும் மருந்தையே 20 நாட் களுக்கு ஒருமுறை தெளிக்கவேண்டும்.

**அறுவடை**

ஆமணக்கின் குலையில் இரண்டு அல்லது மூன்று காய்கள் காய்த்திருப்பின் அந்தக் குலையை அறுவடை செய்யலாம். ஆமணக்கில் இரண்டு அல்லது மூன்று முறை அறுவடைசெய்ய வேண் டும். முற்றிய குலைகளை அறுவடை செய்து காய வைத்து விதை எடுக்கும் கருவி அல்லது தடியால் அடித்து விதையைப் பிரித்து எடுக்க வேண்டும். விதைகளை மூன்று நாட்களுக்கு நன்றாக வெயி லில் காயவைத்துப் பிறகு சேமிக்கவேண்டும்.



கல்வி என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல; வாழ்க்கையின் முதன்மையை முழுமையை, முழுவதுமாக உணர்ந்து கொண்டு சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான்

**சாகுபடி செலவினம் தோராயமாக ஏக்கருக்கு**

| | |
|---|---|
| 1. நிலம் தயாரித்தல் | — ரூ.260 |
| 2. விதை 4 கிலோ | ரூ.40 |
| 3. விதை நேர்த்தி மருந்து | — ரூ.2 |
| 4. விதைக்க ஆகும்செலவு | — ரூ.200 |
| 5. உரம் தொழுஉரம் 10 வண்டி | — ரூ.250 |
| தழைச்சத்து 12 கிலோ— 26 கிலோ யூரியா | — ரூ.83 |
| மணிச்சத்து 6 கிலோ 38 கிலோ சூப்பர் | — ரூ.48 |
| சாம்பல் சத்து 6 கிலோ 10 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஸ் | — ரூ.17 |
| 6. களை எடுத்தல் | — ரூ.120 |
| 7. பயிர்ப் பாதுகாப்பு | — ரூ.300 |
| 8. அறுவடை மற்றும் இதர செலவினம் | — ரூ.150 |
| மொத்தம் | ரூ.1,470 |

**வரவினம்:**

**மகசூல் (தனிப்பயிரானால்)**

ஏக்கருக்கு — 300 கிலோ முதல் 400 கிலோ (350 கிலோ)

| | |
|---|---|
| வரவு—கிலோ 10 ரூபாய் வீதம் | ரூ.3,500 |
| செலவு | — ரூ.1,470 |
| ஏக்கருக்கு நிகர லாபம் | — ரூ.2,030 |

**ஊடுபயிர் மற்றும் வரப்புப்பயிர்ச் சாகுபடி செய்வதால் வருமானம்:**

**செலவு:**

| | |
|---|---|
| ஏக்கருக்கு விதை 2 கிலோ | — ரூ.20 |
| விதைப்பு செய்ய செலவு | — ரூ.20 |
| அறுவடை மற்றும் சுத்திசெய்யும் செலவு | — ரூ.60 |
| மொத்தம் | ரூ.100 |

**வரவு:**

| | |
|---|---|
| மகசூல் ஏக்கருக்கு 100 கிலோ சராசரி கிலோ ரூ.10 வீதம் | ரூ.1000 |
| செலவு | — ரூ.100 |
| ஏக்கருக்கு நிகர லாபம் | ரூ.900 |

நம் நாட்டில் இல்லாத வளம் இல்லை. இருக் கின்ற செல்வத்தில் எதை எப்படிப் பயன்படுத் தினால், அது நாட்டுக்கும், நமக்கும் நல்லது என்று ஆய்ந்து அதன்படி செயலாற்றிப் பணி புரிந்தால் நாம் வளர்வோம்! நாடும் வளம்பெறும்!

# தொழிலாளர் நலம் பெறட்டும்!





இல. பழனியப்பன்

உழைப்பின் பெருமையினை உள்ளபடி சொல்வதென்றால்
உண்மைக்கு மறுபெயரே உழைப்பென்பார் சான்றோர்கள்
சலிப்பில்லா உழைப்பாலே சாதனைகள் கைகூடும்!
சன்மார்க்க நெறியினிலே வேதனைகள் மறைந்தோடும்!

இன்றைக்குத் தொழிலாளர் இருக்கின்ற நிலைமையினை
இதமாகப் படம்பிடித்து நாமிங்கே கண்டிடுவோம்!
என்றைக்கும் 'குடி'யோடு இன்ப'மது' காணுவதால்
எத்தனையோ குடியிங்கு அடியோடு சாய்ந்ததன்றோ!

எத்தனையோ திட்டங்கள் இந்நாட்டில் வந்தபின்னும்
இல்லாமைகோலோச்சக் காரணமேன் தோழர்களே!
முத்தான உழைப்பதனை மூலதனம் ஆக்கிவிட்டால்
இத்தரையில் பொற்காலம் இனிதே மலர்ந்துவிடும்!

உற்பத்தி வளர்ந்தோங்க உழைப்பே உயிர்நாடி!
உலகின் நலன்காட்டும் ஒழுங்கான கண்ணாடி!
கற்பித்த கல்வியுடன் கவினுழைப்பும் சேர்ந்துவிட்டால்
கட்டாயம் இந்நாட்டில் கவலைகள் பறந்தோடும்!

தொழிலாளர் நலம்பெற்றால் சமுதாயம் மேன்மையுறும்!
தொடராக மக்களுக்குப் பெரும்நன்மை கூடிவரும்!
எழிலான வாழ்க்கைநிதம் ஏற்றமுடன் தேடிவரும்!
ஏற்றத் தாழ்வுகளும் எங்கோ போய்மறையும்!

நிர்வாகம் தொழிலாளர் நேர்மையுடன் இணைந்திட்டால்
நிச்சயமாய்த் தொழிலுறவு நீங்காது நிலைத்திருக்கும்
புதுவேகம் இந்நாட்டில் பூரிப்பாய் வந்துவிடும்!
புத்துணர்வு நம்மனதில் பூத்துக் குலுங்கிநிற்கும்!

கடமையும் உரிமையும் கண்களாய்க் கொண்டவரே
கனிவான தொழிலாளர் என்றிடுவார் நண்பர்களே!
உடைமை கருதாமல் ஓரணியில் இணைந்திருப்பின்
உலகத்தில் தொழிலாளர் உயர்ந்திடுதல் நிச்சயமே!





# மாம்பழத்தின் கதை

உலகில் பயிரிடப்படும் ஆறு மிக முக்கியப் பழவகைகளில் மாம்பழமும் ஒன்று. இந்தியாவுக்கே சொந்தமான இந்த மாம்பழம் சுமார் 4000 ஆண்டுகளுக்கும் மேலாக நமது நாட்டில் பயிரிடப்பட்டு வருகிறது.

தற்சமயம் நமது நாட்டில் பயிரிடப்படும் பழவகைகளில் 42 சதவிகிதப் பரப்பில் மாம்பழமே பயிர் செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 9.5 மெட்ரிக் டன் மாம்பழங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இது நமது நாட்டில் உற்பத்தியாகும் மொத்த பழவகைகளில் சுமார் 40 சதவிகிதம் ஆகும். இனிய சுவையும், உயர்ந்த நறுமணமும் கொண்ட மாம்பழத்தில் வைட்டமின் ஏ மற்றும் சி அடங்கியிருப்பதால் இது அனைவராலும் விரும்பி உண்ணக்கூடிய ஒரு பழமாகும்.

**மாம்பழ உற்பத்தியில் இந்தியா**

உலகில் சுமார் 63 நாடுகளில் மாம்பழம் உற்பத்தி செய்யப்பட்டாலும், உலகிலேயே இந்தியாவில்தான் மிக அதிக அளவில் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது, உலகில் தயாராகும் மாம்பழங்களில் 60 சதவிகிதத்துக்கு மேல் நமது நாட்டில் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவிற்கு அடுத்த படியாக மெக்சிகோ, பாகிஸ்தான், தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகள் மாம்பழங்களை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன.

**மாம்பழ வகைகள்**

பழவகைகளிலேயே மாம்பழம் ஒன்றுதான் பலவகைகளில் (Varieties) உற்பத்தி செய்யப்படுகிறது. நமது நாட்டில் 41 இனங்களில் சுமார் 360 வகை மாம்பழங்கள் விளைகின்றன. இவற்றில் சுமார் 20 வகை பழங்களே வணிக ரீதியில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நமது நாட்டில் விளையும் மாம்பழ வகைகளில் மிக முக்கியமானவை நீலம், அல்போன்சோ, பேகம் பள்ளி, லங்ரா, தேசரி, பாதாமி போன்றவைகளாகும்.

இந்தியாவில் மாம்பழப் பருவம் பொதுவாக மார்ச் மாதம் தொடங்கி ஜூலை மாதம் முடிவடையும். இவற்றில் தென்னகத்தில் விளையும் அல்போன்சோ, மதராஸி போன்ற ரகங்களே முதலில் அங்காடிகளுக்கு விற்பனைக்கு வருகின்றன. இந்த ரகங்கள் பிப்ரவரி மாதம் நடுவிலேயே விற்பனைக்குத் தயாராகி விடுகின்றன. உத்தரப்பிரதேச மாநிலத்தில் விளையும், தேசரி, லாங்ரா போன்ற ரகங்கள் ஏப்ரல் மாதம் இறுதியில் விற்பனைக்குத் தயாராகி ஜூலை மாதம் இறுதி வரை கிடைக்கும்.

**மாம்பழ ஏற்றுமதி**

உலகில் உற்பத்தியாகும் மாம்பழங்களில் சுமார் 60 சதவிகிதம் இந்தியாவில் விளைந்தாலும் உலக அளவில் நமது மாம்பழ ஏற்றுமதி 10 சதவிகிதத்துக்கும் குறைவே ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் 36 கோடி ரூபாய் மதிப்புள்ள 25 ஆயிரம் மெட்ரிக் டன் எடையுள்ள மாம்பழங்கள் இந்தியாவிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

தொன்றுதொட்டு மேற்காசிய நாடுகளே நமது நாட்டிலிருந்து அதிக அளவில் மாம்பழங்களை இறக்குமதி செய்கின்றன. இதிலும் குறிப்பாக ஐக்கிய அரசு குடியரசு சிற்கே பெருமளவில் மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்துடன் பிரிட்டன், கனடா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் சிறிய அளவில் மாம்பழங்கள் நமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சில கடுமையான விதிமுறைகளின் காரணமாக, உலகின் மிகப் பெரிய விற்பனை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு நமது நாட்டிலிருந்து மாம்பழங்களை ஏற்றுமதி செய்ய முடிவதில்லை. மாம்பழங்களைப் பக்குவப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் நமது நாட்டில் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

இந்தியாவிலிருந்து தற்சமயம் சுமார் 1000 மெட்ரிக் டன் அளவுக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் மாம்பழம் ஏற்றுமதியாகின்றது. ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டன் தான் அதிக அளவில் நம்மிடமிருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்கிறது. இதைத் தொடர்ந்து பிரான்சு, ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் நமது மாம்பழங்களுக்கு முக்கிய வியாபாரத் தலங்களாகும். தற்சமயம் இந்தியா மார்ச், ஏப்ரல் ஆகிய இரு மாதங்களில் சுமார் 1000 மெட்ரிக் டன் அளவுக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் மாம்பழங்களை ஏற்றுமதி செய்கிறது.

**மாம்பழ உற்பத்தி**

நமது நாட்டில் ஆண்டுக்கு 9 முதல் 10 மெட்ரிக் டன் வரை மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தியாவில் அநேகமாக எல்லா மாநிலங்களிலும் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றில் உத்திரப் பிரதேசம் 34.27 சதவிகிதமும், ஆந்திரப் பிரதேசம் 19.09 சதவிகிதமும், பீகார் மாநிலம் 13.44 சதவிகிதமும், ஒரிஸ்ஸா மாநிலம் 8.22 சதவிகிதமும் உற்பத்தி செய்கின்றன.

**- பத்திரிகைத் தகவல் அலுவலகம்.**



மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள்- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (24.8.92).



மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, மாண்புமிகு மொரிசியஸ் நாட்டுக் கல்வி மற்றும் விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு. ஆறுமுகம் பரசுராமன் அவர்கள் சந்தித்தார் (24.8.92).



# வாழவைத்த தெய்வங்களே வாழ்க!

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் எழுதித் தயாரித்த ''வாழ வைத்த தெய்வங்களே வாழ்க'' என்ற மதுவிலக்குப் பிரச்சார ஒலி நாடா வெளியீட்டு விழா 25.8.92 அன்று சென்னை தேனாம்பேட்டை காமராசர் நினைவு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ''வாழ வைத்த தெய்வங்களே வாழ்க'' என்ற மதுவிலக்குப் பிரச்சார ஒளி நாடாவினையும் ''திராவிட சக்தி'' என்னும் நாட்டிய நிகழ்ச்சியின் ''ஒலி நாடா'' வினையும் வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார்.

இந்நாடாக்களின் முதல் பிரதிகளை சட்டப்பேரவைத் தலைவர் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தயாரித்த ''வாழவைத்த தெய்வங்களே வாழ்க'' - ஒளி நாடா அரங்கத்தில் ஒளி பரப்பப்பட்டது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் எழுதி, திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் அவர்கள் தயாரித்தளித்த ''திராவிட சக்தி'' என்னும் நாட்டிய நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. மாணவ மாணவியர்கள் பங்கு கொண்ட இந்த நாட்டிய நிகழ்ச்சி அனைவரது கண்ணையும் கருத்தையும் வெகுவாகக் கவர்ந்தது.

அமைச்சர் பெருமக்களும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், செய்தியாளர்களும், ஏராளமான பொதுமக்களும் வருகைதந்து சிறப்பித்த இந்நிகழ்ச்சியின் இறுதியில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ.அரங்கநாயகம் அவர்கள் நன்றி நவின்றார்.

—விழாத் தொகுப்பு: என். இளங்கோ

**முதல் அட்டை:**

**இந்தியாவின் 46-ஆம் விடுதலை நாள் விழாவினையொட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையிலுள்ள கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியேற்றி வைத்துச் சிறப்புரையாற்றினார் (15.8.'92).**

**நான்காம் அட்டை:**

**இந்தியாவின் ஒன்பதாவது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேதகு டாக்டர் சங்கர்தயாள் சர்மா அவர்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் புதுடெல்லியில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார் (17.8.'92).**

# பரிபூரண மதுவிலக்குக் கொள்கை

## மாண்புமிகு முதல்வர் உரை

இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மனித சமுதாயத்தில் மிகக் கொடுமையான கேடு எனக் கருதப்படும் மது அரக்கனை, வேரோடு வீழ்த்திடும் முயற்சி, பன்னெடுங்காலமாகவே பண்பாளர்கள் பலராலும் தொடரப்பட்டு வருகிறது. ''இது ஓர் சமுதாயக் கொடுமை; இதனை விரட்டுவது என்பது, வெள்ளையர்களை விரட்டுவதைவிட வேகமாக நடக்க வேண்டியது'', என அண்ணல் காந்தியடிகள் விரும்பினார். மதுப்பழக்கம் அறவே அற்ற நாடென்ற பேற்றினை, இந்திய நாடு முழுமையாகப் பெற வேண்டும் எனக் கனவு கண்டார். அதுவே அவரது லட்சிய ராமராஜ்யம் என்ற நோக்கத்தோடு, இடையறாத மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

''உண்ணற்க கள்ளை.....'' எனக் கறாராகக் 'கள்ளுண்ணாமை' அதிகாரம் தந்த வள்ளுவர் பிறந்த மண், நம் தமிழ் மண் என்கிற காரணத்தால், மற்றெந்த மாநிலங்களை எல்லாம் விட, நம் தாயகமாம் தமிழகத்தில், 'மதுவிலக்கு' பரிபூரணமாய்க் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. மது போதையோடு தள்ளாடுபவன், மனிதனாகக் கருதப்படவே கூடாதவன் என்னும் அளவுக்கு, மதுப்பழக்கம் வெறுக்கப்பட்டு வந்தது.

எனவே தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற தருணத்தில், மதுவிலக்குக் காரணமாக அரசுக்கு ஏற்பட்டு வந்த நிதி இழப்பைச் சுட்டிக்காட்டியபோது, ''எத்தனைக் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், அதன் காரணமாக மதுவிலக்கைக் கைவிட மாட்டேன்'' எனத் திட்டவட்டமாக அறிவித்தார்.

அண்ணாவின் வழித்தோன்றலும் அவரது இதயக்கனியுமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், அந்த நெறியிலிருந்து மாறுபாடின்றி, கடுமை காட்டி வந்தார். அவருடைய அரசியல் வாரிசென, உங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள, உங்கள் சகோதரியான நானும், அந்நன்னெறி வழியினின்று, துளியும் பிறழா நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறேன்.

மது மயக்கம் என்பது இம்மியும் இல்லா, பரிபூரண மதுவிலக்கு மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிடும் இலக்கினைக் கொண்டே, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். பரிபூரண மதுவிலக்குக் கொள்கையில், அழுத்தமான பிடிப்பினைக் கொண்டிருந்த, இத்தனை தலைவர்கள் தோன்றி, இக் கொள்கைக்கெனக் குரல் கொடுத்து வந்தும் கூட, இன்றைக்கு மதுவினை முழுமையாக ஒழிக்க முடியாமைக்கு, அடிப்படைக் காரணம் என்னவென்பதைத் பலரும் அறிந்திருக்கிறீர்கள்.

நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆண்ட வரை, மதுவென்பது என்னவென்றே அறியாதிருந்த ஒரு தலைமுறைக்கு மதுவை அறிமுகப்படுத்தி - சாராயம், கள், பிராந்தி, விஸ்கி - என என்னென்ன தீமைகள் இருந்ததோ, அத்தனை போதைப் பொருள்களையும் தங்கு தடையின்றி விற்பனை செய்து, இத் தலைமுறையினையே கெடுத்து நாசமாக்கிய பெருமை, அண்ணாவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த கருணாநிதியையே சாரும். அவரால் புகுத்தப்பட்டு, கெடுத்து நாசமாக்கப்பட்ட, ஓர் சமுதாய அமைப்பைச் சீர்திருத்த, அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, எவ்வளவு சிரமமாய் இருந்தது என்பதையும் அனைவரும் அறிவீர்கள்.

மதுவிலக்குச் சட்டங்களை மிகக் கடுமையாக்கிய அவரே, அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையை எதிர்நோக்கினார். எனவே, சிறிது காலம், தற்காலிகமாய் மதுவிலக்கைத் தளர்த்தி, பின்னர், படிப்படியாக நடைமுறைப்படுத்தும் நோக்கில், முதலில் கள், சாராயக் கடைகளை அடியோடு மூடினார்.

ஆனால் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதைபோல், புரட்சித் தலைவருக்குப் பின்னர், ஒரு தலைமுறையையே கெடுத்த கருணாநிதி, மீண்டும் ஆட்சிக்கு வந்த காரணத்தால், தன் பழைய பாணியை விட, கொஞ்சம் கூடுதலாகவே மது அரக்கனை ஆரத் தழுவத் தொடங்கினார். முன் எப்போதும் இல்லாத அளவுக்குத் தமிழகத்தில், மலிவு விலை மதுக் கடைகளை காண நேரிட்டது.

சென்ற பொதுத் தேர்தலின் போது, தமிழகம் எங்கும் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது, ஆங்காங்கு தாய்மார்கள் கண்ணீரும் கம்பலையோடும், என்னிடம் முறையிட்ட முதல் கோரிக்கையே, ''அம்மா; இந்தப் பாவிகள் திறந்த சாராயக் கடைகளை நீங்கள் தான் மூட வேண்டும்'' என்ற கோரிக்கை ஆகும். எனவே தான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்த உடன், நான் போட்ட முதல் கையெழுத்தே, கருணாநிதியின் மலிவு விலை மதுக்கடைகளை மூடும் கையெழுத்துதான் என்பதைத் தமிழகமே அறியும்.

மலிவு விலை மதுக்கடைகளை மூடியவுடன் எல்லோரும் நினைத்தது, கள்ளச்சாராயம் பெருக்கெடுத்து ஓடும் என்பதாகும். ஆனால் அதனைத் தடுக்கவும் ஓர் வழி கண்டுபிடித்து, மலிவு விலை மதுக்கடைகள் மூடப்பட்ட அதே வேளையில், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் - விற்போர் - கடத்துவோர் அனைவரையும் கண்காணித்துத் தடுக்கும் பொறுப்பு, காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுடையதாகும் - மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்து, தமிழகம் முழுவதும் கள்ளச் சாராயம் கட்டுப்படுத்தப்பட்டதையும் அறிவீர்கள்.

இத்தனை நடவடிக்கைகளுக்குப் பின்னரும் கூட, பூரண மதுவிலக்கு என்ற நம் இலக்கை எய்த முடியவில்லையே என்ற ஏக்கம், எனக்கு இல்லாமல் இல்லை. என் ஒரே கையெழுத்தால், கருணாநிதி புகுத்திய மலிவு விலை மதுக்கடைகளைத் துரத்த முடிந்தது. ஆனால் கருணாநிதியால் கெடுக்கப்பட்ட, மது என்பதையே என்னவென்று அறியாதிருந்த ஓர் இளம் தலைமுறையினையே திருத்தி, மதுப்பழக்கத்தில் இருந்து விடுபடச் செய்வது என்பது, ஒரு கையெழுத்தால், அல்லது ஓர் அரசாங்கச் சட்டத்தால், முடியாதென்றே கருதுகிறேன். சட்டத்தால் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டாலும், அதன் பாதிப்பு, ஏழை எளியோர் மற்றும் அப்பாவி மக்கள் மீது, மிக அதிகமாய் இருந்திடும் என்றும் கருதுகிறேன். எனவே, இன்றைக்கு மலிவு விலை மதுக்கடைகளை மூடிய கையோடு, மதுப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுவிட்ட ஓர் சமுதாயத்தையே திருத்தி, அதிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

என் தலைமையில் அமைக்கப்பட்டு - பல்வேறு சான்றோர்கள், கல்விமான்கள், சமூக சேவகர்கள், கலை உலகத்தினர் ஆகியோர் இடம் பெற்றுள்ள மதுவிலக்குப் பிரச்சார உயர் மட்டக்குழு,

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம், தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சி நிதி நிறுவனத்தின் சார்பில் ரூ.25 இலட்சம்- மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களால் நேரு விளையாட்டரங்கச் சீரமைப்புக்கான நிதியாக வழங்கப் பட்டது (21.8.92).**



ஏற்கெனவே பல முடிவுகள் மேற்கொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அரசின் மூலம் 'வெளிச்சம்' என்னும் நாடகம் ஒன்று தயாரிக்கப்பட்டது. 'நீங்க நல்லா இருக்கனும்' என்னும் திரைப்படமும், மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கெனத் தயாராகி வருவதையும், அது தமிழக மக்களின் கவனத்தை விரைவில் கவர்ந்து, ஓர் நல்வழிப் பாதையில் அவர்களை நடத்திச் செல்லஉள்ளது என்பதையும் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவின் கொடுமைகளை, தீமைகளை, மக்களுக்கு எடுத்து விளக்கி, மது என்பது உடலுக்கும், உள்ளத்திற்கும் தீங்கு விளைவிப்பது மட்டுமல்லாமல், ஓர் சமுதாயத்தையே நாசப்படுத்தும் அளவுக்கு, வீட்டுக்கு வீடு தீங்கு விளைவிப்பதாகும் என்ற கருத்தை, மக்கள் மனதில் வேரூன்றச் செய்யும் முயற்சிகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வழியில் சிறந்த சிந்தனையாளரும், சீர்திருத்த நோக்கம் கொண்டவருமான, கல்வி அமைச்சர் டாக்டர் அரங்கநாயகம் அவர்கள் எழுதித் தயாரித்துள்ள, 'வாழ வைத்த தெய்வங்களே, வாழ்க' என்னும் இப்பிரச்சார கேசட், இப்போது வெளியிடப்பட்டது.

இத்தகைய பிரச்சாரங்கள் மூலம், மதுப்பழக்கத்திற்கு ஆளானோர் மனதில், ஓர் மாற்றத்தை உருவாக்க முடியும்; மதுவை அடியோடு கண்ணுக்குத் தெரியாத தூரம் வரை, துரத்த முடியும் என்ற நம்பிக்கையோடு, இம்முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்கள் நம்பிக்கை ஈடேறும்; இதில் வெற்றி காண்போம் என்ற உறுதி எங்களுக்கு உண்டு. 'மது அரக்கனை வீழ்த்தி - பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினோம்', என்ற திக்கு நோக்கி, விரைந்து செல்லும் நம் பயணத்தில், ஓர் மைல் கல்லாக அமையும் இக்கேசட்டை, மெத்த மன ஆறுதலுடன் வெளியிடுகிறேன்.

இந்தச் சிறப்புக் கேசட்டை வெளிக்கொணர்ந்துள்ள கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள், தமது பல்வேறு பணிகளுக்கு இடையே, எப்படி இந்த மதுவிலக்குப் பிரச்சாரக் கேசட்டை எழுதி தயாரித்தார், என்பதை எண்ணிப் பார்த்து வியக்கின்றேன். மதுரை வெற்றி மாநாட்டிற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர், அவர் என்னைச் சந்தித்தபொழுது, தான் உருவாக்கும் 'திராவிட சக்தி' என்ற நாட்டிய நாடகதை, மாநாட்டில் அரங்கேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நானும் முடிந்தால் அரங்கேற்றலாம் என்று சொன்னேன். இந்த நாட்டிய நாடகத்தை, எப்படியும் மாநாட்டில் சிறப்பாக அரங்கேற்ற வேண்டும், என்ற ஒரே குறிக்கோளுடன், இரவு பகல் என்று பாராது, தான் விமானத்தில் பயணம் செய்யும் பொழுதும், இடைவிடாது எழுதி முடித்து, சிறப்பாக அதனைத் தயாரித்து, மதுரை மாநாட்டிலேயே அவர் அரங்கேற்றினார்.

பத்தே நாட்களில் இந்த நாட்டிய நாடகம் தயாரிக்கப்பட்டது. இந்த வேகத்திற்கு ஈடு கொடுப்பது போல, மிகக்குறுகிய கால அவகாசத்தில், சிறப்பாக இசை அமைத்துக் கொடுத்த, திரு எல். வைத்தியநாதன் அவர்களையும், நடனம் அமைத்துக் கொடுத்த திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் அவர்களையும், எவ்வளவு பாராட்டினாலும் தகும். அது மட்டுமல்ல, இதிலுள்ள மற்றொரு சிறப்பிற்குரிய அம்சம் என்னவென்றால், இந்த நாட்டிய நாடகத்தில் பங்கு பெற்ற அத்தனை நடனமணிகளும், கல்வி பயின்றுவரும் மாணவிகள் ஆகும்.

இந்த இளம் மாணவிகள், மிகுந்த ஈடுபாட்டுடன், இரவு பகல் என்று பாராது, பயிற்சி பெற்று, ஒரு சில நாட்களில் இந்த நாட்டிய நாடகத்தைச் சிறப்புற, வெற்றிகரமாக நடத்தி இருக்கிறார்கள். அவர்களுடைய கலை ஆர்வத்திற்கும், நினைவாற்றலுக்கும், நம் இயக்கத்தின் மீது அவர்கள் கொண்டிருக்கும் பிடிப்பிற்கும், மதிப்பிற்கும், அவர்களுடைய இந்தக் கடும் உழைப்பே சிறந்த எடுத்துக்காட்டாகும். எனவே, தங்களது குடும்ப நிகழ்ச்சி போல் எண்ணி, இவ்வளவு ஆர்வத்துடன் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியையும், மனமுவந்த பாராட்டுக்களையும் வழங்குவதோடு, அவர்களது எதிர்காலம் ஒளிமயமாக அமைய வேண்டும் என்பதற்கான என் வாழ்த்துக்களையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி அமைச்சர் அன்பு அண்ணன் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் ஒரு அமைச்சர் மட்டுமல்ல; ஒரு அரசியல்வாதி மட்டுமல்ல; அவர் ஒரு தலை சிறந்த கலைஞர்; புலமை மிக்க கவிஞரும் கூட. இதனை நாம் இப்போது கண்டுகளித்த 'திராவிட சக்தி' நாட்டிய நாடகத்திலிருந்து, உணர்ந்து கொள்ள முடியும். தம்முடைய திறமையையும், அறிவையும், நாட்டு மக்களின் நலனுக்காகவும், நமது இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும், அர்ப்பணித்துக் கொண்டுள்ள அவரை, நான் மனதாரப் பாராட்டுகின்றேன். அவரது இச்சீரிய முயற்சிகளுக்கு என் சார்பாகவும், கழக உடன் பிறப்புகள் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் எல்லா வளமும் பெற வேண்டும்; இது போன்ற அவரது முயற்சிகள் மேலும் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்தி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**(25.8.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கேசட் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை.)**

**அறிவு**

**இராமநாதபுரம் மாவட்டத்தில் முழு எழுத்தறிவு இயக்கம் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, எழுத்தறிவு இல்லாத 10 முதல் 45 வயதிற்குட்பட்ட சுமார் 2.50 இலட்சம் பேர் பயன்பெறுவார்கள். இதற்காக மாவட்ட அறிவொளி இயக்கம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.20 இலட்சம் முன்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.**

# ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி



வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து மனுக் கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 570 நபர்களைத் தேர்ந்தெடுத்து 24.8.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வேலூரிலிருந்து அரசு செலவில் வாகனங்களில் சென்னைக்கு அழைத்துவரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாக, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நிதி உதவித் திட்டத்தின்கீழ், 77 பெண்களுக்குரூபாய் 3 இலட்சத்து 85ஆயிரம் நிதி உதவியும், கலப்புத் திருமண நிதியுதவி 14 பெண்களுக்கும், 29 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும், 7 விதவைப் பெண்களின் மகள்களுக்குத் திருமண நிதி உதவியும், இருவருக்கு அனாதைத் திருமண நிதி உதவியும், 10 பேர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும், 11 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், 5 நபர்களுக்குச் சவரப் பெட்டிகளும், 20 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும், 10 நபர்களுக்குக் காதொலிக் கருவிகளும் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் தொழில் தொடங்க 20 நபர்களுக்கு ரூபாய் 45 இலட்சம் மூலதன மானியமாகவும், தாட்கோ தொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ், 12 பேர்களுக்கு ரூபாய் 15 இலட்சம் கடன் உதவியும், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 12[illegible] பெண்களுக்கு மானியத்துடன் கூடிய கடனாக ரூ 19.48 இலட்சமும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 28 நபர்களுக்கு ரூ.1.7 இலட்சம் கடனுதவியும், டிரைசம் பயிற்சி பெற்ற 26 நபர்களுக்குக் கடனுதவியும், சாண எரிவாயுத் திட்டத்தின் கீழ் 35 பேர்களுக்கு ரூ.2.96 இலட்சம் கடனுதவியும் வழங்கப்பட்டது.

கள்ளச்சாராயம் காய்ச்சி பின்னர் மனம் திருந்திய 7 பேர்களுக்கு மறுவாழ்வுக் கடனுதவியும், கூட்டுறவு வங்கி மூலமாகச் சிறுதொழில் தொடங்க 12 நபர்களுக்கு ரூ.7.55 இலட்சம் கடனுதவியும், மாநில நிலவள வங்கி மூலமாக 4 பேர்களுக்கு ரூ.6 இலட்சம் கடனுதவியும், 10 நபர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனக் கருவிகளும், 15 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களும், நலிந்தோர் நல உதவி 10 நபர்களுக்கும், விபத்து நிவாரண நிதி 9 பேர்களுக்கும் வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சரின் கர்நாடகத் தமிழர் நிவாரண நிதியாக, 6 நபர்களுக்கு ரூ.1.4 இலட்சமும், இருதய அறுவைச் சிகிச்சைக்காக ஒருவருக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்பட்டது.

மொத்தம் 570 நபர்களுக்கு ரூ.1,22,48,200 (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தெட்டு ஆயிரத்து இருநூறு மட்டும்) பெறுமானமுள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இதில் 386 நபர்கள் பெண்களாவர்.

இதுதவிர, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 11 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக ரூபாய் 1 இலட்சத்து 92 ஆயிரத்து 500 நிதி உதவியும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

ஆக மொத்தம் ரூபாய் 1,24,40,700 (ஒரு கோடியே இருபத்து நான்கு இலட்சத்து நாற்பது ஆயிரத்து எழுநூறு) மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்று குழந்தைகளுக்கு, ராமச்சந்திரன், கண்ணம்மா, ராஜலட்சுமி என்று பெயர் சூட்டினார்.

கொடைக்கானலில் காட்டுத் தீயைத் தவிர்க்க

# ரூ. 32 இலட்சத்தில் திட்டம்

**கொ**டைக்கானல் வனப் பகுதியில் ஆண்டுதோறும் காட்டுத் தீயினால் நூற்றுக் கணக்கான எக்டேர் காடுகள் எரிந்து நாசமாகின்றன இதனைத் தவிர்க்க 31.80 இலட்சம் ரூபாயில் நவீன காட்டுத் தீ தடுப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் வட்டத்தில் 40 சதவிகிதப் பகுதியை உள்ளடக்கியது தான் கொடைக்கானல் வனக் கோட்டமாகும். இக்கோட்டத்தின் பரப்பு 40 ஆயிரத்து 740 எக்டேர். இதில் சீகைத் தோட்டங்கள் 7 ஆயிரத்து 691 எக்டேரிலும், கற்பூரத் தோட்டங்கள் 5 ஆயிரத்து 998 எக்டேரிலும், தைல மரத் தோட்டங்கள் 2 ஆயிரத்து 626 எக்டேரிலும், பைன் மரத் தோட்டங்கள் 2 ஆயிரத்து 626 எக்டேரிலும், ஆல் நேப்பாள பைஸ் தோட்டங்கள் 50 எக்டேரிலும், இலவமரத் தோட்டங்கள் 153 எக்டேரிலும், தேக்கு மரத் தோட்டங்கள் 112 எக்டேரிலும் சோலா மரத் தோட்டங்கள் 181 எக்டேரிலும், வேறு பலவகைத் தோட்டங்கள் 300 எக்டேரிலுமாக மொத்தம் 19 ஆயிரத்து 366 எக்டேரில் உள்ளன.

இவைதவிர 3 ஆயிரத்து 168 எக்டேரில் புல்வெளிகளும், இயற்கைக் காடுகள் 12 ஆயிரத்து 408 எக்டேரிலும், சோலை வனம் ஆயிரத்து 442 எக்டேரிலும், கற்பாறைகள் மற்றும் பாறை சார்ந்த நிலங்கள் 4 ஆயிரத்து 384 எக்டேரிலும், 21 ஆயிரத்து 404 எக்டேர் பரப்பளவு உள்ளது.

தொழில் நிறுவனங்களுக்காகக் கூழ் மரக் கட்டைகளும், சீகை மரப் பட்டைகள் 86 ஆயிரத்து 500 டன் இந்த ஆண்டு வழங்கப்பட உள்ளது. டேன் இந்தியா, சௌத் இந்தியா விஸ்கோஸ், சேஷசாயி பேப்பர் போர்டு, தமிழ்நாடு செய்தித் தாள் நிறுவனம் ஆகியவற்றிற்கு விற்கப் படுகிறது.

டன் 2 ஆயிரத்து 500 ரூபாய் விலையில் 10 ஆயிரத்து 200 டன் சீகைப் பட்டைகளும், சீகை மரக் கட்டைகள் டன் ஆயிரத்து 50 ரூபாய் விலையில் 49 ஆயிரத்து 300 டன்னும், கற்பூர மரக் கட்டைகள் டன் 769 ரூபாய் விலையில் 17 ஆயிரம் டன்னும், பைன்மரக் கட்டைகள் டன் 840 ரூபாய் விலையில் 10 ஆயிரம் டன்னும் சுமார் 10 கோடி ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் 500 எக்டேரில் சீகை மரத் தோட்டங்களும் மர உற்பத்தியும், 350 எக்டேரில் தைல மரத் தோட்டங்களும், பைன் மரத் தோட்டங்களும், கற்பூர மரத் தோட்டங்களும் வனத் துறையால் உற்பத்தி செய்யப்படுகின்றன. சோலை மற்றும் புல்வெளிப் பகுதிகளின் முக்கியத்துவத்தைக் கருதி புதிய பகுதியோ, புல்வெளிப்

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்





**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 538 மனுதாரர்களுக்குப் பல் வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் (21.8.92).**

பகுதியோ தோட்டங்கள் எழுப்பப் படுவதில்லை. புல்வெளிப் பகுதிகள் குறைந்தால் வன விலங்குகளுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவது டன் வனச் சூழலும் கெட்டுவிடும்.

கொடைக்கானல் மலைப் பகுதி யில் ஒவ்வொரு ஆண்டும் காட்டுத் தீ ஏற்படுகின்றது. இதனால் நூற்றுக் கணக்கான ஏக்கர் காடுகள் அழிந்து விடுகின்றன. மரங்கள் எரிவதுடன் அபூர்வ வன விலங்குகளும் அழிந்து விடுகின்றன. கொடைக்கானல் மலைப் பகுதியில் புல்வெளிகள் அதிகமாக உள்ளதும் நெருப்புப் பரவக் காரணமாகிறது. மழை பெய் யாமல் வறட்சி ஏற்படும் காலங் களில் இந்தக் காட்டுத் தீ அதிக அளவில் ஏற்படுகிறது.

இம்மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் கவனமின்றி வீசி எறியும் சிகரெட் துண்டுகள் தீப்பிடிப்பதற்கு முக்கியக் காரணமாகும். கால்நடை மேய்ப்பவர்கள் தங்கள் கால்நடை களுக்குப் புதிதாகத் துளிர்ந்த பசுமைத் தீவனம் வேண்டுமென்பதற் காகக் காடுகளில் உள்ள காய்ந்து போன புல்பூண்டுகளில் தீ வைத்து விடுகின்றனர். காடுகளுக்கு அருகில் உள்ள தோட்டங்களைச் சேர்ந்த வர்கள் தங்கள் தோட்டத்துச் தேவை யற்ற கழிவுகளை எரிப்பதற்காக வைக்கும் நெருப்பும் காடுகளுக்குப் பரவிவிடுகிறது. காடுகளைப் பயிர் செய்யும் நிலங்களாக மாற்ற ஆக்கிர மிப்பாளர்கள் தீ வைத்து விடுகின் றனர். கடந்த கோடையின் போது இப்படி காடுகளுக்குத் தீ வைத்ததாக 45 பேரைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காட்டுத் தீ ஏற்படாமல் தடுப்ப தற்காக ஒவ்வொரு ஆண்டும் தீத் தடுப்புக் கோடுகள் தேவையான இடங்களில் செதுக்கப்படுகின்றன தீத்தடுப்புக் காவலாளிகள் நியமிக் கப்படுகின்றனர். இவையல்லாது, சிறப்புத் தடுப்புக் குழுக்கள் ஏற் படுத்தப்பட்டுள்ளன இருந்தபோதும் காட்டுத் தீ ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை. இதற்காக ரூ.31.80 இலட்சத்தில் நவீன காட்டுத் தீ தடுப்புத் திட்டம் தயார் செய்யப் பட்டு, 91 நவம்பரில் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

கெங்குவார்ப்பட்டி, பேரிஜம், வந்தரேவு, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் காடுகளில் தீப்பிடித் தால் உடனுக்குடன் கொடைக் கானல் அலுவலகத்திற்குத் தகவல் தெரிவிக்க வயல்லெஸ் கருவியுடன் வசதி செய்யப்படும். நவீன வாக னங்கள், தீயணைப்புக் கருவிகள் வசதியுடன் தயாராக இருக்கும் 30 பேர் கொண்ட குழு உடனடியாகத் தீப்பிடித்த இடத்திற்குச் சென்று, தீ மேலும் பரவிவிடாமல் தடுத்து அணைக்கும்.

கொடைக்கானல் மலைப் பகுதி யில் மூன்றரைச் சதவிகிதப் பரப் பில் மட்டுமே சோலை வனங்களும் 30.4 சதவிகிதப் பரப்பில் மட்டுமே இயற்கை வனங்களும் உள்ளன. சோலை வனங்களைப் பாதுகாப்ப தற்காக முள்கம்பி வேலிகளும், செயின் லிங் வேலிகளும் அமைக்கப் பட்டுள்ளன. இதை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் 20 எக்டேரில் சோலை வனம் வளர்க்கப்பட்டு வரு கிறது. இந்த ஆண்டு இது 30 எக்டேராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலகில் 3 இடங்களில்தான் சோலைவனங்கள் உள்ளன. அதில் ஒன்று கொடைக்கானல் மலைப் பகுதி என்பதால், அதைப் பாது காப்பதில் தீவிர கவனம் செலுத்தப் படுகிறது. இந்தச் சோலைவனப் பகுதி அதிகரிப்பதால் வன விலங்கு களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

ஏழை மற்றும் விதவைப் பெண்கள் 200 பேருக்குக் குறைந்த விலையில் மூஞ்சிக்கல், ஏரி ஆகிய இடங்களில் வனத் துறை மூலம் விறகு விற்பனை செய்யப்படுகிறது. காட்டுக்குள் சென்று விறகு வெட்டு வதைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் பாம்பார்புரத் தில் வனத்துறை மூலம் கால்நடைப் பராமரிப்பு மையம் செயல்பட்டு வருகிறது. வனப் பகுதிக்குள் செல்லும் கால்நடைகளுக்கு இங்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. இந்தக் கால்நடைகள் மூலம் வன விலங்கு களுக்கு நோய் ஏற்படுவது தவிர்க்கப் படுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

Black


தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23